# இந்திய அரசியலமைப்பு

- ஆள்பவர்களுக்கும், ஆளப்படுபவர்களுக்கும் (மக்கள்) இடையே தொடர்பு ஏற்படுத்தும் ஆவணம்.

**அரசியலமைப்பு:-**

- அரசியல் முறைகளின் அடிப்படை கோட்பாடுகளை கொண்டது அரசியலமைப்பு
- மக்களாட்சி அரசிற்கு அடிப்படையாக விளங்குவது அரசியலமைப்பு
- அரசியலமைப்பு சட்டத்திற்கு முரணாக நிர்வாகம் (ம) சட்டமன்றம் செயல்பட முடியாது.
- முதன் முதலில் **158** நாடுகளின் அரசியலமைப்பை கொண்டு அரசியலமைப்பை அறிவியல்பூர்வமாக வகைப்படுத்தியவர் **அரிஸ்டாட்டில்**
- அரசியல் அறிவியலின் தந்தை **அரிஸ்டாடடில்** (உயிரியியலின் தந்தை) (விலங்கியலின் தந்தை)

**அரசியலமைப்பின் வகைகள்:-**

**எழுதப்பட்ட அரசியலமைப்பு –written constitution**

- அரசியலமைப்பு சட்டம் எழுத்து பூர்வமாக எழுதப்பட்டு இருக்கும்.
- எ-டு **இந்தியா, USA, பிரான்ஸ், ஆஸ்திரேலியா**
- உலகின் மிக பழமையான எழுதப்பட்ட அரசியலமைப்பு **USA Constitation-**17.09.1787 நடைமுறை

**2. எழுதப்படாத அரசியலமைப்பு- Un written constitution**

- அரசியலமைப்பு சட்டம் எழுதப்படாமல் பாரம்பரிய முறைகளை பின்பற்றி நிர்வாக மேற்கொள்வது ஆகும்.

எ-டு **இங்கிலாந்து , நியூசிலாந்து**

**3. நெகிழும் அரசியலமைப்பு:- flexibitlity constitution**

- எளிதில் திருத்தம் மேற்கொள்ளக்கூடிய அரசியலமைப்பு நெகிழும் அரசியலமைப்பு ஆகும்.

எ-டு **இங்கிலாந்து நியூசிலாந்து**

**4. நெகிழதா அரசியலமைப்பு:- Riyidety constitution**

- எளிதில் திருத்தம் மேற்கொள்ள இயலாத (அ) கடினமான விதிமுறைகளை பின்பற்றி திருத்தம் மேற்கொள்ளபடும் அரசியலமைப்பு ஆகும்.

எ-டு **USA , ஆஸ்திரேலியா. சுவிட்சர்லாந்து**

- உலகின் மிக கடினமான விதிமுறைகளை பின்பற்றி திருத்தப்படும அரசியலமைப்பு **USA** அரசியலமைப்பு

- இந்திய அரசியலமைப்பு சட்டம் நெகிழும் partly flexibitlity (ம) நெகிழா தன்மை Partly rigidity கொண்டது

5. **ஒற்றை ஆட்சி அரசியலமைப்பு: Unetary consti/-**

- ஒரே ஒரு மைய அரசு மட்டும் இருக்கும் (Central govt) அல்லது மைய அரசு, மாநில அரசு இரண்டும் இருந்தால் அனைத்து அதிகாலங்களும் **மைய அரசியிடம்** இருக்கும்

எ-டு **இலங்கை. இங்கிலாந்து. நியூசிலாந்து, பிரான்ஸ் பெல்ஜீயம், ஜப்பான்**

**b. கூட்டாட்சி அரசியலமைப்பு: Federal constitution**

- **பெடரேசன்** என்ற சொல் **பெடஸ்** (FOEDS) (federation) என்ற **லத்தின்** சொல்லிருந்து தோன்றியது
- மாநிலங்கள் ஒன்றிணைவதால் கூட்டாட்சி தோன்றுகிறது
- **கூட்டாட்சி அரசியலமைப்பு பின்வரும் சிறப்பு அம்சங்களை பெற்று இருக்க வேண்டும்.**

1. எழுதப்பட்ட அரசியலமைப்பை பெற்று இருக்க வேண்டும
2. அரசியலமைப்பின் தனி முதல் ஆதிக்கம் பெற்று இருக்க வேண்டும். (Supremacy of the constitution)
3. நெகிழாத அரசியலமைப்பாக இருக்க வேண்டும்.
4. மத்திய அரசு, மாநில அரசு இரு அரசுகள் இருக்க வேண்டும், மத்திய, மாநில அரசுக்கு இடையே அதிகார பகிர்வு இருக்க வேண்டும்.
5. சுதந்திரமான நீதித் துறை இருக்க வேண்டும்.

எ-டு **USA, ஆஸ்திரேலியா. சுவிட்சர்லாந்து**

- இந்திய அரசியமைப்பு ஒரு அரைகுறை கூட்டாட்சி அரசியலமைப்பு (Quasi federal constitution) (ஒற்றை ஆட்சி (ம) கூட்டாட்சி தன்மை)
- இந்திய அரசியலைப்பில் ஒற்றை ஆட்சி தன்மையை விட கூட்டாட்சி தன்மை அதிகம் பெற்று உள்ளது.

## இந்திய அரசியலமைப்பின் வளர்ச்சி

## ஒழுங்கு முறை சட்டம் - 1773

## (Regulation act)

- இந்திய நிர்வாகத்திற்காக இங்கிலாந்து அரசு இயற்றிய முதல் சட்டம். (முதல் எழுத்து பூர்வ சட்டம)
- இது இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் முதல் படி என அழைக்கப்படுகிறது.
- இச்சட்டம் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியை ஒழுங்குப்படுத்த கொண்டு வரப்பட்டதால் ஒழுங்கு முறைசட்டம் என அழைக்கப்படுகிறது.

**முக்கிய அம்சங்கள்:**

- வங்காள கவர்னர் ஜெனரல் என மாற்றப்பட்டது.
- வங்கள கவர்னர் ஜெனரலுக்கு கீழ் பம்பாய் (ம) மெட்ராஸ் கவர்னர்கள் வந்தனர்.
- வங்காள கவர்னர் ஜெனரலின் பதவி காலம் **5** ஆண்டுகளாக நிர்ணயிக்கபட்டது.

- கவர்னர் ஜெனரலுக்கு ஆலோசனை வழங்க **4 பேர்** கொண்ட நிர்வாக குழு (executive council) ஏற்படுத்தப்பட்டது.
- இச்சட்டத்தின் படி **1774**-ல் கல்கத்தாவில் **ஒரு தலைமை நீதிபதி** (ம) 3 நீதிபதிகள் கொண்ட தலைமை நீதி மன்றம் (Supreme court) ஏற்படுத்தப்பட்டது.
- இந்நீதிமன்றத்தின் முதல் தலைமை நீதிபதி **எலிஜா இம்பே**
- இச்சட்டத்தின் படி கிழக்கிந்திய கம்பெனியன் மேற்பார்வை அதிகாரம் இங்கிலாந்து மன்னரிடமிருந்து இங்கிலாந்து பாராளுமன்றத்திற்கு மாற்றப்பட்டது.
  முதல் வங்காள கவர்னர் ஜெனரல் - **ராபர்ட் கிளைவ் 1757**
  கடைசி வங்காள கவர்னர் – வாரன் ஹேஸ்டிங்ஸ
  முதல் வங்காள கவர்னர் ஜெனரல் - வாரன் ஹேஸ்டிங்ஸ்(1773)
  கடைசி வங்காள கவர்னர் ஜெனரல் – வில்லியம் பெண்டிங்
  முதல் இந்திய கவர்னர் ஜெனரல் - வில்லியம் பெண்டிங்(1833)
  கடைசி இந்திய கவர்னர் ஜெனரல் - கானிங் பிரபு
  முதல் இந்திய வைஸ்ராய் - கானி பிரபு
  கடைசி இந்திய வைஸ்ராய் - மௌன்டபேட்டன்
  சுதந்திர இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரல் (அ)சுதந்திர இந்தயாவின் முதல் ஆங்கில கவர்னர் ஜெனரல் மௌன்ட்பேட்டன 1947 – 48
  சுதந்திர இந்தியாவின் 2-வது (ம)கடைசி கவர்னர் ஜெனரல் (அ)சுதந்திர இந்தியாவின் முதல் இந்திய கவர்னர் ஜெனரல் ராஜாஜி (c. ராஜகோபாலாச்சாரியார் 1948-1950)

## பிட் இந்திய சட்டம்: 1784 (pits India Act)

- இச்சட்டம் இங்கிலாந்து பிரதமர் பிட் என்பவரால் கொண்டு வரப்பட்டது.
- இச்சட்டம் ஒழுங்கு முறைச் சட்டத்தின் குறைகளை கலைவதற்காக கொண்டு வரப்பட்டது.

**முக்கிய அம்சங்கள்:**

- ஒழுங்கு முறைச் சட்டத்தில் நியமிக்கப்பட்ட கவானர் ஜெனரல் நிர்வாக குழு உறுப்பினர் எண்ணிக்கை **4-லிருந்து 3** ஆக குறைக்கப்பட்டது.
- இந்திய நிர்வாகத்தை மேற்பார்வையிட இங்கிலாந்திர் இயக்குனர் (ம) கட்டுபாட்டு குழு அமைக்கப்பட்டது (board of control)
- கிழக்கிந்திய கம்பெனியின் வசம் இருந்த பகுதி பிரிட்டிஷ் இந்திய பகுதிகள் என மாற்றப்பட்டது.
- பிட் இநதியச் சட்டம் ஒழுங்கு முறை சட்டத்தின் சில விதிகளையும் நீக்கியது.
- **பட்டயச் சட்டம்: 1793 (Charter Act)**
- கிழக்கிந்திய கம்பெனியின் இந்திய வணிக உரிமைமேலும் **20** ஆண்டுகள் நீட்டிக்கப்பட்டது
- இந்தியாவில் நகராட்சி அமைப்புகள் அமைப்புகள் ஏற்படுத்தபட்டது. **(இந்தியாவின் முதன் நகராட்சி (ம) மாநகராட்சி சென்னை சட்டம் 1687-1688 நடைமுறை). (29-9-1688)**
- இங்கிலாந்தில் ஏற்ப்படுத்தப்பட்ட இயக்குனர் (ம) கட்டுபாட்டுக் குழுவின் உறுப்பினர்களின் ஊதியம் இந்திய வருவாயிலிருந்து வழங்க வகைச் செய்யப்பட்டது.

## பட்டயச் சட்டம்: 1813 (Charter Act)

- இந்திய கல்வி வளர்ச்சிக்கு ஆண்டிற்கு **1** லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.
- கிழக்கிந்திய கம்பெனியின் இந்திய வணிக உரிமை நீக்கப்பட்டு அனைத்து ஆங்கில வணிகர்களுக்கும்அனுமதி அளிக்கப்பட்டது.

## பட்டயச் சட்டம் 1833:-

- ஒழுங்கு முறை சட்டத்தின் படி ஏற்படுத்தப்பட்ட வங்காள பதவி இந்திய கவர்னர் ஜெனரல் என மாற்றப்பட்டது.
- கிழக்கிந்திய கம்பெனியின் ஓபியம் (போதை பொருள்) (ம) தேயிலை மீதான வணிக முற்று-உரிமை நீக்கப்பட்டது.
- கிழக்கிந்திய கம்பெனியின் அதிகாரம் வரையறுக்கப்பட்டது.
- பொது ஆட்சி பணிகள் இந்திய மயமாக்கப்பட்டது.
- கவர்னர் ஜெனரல் நிர்வாக குழுவில் 4-வதாக சட்ட உறுப்பினர் சேர்க்கப்பட்டார்.
- **முதல் சட்ட உறுப்பினர் – மெக்காலே**

## பட்டயச் சட்டம் 1853:-

- பொது ஆட்சி பணிகளுக்கு போட்டி தேர்வு முறை அறிமுகப்படுத்தப்படடது.
- இங்கிலாந்து பாராளுமன்றம் விரும்பும் வரை கிழக்கிந்திய கம்பெனியின் ஆட்சி நீட்டிக்கப்பட்டது.
- வங்காளத்திற்கு தனி கவர்னர் நியமிக்கப்பட்டார்.
- கவர்னர் ஜெனரல் கவுன்சிலின் சட்டம் இயற்றும் பணியும். நடைமுறைபடுத்தும் பணியும் தனியே பிரிக்கப்பட்டது.

## இந்திய அரசு சட்டம் 1858:-

- 2.8.1858-ல் இங்கிலாந்து பாராளுமன்றத்தில் இச்சட்டம் இயற்றப்பட்டது.
- 1.11.1858-ல் கானிங் நடத்திய அலகாபாத் தர்பாரில் இச்சட்டம் இந்தியாவில் நடைமுறைப்படத்தபட்டது.

**முக்கிய அம்சங்கள்:**

- இந்தியாவில் கிழக்கிந்திய கம்பெனியின் ஆட்சி முடிவுக்கு இங்கிலாந்து அரசின் கீழ் வந்தது.
- இந்திய கவர்னர் ஜெனரல் பதவி **இந்திய வைசிராய்** என மாற்றப்பட்டது. (விக்டோரியா)
- இங்கிலாந்து அரசி இந்தியாவிற்கும் அரசியாக அறிவிக்கப்பட்டார்.
- **1784-ல்** ஏற்படுத்தப்பட்ட இயக்குநர் (ம) கட்டுபாட்டு குழு கலைக்கப்பட்டது.
- இந்திய நிர்வாகத்தை மேற்பார்வையிட இங்கிலாந்தில் ஒரு அயலுறவு செயலாளரும், (ம) **15 பேர்** கொண்ட இந்திய கவுன்சில் ஏற்படுத்தப்பட்டது.
- **முதல் அயலுறவு செயலாளர் சார்லஸ் உட் (கல்வி குழு தலைவர்).**

## இந்திய கவுன்சில் சட்டம் 1861:-

- கவர்னர் ஜெனரல் நிர்வாக குழு உறுப்பினர் எண்ணிக்கை **5-ஆக** உயர்த்தப்பட்டது.
- **1833** பட்டய சட்டத்தில் பறிக்கப்பட்ட சென்னை, (ம) பம்பாய் கவர்னர்களின் சட்டம் இயற்றும் அதிகாரம் மீண்டும் திரும்ப வழங்கப்பட்டது.
- சட்டம் இயற்றும் பணியில் முதல் முதலில் இந்தியர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டது.
- நெருக்கடி நிலையின் போது தனிச்சையாக சட்டம் இயற்றும் அதிகாரம் வைசிராய்க்கு வழங்கப்பட்டது.

- இச்சட்டப்படி **1862-ல்** கல்கத்தா, பம்பாய், மெட்ராஸ் உயர்நீதி மன்றங்கள் ஏற்படுத்தப்பட்டது.

## இந்திய கவுன்சில் சட்டம் 1892:-

- இந்திய தேசிய கதங்கிரஸின் (INC) மிதவாதிகள் முயற்சியினால் இச்சட்டம் கொண்டு வரப்பட்டது.
- இதுவே காங்கிரஸிற்கு கிடைத்த முதல் வெற்றி.

**முக்கிய அம்சங்கள்**

- இந்தியாவில் தேர்தல் முறை அறிமுகப்படுத்தப்பட்டது.
- சட்டம் இயற்றும் கவுன்சில் பட்ஜெட் மீது விவாதம் நடத்த அனுமதிக்கப்பட்டது.
- உறுப்பினர்கள் கேள்விகளுக்கு அமைச்சர்கள் பதில் அளிக்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

## இந்திய அரசு சட்டம் (அ) மிண்டோ-மார்லி சட்டம் 1909:

- இச்சட்டம் காங்கிரஸ் மிதவாதிகளை திருப்திபடுத்த கொண்டு வரப்பட்டது.
- மிண்டோ-**வைசிராய்** மார்லி – **அரசு செயலாளர்.**

**முக்கிய அம்சங்கள்:**

- ✓ இந்தியாவில் முதன் முதலில் வகுப்புவாரி பிரதிநித்துவம் (முஸ்லீம்களுக்கு தனி இட ஒதுக்கீடு).
- ✓ வகுப்பு வாரி பிரதிநிதித்துவத்தின் தந்தை – **மிண்டோ.**
- ✓ கவர்னர் ஜெனரல் நிர்வாக குழுவில் முதல் முதலில் இந்தியர் ஒருவர் நியமிக்கப்பட்டார்.
- ✓ முதல் நபர் **S.P. சின்ஹா** (இங்கிலாந்து பாராளுமன்றத்தில் இடம் பெற்ற 2- வதுநபர்) (முதல் நபர்- **தாதாபாய் நௌரோஜி**).
- ✓ மத்தியில் ஒரு அவை சட்டமன்றம் ஏற்படுத்தப்பட்டு நேரடி தேர்தல் நடத்தப்பட்டது.
- ✓ மத்திய சட்டமன்ற தேர்தல் சட்டபூர்வம் ஆக்கப்பட்டது.
- ✓ மாகாண கவர்னர்களின் நிர்வாக குழு உறுப்பினர் எண்ணிக்கை **2லிருந்து 4** ஆக உயர்த்தப்பட்டது.
- ✓ இங்கிலாந்தில் இருந்த இந்திய கவுன்சிலிலும் இந்தியர்களை நியமிக்க வகை செய்யப்பட்டது.

## இந்திய அரசு சட்டம் (அ) மாண்டேகு- செம்ஸ்போர்டு சட்டம் 1919:

- மாண்டேகு - **அரசு செயலாளர்**
  - செம்ஸ்போர்டு – **வைசிராய்**
  - **1917 Aug 20 – ல் வெளியிடப்பட்ட ஆகஸ்ட் அறிக்கையின்** படி இச்சட்டம் கொண்டு வரப்பட்டது.
- ✓ இச்சட்டத்தின் நோக்கம் பிரிட்டிஷ் இந்திய அரசில் இந்தியர்களையும் பங்கேற்க வைப்பது ஆகும்.

**முக்கிய அம்சங்கள்:**

- ✓ **1919** – ல் சீக்கியர்கள், கிறிஸ்துவர்கள், (ம) ஆங்கிலோ இந்தியர்களுக்கு இட ஒதுக்கீடு வழங்கப்பட்டது.
- ✓ **மாகாணங்களில் இரட்டை ஆட்சி முறை** (Dyarchy Ststem) அறிமுகப்படத்தப்பட்டது.

- ✓ ஒதுக்கப்பட்ட துறை – மாகாண கவர்னர் (ம) அவரது நிர்வாக குழுவினர் இணைந்து நிர்வாகம் மேற்கொண்டனர்.
- ✓ மாற்றப்பட்ட துறை– மாகாண கவர்னர் (ம) அமைச்சர்கள் இணைந்து நிர்வாகம் மேற்கொண்டனர்.
- ✓ மத்தியில் இரு அவை சட்டமன்றம் (மாநிலங்களவை, மக்களவை) ஏற்படுத்தப்பட்டது.
- ✓ மாகாணங்களில் ஒரு அவை சட்டமன்றம் (சட்ட மேலவை) எற்படுத்தப்பட்டு நேரடி தேர்தல் நடத்தப்பட்டது.
- ✓ மாகாண சட்டமன்ற தேர்தல் சட்ட பூர்வமாக்கப்ட்டது.
- ✓ பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது (இந்தியாவில் முதன் முதலில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கிய மாகாணம் சென்னை (காரணம் - நீதி கட்சி) உலகில் - நியூசிலாந்து காரணம் - நீதி கட்சி)
- ✓ அதிகாரங்கள் மத்திய பட்டியல், மாநில பட்டியல் என இரண்டாக பிரிக்கப்பட்டது.
- ✓ பட்ஜெட் மத்திய பட்ஜெட், மாநில பட்ஜெட் (அல்லாத சில நாடுகளில் காமன்வெல்த் **உறுப்பினர் நாடுகள் Embssy of India** என **இரண்டாக பிரிக்கப்பட்டது.**
- ✓ லண்டனில் இந்திய தூதரகம் (Higy Commission) ஏற்ப்படுத்தப்பட்டு இந்திய தூதர் (High Commissioner) ஒருவர் நியமிக்கப்பட்டார்.

## இந்திய அரசு சட்டம் 1935:-

- ✓ சைமன் குழுவின் அறிக்கை, மூன்று வட்டமேஜை மாநாட்ட முடிவுகள் (1930, 31, 32), 1933 –ல் வெளியிடப்பட்ட வெள்ளை அறிக்கை அகியவற்றின் அடிப்படையில் இச்சட்டம் கொண்டு வரப்பட்டது.
- ✓ இந்தியாவிற்காக இயற்றப்பட்ட கடைசி சட்டம் இதுவே ஆகும்.

**முக்கிய அம்சங்கள்:**

- ✓ மாகாணங்களில் **இரட்டை ஆட்சி முறை நீக்கப்பட்டு சுய ஆட்சி முறை** அறிமுகப்படுத்தப்பட்டது.
- ✓ மத்தியில் இரட்டை ஆட்சி முறை அறிமுகப்படுத்தப்பட்டது.
- ✓ ஒதுக்கப்பட்ட துறை – வைசிராய் (ம) அவரது நிர்வாக குழு இணைந்த நிர்வாகம்
- ✓ மாற்றப்பட்ட துறை – வைசிராய் (ம) அமைச்சர்கள் இணைந்த நிர்வாகம்.
- ✓ கூட்டாட்சி அரசாங்கம் ஏற்படுத்தப்பட்டது (சுதேச அரசுகள் இதனை ஏற்காததால் இம்முறை நீக்கப்பட்டது)
- ✓ அதிகாரங்கள் 3-ஆக பிரிக்கப்பட்டது.
- ✓ கூட்டாட்சி பட்டியல் - Federal list
- ✓ மாநில பட்டியல் - State list
- ✓ பொது பட்டியல் - conclarrent list
- ✓ **1.4.1935 – ல் இந்திய ரிசர்வ் வங்கி ஏற்படுத்தப்பட்டது.**
- ✓ **1937** -ல் பர்மா (மியான்மர்) இந்தியாவிலிருந்து பிரிக்கப்பட்டது.
- ✓ **1.4.1937ல்** வங்காளம், சென்னை, பம்பாய், ஐக்கிய மாகாணம் (உத்திரபிரதேசம்) பீஹார், அஸ்ஸாம் ஆகிய 6 மாகாணங்களில் இரு அவை சட்டமன்றம் (சட்ட மேலவை, சட்ட பேரவை) ஏற்படுத்தப்பட்டு நேரடி தேர்தல் நடத்தப்பட்டது.

- ✓ **1.4.1937** –ல் டெல்லியில் **ஒரு தலைமை நீதிபதி (ம) 6 நீதிபதிகள்** கொண்ட கூட்டாட்சி நீதிமன்றம் ஏற்படுத்தப்பட்டது.
- ✓ முதல் தலைமை நீதிபதி **சர் மௌரிஸ் கியர்**
- ✓ மாகாண நிர்வாக குழுவின் தலைவராக மாகாண கவர்னர் அறிவிக்கப்பட்டார்.

## அமைச்சரவை தூது குழு (அ) கேபினட் தூது குழு:-

- ✓ **1946 March 23-ல்** மூன்று இங்கிலாந்து அமைச்சர்களை கொண்ட அமைச்சரவை தூது குழு இந்தியா வந்தது.
- ✓ பெதிக் லாரன்ஸ் - **தலைவர்**
- ✓ ஸ்ட்ராபோர்டு கிரிப்ஸ் - உறுப்பினர்
- ✓ A.V. அலெக்ஸாண்டர் - உறுப்பினர்
- ✓ இக்குழு **1946 May 16**-ல் 2 முக்கிய பரிந்துரைகளை வழங்கியது.
- ✓ இடைக்கால அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும்
- ✓ **(Sep 2 1946** –ல் ஜவஹர்லால் நேரு தலைமையில் அமைக்கப்பட்டது இ.அ அமைக்கப்பட்டது அரசியலமைப்பு சட்டத்தை உருவாக்க அரசியல் நிர்ணய சபை ஏற்படுத்த வேண்டும்.

## மௌண்ட் பேட்டன் திட்டம் (அ) ஜீன் 3 திட்டம் (அ) இந்திய பிரிவினை திட்டம்

- ✓ **June 3 1947** –ல் வைசிராய் மௌண்ட்பேட்டன் ஒருங்கிணைந்த இந்தியாவை இந்தியா, பாகிஸ்தான் என இரண்டாக பிரிக்கும் இந்திய பிரிவினை திட்டத்தை அறிவித்தார்.
- ✓ இத்திட்டத்தின் படி **July 18 1947 –ல் இங்கிலாந்து பாராளுமன்றத்தில் இந்திய சுதந்திர சட்டம்** இயற்றப்பட்டது.
- ✓ இச்சட்டத்தின் படி **14.8.1947** –ல் பாகிஸ்தானிற்கு **15.8.1947**-ல் இந்தியாவிற்கும் சுதந்திரம் வழங்கப்பட்டது.

- ✓ **இந்திய அரசியல் நிர்ணய சபை:- (Indian Constituend Assembly)**
- ✓ கேபினட் தூது குழுவின் பரிந்துரையை ஏற்று July 1946 – ல் இந்திய அரசியல் நிரிணய சபை தேர்தல் நடத்தப்பட்டது.
- ✓ ஒரு மில்லியன் மக்கள்தொகைக்கு 1 உறுப்பினர் என்ற விகிதத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.
- ✓ Nov 1946 –ல் இந்திய அரசியல் நிர்ணய சபை ஏற்படுத்தப்பட்டது.
- ✓ இந்திய அரசியல் நிர்ணய சபையின் மொத்த உறப்பினர்கள் **389**
- ✓ பிரிட்டிஷ் இந்திய மாகாண உறுப்பினர்கள் **296**
- ✓ மன்னராட்சி பகுதி உறுப்பினர்கள் **93** (26.7.1947 –ல் பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபை ஏற்படுத்தப்பட்டதால், இந்திய அரசியல் நிர்ணய சபை உறுப்பினர் எண்ணிக்கை **299** – ஆக குறைந்தது)
- ✓ பிரிட்டிஷ் இந்திய மாகாண உறுப்பினர்கள் **229** மன்னராட்சி பகுதி உறுப்பினர்கள் **70.**
- ✓ **9.12.1946** –ல் இந்திய அரசியல் நிர்ணய சபையின் முதல் கூட்டம் நடைபெற்றது.
- ✓ இக் கூட்டத்தில் இந்திய அரசியல் நிர்ணய சபையின் **தற்காலிக தலைவராக சச்சிதானந்த சின்ஹா** தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- ✓ 11.12.1946 –ல் 2-வது கூட்டம் நடைபெற்றது.

- ✓ இக்கூட்டத்தில் இந்திய அரசியல் நிர்ணய சபையின் **நிரந்தர தலைவராக Dr. ராஜேந்திர பிரசாத்தும்**, துணை தலைவராக **H.C. முகர்ஜியும்**, சட்ட ஆலோசகராக **B.N.ராவ்வும்** தேர்ந்தெடுக்கப்பட்டனர். (இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் மாதிரி வரைவை தயாரித்தவர்)
- ✓ 13.12.1946 –ல் 3-வது கூட்டம் நடைபெற்றது.
- ✓ இக்கூட்டத்தில் **ஜவஹர்லால் நேரு நோக்க தீர்மானத்தை** முன் மொழிந்தார்.
- ✓ இத்தீர்மானம் இந்திய அரசியல் நிர்ணய சபையால் **22.1.1947** –ல் ஏற்றுகொள்ளபட்டது.
- ✓ இத்தீர்மானமே பின்னர் சில திருத்தங்களுக்கு உட்பட்டு இந்திய அரசியல் அமைப்பு சட்டத்தின் முகவுரையாக (Preamble) வைக்கப்பட்டு உள்ளது.
- ✓ இந்திய அரசியலமைப்பு சட்டத்தை இயற்ற **23 குழுக்கள்** ஏற்படுத்தப்பட்டது.

| | | |
|---|---|---|
| முதன்மை குழுக்கள (Major Committecs) | - | 8 |
| சிறு குழுக்கள் (Minor Committees) | - | 15 |
| | | 23 |

இக்குழுக்களில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது வரைவு குழு (Drafting Committee)

**வரைவு குழு :- Drafting Committee**

- ✓ **29.8.1947** –ல் இந்திய அரசியலமைப்பு சட்டத்தை எழுத Dr. B.R. அம்பேத்கார் தலைமையில் **7 பேர்** கொண்ட வரைவு குழு ஏற்படுத்தப்பட்டது.
- ✓ இந்தி அரசியமைப்பின் தந்தை (அ) சிற்பி or மனு -B.R. அம்பேத்கார்.
- ✓ வரைவு குழுவின் வழிகாட்டியாக விளங்கியவர் ஜவஹர்லால் நேரு.

1. Dr. B.R. அம்பேத்கார் - தலைவர்
2. கோபாலசுவாமி ஐய்யங்கார்
3. அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர்
4. K.N. முன்ஷி
5. சையது முகமது சதவுல்லா
6. N.மாதவராவ் (B.L. மிட்டர் பதவி விலகியதால் மாதவராவ் நியமிக்கப்பட்டார்)
7. T.T. கிருஷ்ணாமாச்சாரி (D.P. கெய்தான் **1948** –ல் இறந்ததால் கிருஷ்ணாமாச்சாரி நியமிக்கபட்டார்

- ✓ வரைவு குழு 1947 Oct–ல் தனது முதல் வரைவை தயாரித்து **Feb-21-1948** –ல் வெளியிட்டது.
- ✓ Oct 1948 –ல் 2-வது வரைவு தயாரித்து வெளியிடப்பட்டது.
- ✓ **4.11.1948** –ல் அம்பேத்கார் தலைமையிலான வரைவு குழு தனது 3-வது (ம) இறுதி வரைவை தயாரித்து வெளியிட்டது.
- ✓ 15.11.1948 முதல் 17.10.1949 வரை இவ்வரைவு அரசியல் நிர்ணய சபையால் பரிசீலிக்கப்பட்டு **26.11.1949** –ல் இந்திய அரசியல் அமைப்பு சட்டமாக ஏற்று கொண்டது.

- ✓ இந்திய அரசியலமைப்பு சட்டம் ஏற்று கொள்ளப்பட்ட நாளான **Nov 26' 1949 அன்றே 15** விதிகள் (விரத்துகள்) தற்காலிகமாக நடைமுறைக்கு வந்தது.
- ✓ Art 5, 6, 7, 8, 9, 60, 324, 366, 367, 379, 380, 388, 391, 392, 393
- ✓ **Jan 26' 1950** –ல் இந்திய அரசியலமைப்பு சட்டம் நடைமுறைக்கு வந்து இந்திய குடியரசு நாடானது (1929 Dec-ல் ஜவஹர்லால் நேரு தலைமையில் நடைபெற்ற லாகூர் காங்கிரஸ் மாநாட்டில் ஒவ்வொரு ஆண்டும் (ராவி நதிகரையில்) ஜனவரி 26-ம் நாளை பூரண சுதந்திர தினமாக கொண்டாட தீர்மானிக்கப்பட்டது, **1930 Jan 26-ம் நாள் முதல் பூரண சுதந்திர தினம்** கொண்டாடப்பட்டது. இதன் நினைவாக Jan 26-ல் இந்திய அரசியலமைப்பு சட்டம் நடைமுறைக்கு கொண்டு வரபட்டது.
- ✓ இந்திய அரசியலமைப்பு சட்டம் நடைமுறைக்கு வந்த போது **8** அட்டவணைகள்**, 22** பாகங்கள் (ம) **395** விதிகள் இருந்தது. (Articals)
- ✓ தற்போது 12 அட்டவணைகள், 25 பாகங்கள் 465 விதிகள் உள்ளது. (**School Book** 2011 **edition 12 அட்டவணைகள், 24 பாகங்கள், 449 விதிகள்**)
- ✓ இந்திய அரசியலமைப்பு சட்டம் இதுவரை 120 முறை திருத்தபட்டுள்ளது.
- ✓ **101** சட்ட திருத்தங்கள் வரை நடைமுறைக்கு வந்து உள்ளது.
- ✓ இந்திய அரசியலமைப்பு சட்டத்தில் **284** உறுப்பினர்கள் கையெழுத்துயிட்டுள்ளனர்.
- ✓ இந்திய அரசியலமைப்பு சட்டத்தை உருவாக்**க 2 ஆண்டுகள் 11 மாதங்கள் 18 நாட்கள்** ஆனது.
- ✓ இந்திய அரசியலமைப்பு சட்டத்தை உருவாக்க **64 லட்சம்** செலவிடப்பட்டது.
- ✓ **15.8.1947 முதல் 26.11.1949** வரை இந்திய அரசியல் நிர்ணய சபை தற்காலிக பாராளுமன்றமாகவும் செயல்பட்டது.
- ✓ அரசியல் நிர்ணய சபையாக செயல்படும் போது தலைவர் **Dr. ராஜேந்திர பிரசாத்** தற்காலிக பாராளுமன்றமாக செயல்படும் போது அதன் தலைவர் **G.V. மாவ்லங்கர்** (கணேஷ் வாசுதேவ் மாவ்லங்கர்) (சுதந்திர இந்தியாவின் முதல் மக்களவை சபாநாயகர்)
- ✓ இந்தியஅரசியல் நிர்ணய சபை மொத்தம் 11 கூட்டங்களை 114 நாட்கள் நடத்தியுள்ளது.
    - முதல் கூட்டம் 09.12.1946
    - இறுதி கூட்டம் 24.01.1950

## இந்திய அரசியலமைப்பின் சிறப்பியல்புகள்:-
## (Features of India Constitution)

- ✓ உலகின் மிக நீண்ட எழுதப்பட்ட அரசியலமைப்பு
- ✓ பல்வேறு அரசியலமைப்புகளிலிருந்து பெறபட்டது. (Dream from Various Sources)
- ✓ அடிப்படை உரிமைகளை கொண்டது. (Fundamental Rights)
- ✓ அடிப்படை கடமைகளை கொண்டது.
- ✓ நெகிழும், நெகிழா தன்மை கொண்டது
- ✓ கூட்டாட்சி (ம) ஒற்றையாட்சி தன்மை கொண்டது (Federal system with Unitary Bias)
- ✓ பாராளுமன்ற முறை அரசாங்கம் கொண்டது. (Parliamentry form of Govt)
- ✓ வயது வந்தோர் வாக்குரிமை முறை கொண்டது. (Universal Adult Franchise)
- ✓ ஒற்றை குடியுரிமை முறை கொண்டது.
- ✓ மத சார்பற்ற அரசை கொண்டது. (SecularState)
- ✓ ஒருங்கிணைந்த (ம) சுதந்திரமான நீதிதுறை கொண்டது.

- ✓ சிறந்த முகவுரையை கொண்டது. (Preamble)
- ✓ 3 – அடுக்கு அரசாங்கம் கொண்டது (மத்திய அரசு, மாநில அரசு, உள்ளாட்சி அரசு) Three tier Govt.
- ✓ நெருக்கடி நிலை (அ) அவசர நிலை பிரகடனங்களை கொண்டது.
- ✓ அரசுக்கு வழிகாட்டும் நெறிமுறை கோட்பாடுகளை கொண்டது. (Directive Principles of State Policy)
- ✓ பாராளுமன்ற இறையாண்மை (ம) நீதிதுறை தன்னிச்சை அமைப்பை கொண்டது.Parliamentry Sovereignity & Judical supremacy
- ✓ சுதந்திரமான (ம) தன்னிச்சையான அமைப்புகளை கொண்டது.
- ✓ Independent Bodies–CAG, UPSC, SPSC, Election Commission

  CAG – Comptroller And Auditor General of India இந்திய அரசியலமைப்பு தலைமை தணிக்கைாளர்.

  UPSC – Unior Public Service Commission

  SPSC – State Public Service Commission.

## இந்திய அரசியலமைப்பின் ஆதாரங்கள்:

➢ இந்திய அரசியலமைப்பு சட்டம் 60 நாடுகளின் அரசியலமைப்பு பின்பற்றி எழுதபட்டுள்ளது.

1. **இந்திய அரசு சட்டம் 1935:**

➢ இந்திய அரசியலமைப்பில் பெரும்பாலனவை இச்சட்டத்தில் இருந்து எடுக்கப்பட்டள்ளது.

- ✓ ஆளுநர் முறை
- ✓ அரசு பணியாளர் தேர்வாணயங்கள்
- ✓ நெருக்கடி நிலை (அ) அவசர நிலை பிரகடனங்கள்
- ✓ நீதி துறை
- ✓ கூட்டாட்சி முறை
- ✓ நிர்வாக முறைகள்

**2. இங்கிலாந்து அரசியலமைப்பு சட்டம்:**

- ✓ பாராளுமன்ற முறை அரசாங்கம்
- ✓ குடியரசு தலைவர் முறை
- ✓ சட்டத்தின் ஆட்சி
- ✓ ஒற்றை குடியுரிமை
- ✓ சட்டம் இயற்றும் நடைமுறைகள் (அ) சட்டமன்ற முறைகள்
- ✓ கேபினட் முறை
- ✓ இரண்டு அவை முறை
- ✓ ரிட் (writs) உரிமைகள் (அ) நீதி பேராணைகள்

**3. அமெரிக்க அரசியமைப்பு சட்டம்:**

- ✓ அடிப்படை உரிமைகள்
- ✓ நீதி புனராய்வு (முரணானது (அ) பாதிக்கப்படாத அரசியலமைப்பு)
- ✓ நீதி துறை சுதந்திரம் (அ) சுதந்திரமான நீதி துறை

- ✓ முகவுரை
- ✓ துணை குடியரசு தலைவர் முறை
- ✓ குடியரசு தலைவர் பதவி நீக்கம்
    - (Impeachment of the President)
- ✓ உச்ச நீதிமன்ற (ம) உயர் நீதிமன்ற நீதிபதிகள் பதவி நீக்கம் (Removal of Supreme)
- ✓ உச்ச நீதிமன்ற முறை

**4.ரஷ்ய அரசியலமைப்பு சட்டம்:-**

- ✓ அடிப்படை கடமைகள்
- ✓ முகவுரையில் "சமூக, பொருளாதார, அரசியல், நீதி" எடுக்கப்பட்டது.

**5. அயர்லாந்து ஸ்பெயின் அரசியலமைப்பு:**

- ✓ அரசுக்கு வழிகாட்டும் நெறிமுறை கோட்பாடுகள் (DPSP)
- ✓ குடியரசு தலைவர் தேர்தல் முறை
- ✓ ராஜ்ய சபா நியமன உறுப்பினர்கள் நியமிக்கும் முறை

**6. கனடா அரசியலமைப்பு:-**

- ✓ கூட்டாட்சியுடன் கூடிய வலுவான மத்திய அரசு
- ✓ மத்திய அரசின் எஞ்சிய அதிகாரங்கள்
- ✓ மாநில ஆளுநர்கள் மத்திய அரசால் நியமிக்கும் முறை
- ✓ உச்சநீதிமன்றத்தின் ஆலோசனை அதிகாரம்

**7. ஆஸ்திரேலியா அரசியலமைப்பு:-**

- ✓ பட்டியல்களில், பொது பட்டியல்
- ✓ பாராளுமன்ற கூட்டு கூட்டம்

**8. பிரான்ஸ் அரசியலமைப்பு:-**

- ✓ முகவுரையில் குடியரசு, சுதந்திரம், சமத்துவம், சகோரத்துவம் சேர்க்கப்பட்டது.

**9. தென் ஆப்பிரிக்கா அரசியலமைப்பு:-**

- ✓ ஆரசியலமைப்பு சட்டத்ததை திருத்தும் முறை
- ✓ ராஜ்ய சபா உறுப்பினர் தேர்தல் முறை

**10. ஜெர்மனியின் வெய்மர் அரசியலமைப்பு:-**

- ✓ நெருக்கடி நிலை (அ) அவசர நிலையின் போது அடிப்படை உரிமைகள் செயலிழக்கும் (அ) ரத்தாகும் முறை.

**11. ஜப்பான் அரசியலமைப்பு:-**

- ✓ சட்டத்தை உருவாக்கும் முறை

## இந்திய அரசயிலமைப்பின் அட்டவணைகள்:-

**1-வது அட்டவணை: (மாநிலங்கள் (ம) யூனியன் பிரதேசங்கள் பெயர்)**

- மாநிலங்கள் (ம) யூனியன் பிரதேசங்களின் (ம) எல்லைகள் பற்றி குறிப்பிடுகிறது.

**2-வது அட்டவணை (சம்பளம், படிகள், சலுகைகள்)**

- குடியரசு தலைவர், மாநில ஆளுநர்கள், மக்களவை சபாநாயகர், (ம) துணை சாபாநாயகர், ராஜ்ய சபா தலைவர் (ம) துணை தலைவர், சட்டபேரவை சபா நாயகர்கள் (ம) துணை தலைவர்கள், உச்ச நீதி மன்ற (ம) உயர் நீதி மன்ற நீதிபதிகள், CAG ஆகியோரின் சம்பளம் படிகள் (ம) சலுகைகள் பற்றி குறிப்பிடுகிறது.

- ✓ **3-வது அட்டவணை: (பதவி பிரமாணம் (ம) உறுதிமொழிகள்)(Oaths (or) Affirmations**
  மத்திய மாநில் அமைச்சர்கள், சட்டமன்ற (ம) நாடாளுமன்ற உறுப்பினர்கள், உச்ச நீதி மன்ற, உயர்நீதி மன்ற நீதிபதிகள், CAG ஆகியோரின் பதவி பிரமாணம் (ம) உறுதிமொழிகள் பற்றி குறிப்பிடுகிறது.

- ✓ **4-வது அட்டவணை:**
- ராஜ்ய சபா இட ஒதுக்கீடு
- ராஜ்ய சபாவிற்கு மாநிலங்கள் (ம) யூனியன் பிரதேசங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்டும் உறுப்பினர் எண்ணிக்கை பற்றி குறிப்பிடுகிறது.

**5- வது அட்டவணை: (SC, ST பகுதி நிர்வாகம் (ம) கட்டுபாடுகள்)**

- ➢ நாட்டில் உள்ள தாழ்த்தபட்டோர் (SC), (ம) பழங்குடியினர் (ST) பகுதிகளின் நிர்வாகம், (ம) கட்டுபாடுகள் பற்றி குறிப்பிடுகிறது.
  - ✓ **6-வது அட்டவணை: (வட கிழக்கு மாநிலங்களில் ST பகுதி நிர்வாகம்)**
- ➢ அஸ்ஸாம், மேகாலயா, திரிபுரா, மிசோரம் ஆகிய வடகிழக்கு மாநிலங்களில் பழங்குடியினர் (ST) பகுதிகளின் நிர்வாகம் பற்றி கூறுகிறது.
  - ✓ **7-வது அட்டவணை: (மத்திய மாநில அரசுக்கிடையே அதிகார பகிர்வு)**
- ➢ மத்திய, மாநில அரசுகளுக்கிடையே அதிகார பகிர்வு (பட்டியல்கள்) பற்றி குறிப்பிடுகிறது.
- ➢ மத்திய, மாநில அரசுக்கிடையே அதிகாரங்கள், 3 பட்டியல்களாக பிரிக்கப்பட்டுள்ளது.

### மத்திய பட்டியல Central list

- ✓ மத்திய அரசின் கட்டுபாட்டில் உள்ள தேசிய முக்கியத்துவம் வாய்ந்த துறைகள் (Subject) மீது மத்திய அரசு (பாராளுமன்றம்) அதிகாரம் செலுத்தி சட்டம் இயற்றும்
- ✓ தற்போது மத்திய பட்டியலில் 100 துறைகள் உள்ளது.

- ✓ ஆரம்பத்தில் **97** துறைகள் இருந்தது.

**Eg:** வங்கி, பணம் வெளியிடுதல், அஞ்சல் தந்தி, பாதுகாப்பு, ரயில்வே, வெளியுறவு, காப்பீடு, அணுசக்தி, மக்கள் தொகை கணக்கெடுப்பு, தகவல் தொடர்பு, தணிக்கை, விமான போக்குவரத்து

1. **மாநில பட்டியல்:**(State list)

- ✓ மாநில அரசின் கட்டுபாட்டில் உள்ள துறைகள் மீது மாநில அரசு (மாநில சட்டமன்றம்) அதிகாரம் செலுத்தி சட்டம் இயற்றும்.
- ✓ தற்போது மாநில பட்டியலில் **61** துறைகள் உள்ளது.
- ✓ ஆரம்பத்தில் **66** துறைகள் இருந்தது.

**Eg:** சட்டம் ஒழுங்கு, காவல், சிறை, பொது சுகாதாரம், உள்ளாட்சி, வேளாண்மை, மீன் வளம், சந்தை, திரையரங்குகள், சூதாட்டங்கள்.

**3.பொது பட்டியல்:- (Concurrent List)**

- ✓ இத்துறைகள் மீது மத்திய அரசு, மாநில அரசு ஆகிய இரு அரசுகளும் சட்டம் இயற்றும்
- ✓ முத்திய சட்டத்திற்கும், மாநில சட்டத்திற்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டால் மத்திய அரசு சட்டமே வலிமை மிக்கது.
- ✓ **1976 – ல் 42-வது** சட்டதிருத்ததில் கல்வி, காடுகள், எடை அளவீடுகள், வனவிலங்கு பாதுகாப்பு, நீதி நிர்வாகம் ஆகிய **5** துறைகள் மாநில பட்டியலில் இருந்து, பொது பட்டியலுக்கு மாற்றப்பட்டது
- ✓ தற்போது பொது பட்டியலில் **52** துறைகள் உள்ளது.
- ✓ ஆரம்பத்தில் **47** துறைகள் இருந்தது.

**Eg:** கல்வி, காடுகள், எடை அளவீடுகள், வனவிலங்கு பாதுகாப்பு நீதி நிர்வாகம், திருமணம், மணவிலக்கு, தொழிலாளர் நலன், மின்சாரம், சிவில் சட்டம் (அ) உரிமையியல் சட்டம் குற்றவியல் சட்டம், மக்கள் தொகை கட்டுபாடு, மருந்துகள் (Drugs) செய்தித்தாள், புத்தகம் (ம) அச்சு கூடங்கள், பொருளாதார சமூக திட்டமிடல், குடும்ப கட்டுபாடு

## 8-வதுஅட்டவணை: (மொழிகள்)

- ✓ அரசியலமைப்பு சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட மொழிகள் பற்றி குறிப்பிடுகிறது.
- ✓ அங்கீகரிக்கப்பட்ட மொழிகள் எண்ணிக்கை **22**

1. அஸ்ஸாமி - அஸ்ஸாம்
2. பெங்காலி - மேற்கு வங்காளம்
3. குஜராத்தி - குஜராத்
4. ஹிந்தி - இமாச்சல பிரதேசம், உத்ரபிரதேசம்,மத்திய பிரதேசம், பீஹார், ராஜஸ்தான் ஹரியானா
5. கன்னடம் - கர்நாடகா

6. காஷ்மீரி - ஜம்மு –காஷ்மீர்

7. மராத்தி - மகாரஷ்டிரா

8. ஒடியா (ஒரியா) - ஒடிஸா (ஒரிஸ்ஸா)

9. பஞ்சாபி - பஞ்சாப்

10. சமஸ்கிருதம் - வட இந்தியா

11. தமிழ் - தமிழ்நாடு

12. தெலுங்கு - ஆந்திரபிரதேசம், தெலுங்கானா (ஆட்சிமொழி)

13. உருது - ஜம்முகாஷ்மீர், தெலுங்கானா

14.சிந்தி (Sindhi) - வடமேற்கு இந்தியா

(**1967 21** வது சட்டதிருத்தின் படி **15** வது மொழியாக சேர்க்கப்பட்டது)

15. கொங்கணி - கோவா

16. மணிப்பூரி - மணிப்பூர்

17. நேபாளி உத்திரபிரதேசம், மேற்குவங்காளம், அஸ்ஸாம், பீஹார்

(**1992, 71** வது சட்டத்தின் படி இம்மூன்று மொழிகள் சேர்க்கப்பட்டது)

19. போடோ - அஸ்ஸாம்

20. டோக்ரி - இமாச்சலபிரதேசம், ஜம்மு காஷ்மீர்

21. மைதிலி - பீஹார்

22. சாந்தலி - ஜார்கண்ட், பீஹார்

(**2003, 92** வது சட்டதிருத்ததின் படி இந்நான்கு மொழிகள் சேர்க்கப்பட்டது)

## 9 வது அட்டவணை: பல்வேறு வகையானசட்டங்கள் (ம) விதிகள்)

- ✓ நில சீர்திருத்தம் (ம) ஜமீன்தாரி முறை, இதர சட்டஙகள் (ம) விதிகளை கொண்டுள்ளது.
- ✓ தமிழ்நாடு இட ஒதுக்கீடுகள் சட்டம் **1994 (69%) 9** வது அட்டவணையில் இடம் பெற்று உள்ளது.

- ✓ 9வது அட்டவணையில் ஆரம்பத்தில் **13** சட்டங்கள் இருந்தது,தற்போது **282** சட்டங்கள் உள்ளது
- ✓ (சமூக மற்றும் பொருளாதாரத்தில் பிற்படுத்தப்பட்டோரின் மேம்பாட்டிற்காக) 1951 1 வது சட்டதிருத்ததின் படி 9வது உருவாக்கப்பட்ட சட்டத்திருத்தம் அட்டவணை அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டது.

### *10 வது அட்டவணை: (கட்சி தாவல் தடை சட்டம்)* ***Anti Defection Law***

- ✓ **1985 52** வது சட்டதிருத்தத்தின்படி கட்சி தாவல் தடை சட்டம் (10வது அட்டவணை) அரசிலயலமைப்பில் சேர்க்கப்பட்டது.
- ✓ சட்டமன்ற (ம) நாடாளுமன்ற உறுப்பினர்களின் கட்சி தாவலை தடை செய்கிறது.
- ✓ கட்சி தாவல் தடை சட்டத்தின் படி உறுப்பினர் தகுதி இழப்பை தீர்மானிப்பவர் **சபாநாயகர்**
- ✓ **கச்சிதாவல் சட்டம் இயற்றிய முதல் மாநிலம் மேற்கு வங்காளம் - 1979**

### *11 வது அட்டவணை (பஞ்சாயத்துகள், (அ) கிராம பாலிக்கா சட்டம்)*

- ✓ **1992 ல்73 வது** சட்டதிருத்தத்தின்படி **11 வது** அட்டவணை அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டது
- ✓ கிராம பஞ்சாயத்து அமைப்பபுகளின் (பஞ்சாயத்து ராஜ் அமைப்புகள்)அதிகாரங்கள் (ம) பொறுப்புகள் பற்றி **29** தலைப்புகளில் குறிப்பிடுகிறது.

### *12வது அட்டவணை: நகர் பாலிக்கா சட்டம் (அ) நகராட்சி அமைப்புகள்)*

- ➢ **1992 74 வது** சட்டதிருத்தத்தின் படி 12 வது அட்டவணை அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டது.
- ➢ நகராட்சி அமைப்புகள் (அ) நகர உள்ளாட்சி அமைப்பபுகளில் அதிகாரங்கள் (ம) பொறுப்புகள் பற்றி **18** தலைப்புகளில் குறிப்பிடுகிறது.

**முகவுரை:**

- ✓ இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் அறிமுகமே முகவுரை.
- ✓ இந்தியஅரசியலமைப்பின் **திறவுகோல்** என அழைக்கப்படுகிறது.
- ✓ முகவுரையை நீதிமன்றத்தின் மூலம் நடைமுறைப்படுத்த இயலாது (நீதிபுனராய்வுக்கு அப்பாற்பட்டது)
- ✓ இந்திய அரசியலமைப்பின் குறிக்கோள்கள் அனைத்தும் முகவுரையில் இடம் பெற்றுள்ளது.
- ✓ **1960**ல் நடைபெற்ற ***பெருபாரி வழக்கில்*** முகவுரை(Berubari Case) இந்திய அரசியலமைப்பின் ஒரு பகுதி அல்ல என **உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது**.
- ✓ **1973ல்** நடைபெற்ற ***கேசவனந்த பாரதி*** கேரளா அரசுக்கிடையேயான வழக்கில் முகவுரை இந்திய அரசியலமைப்பின் ஒரு பகுதி என உச்சநீதிமன்ம் தீர்ப்பளித்தது.
- ✓ **1995** ல் நடைபெற்ற ***LIC Of India*** வழக்கில் முகவுரை இந்திய அரசியமைப்பின் ஒரு பகுதி என உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது.

- ✓ (முகவுரை ஒருமுறை மட்டும் திருத்தம் செய்யப்பட்டுள்ளது) **1976 42** திருத்தம் - சமதர்ம, சமய சார்பற்ற, ஒருமைப்பாடு ஆகிய வார்த்தகைகள் சேர்க்கப்பட்டன.

- ✓ இந்திய அரசியலமைப்பின் திறவுகோல் - **முகவுரை எட்மன் பாக்**

"நமது நீண்ட நாள் கனவை முகவுரை பிரதிபலிக்கிறது".

**அல்லாடி கிருஷ்ணசுவாமி ஐயர்**

"நமது இறைமை வாய்ந்த மக்களாட்சி குடியரசின் ஜாதகமே முகவுரை"

**K.M. முன்ஷி**

"இந்திய அரசியலமைப்பின் முகவுரை அரசியலமைப்பின் அடையாள அட்டை"

**N.A. பல்கிவாலா**

"இந்திய அரசியலமைப்பின் முகவுரை அரசியலமைப்பின் பெரும் மதிப்பு வாய்ந்த பகுதி"

**தக்கூர் தாஸ் பரூர் நவா**

"வழக்குகளின் சொர்க்கமே முகவுரை" **--- A.V.டைஷி இங்கிலாந்து அரசியல் அறிஞர்**

"இந்தியா ஒரு இறையாண்மை உடைய (Soverege)சமதர்ம (Socialost) சமய சார்பற்ற (Secular) மக்களாட்சி (Democratic) குடியரசு (Republic)"

முகவுரை இந்திய குடிமக்கள் அனைவருக்கும் சுதந்திரம் (Liberty) சமத்துவம் (Equality), சகோதரத்துவம், தேசிய ஒற்றுமை (Unity), ஒருமைப்பாடு (Integrity Fraternity) சமூக (Social) பொருளாதார (Economic) அரசியல் நீதியையும் (Poligical Justice) பெற்று தருவதை நோக்கமாக கொண்டுள்ளது.

- ✓ 18-12-1976-ல் 42வது சட்டதிருத்தத்தின்படி முகவுரையில் சமதர்மம் (Socialist), சமய சார்பற்ற (Secular), ஒருமைப்பாடு(Integrity) ஆகிய மூன்று வார்த்தைகள் அரசியலமைப்பின் முகவுரையில் சேர்க்கப்பட்டது.

## இறையாண்மை:- (Soverenignity)

- ✓ இந்திய அரசியலமைப்பு சட்டத்தில் மக்களுக்கு முழு உரிமைகள் வழங்கப்பட்டுள்ளது.
- ✓ தேர்தல் அதிகாரத்தில் மக்களின் உரிமைகள் (அதிகாரங்கள்) உறுதி செய்யப்பட்டுள்ளது.
- ✓ இந்திய அரசியலமைப்பு சட்டப்படி மக்களே உயர்ந்த அதிகாரம் பெற்றவர்கள் (அதிகாரத்தின் தோற்றுவாய்)என முகவுரை (இறையாண்மை) குறிப்பிடகிறது.
- ✓ **இறையாண்மை என்ற சொல் சூப்ரானஸ் (Suprenus)என்ற லத்தின் சொல்லில்** இருந்து தோன்றியது.
- ✓ தற்கால மக்களாட்சியின் அடிப்படையாக விளங்குவது மக்கள் இறைமை
- ✓ **ஜுன் போடின் "தனது குடியரசு பற்றிய 6 நூல்கள்"** என்ற நூலில் **இறையாண்மை** என்ற சொல்லை முதன் முதலில் பயன்படுத்தினள்.
- ✓ நவீன இறைமை கோட்பாட்டின் தந்தை **ஜுன் போடின்**
- ✓ **ஆஸ்டின்** கூறிய இறைமை கோட்பாடு ஒருமைவாத கோட்பாடு என அழைக்கப்படுகிறது.

- ✓ தற்போது பாரம்பரிய இறைமை செயல்பாட்டு விதிகளுக்கு முரணாக உள்ள அமைப்பு **ஐரோப்பின் யூனியன்** (UN)
- ✓ இறையாண்மை (அ) இறைமை 2 வகைபடும்
- ✓ பெயரளவு இறையாண்மை - இங்கிலாந்து அரசா், இந்திய குடியரசுத் தலைவா்
- ✓ உண்மையான இறையாண்மை - இந்திய கேபினட், புரட்சி மூலம் ஆட்சியை பிடிப்பவா்கள்.

## *மக்களாட்சி (DEMOCRACY) கிரேக்கச்சொல்*

- ➢ 2500 ஆண்டுகளுக்கு முன்பே மக்களாட்சி என்ற சொல்லை முதன் முதலில் பயனப்டுத்தியவா் **ஹெரோடோடஸ்** (வரலாற்றின் தந்தை)
- ➢ Democracy என்ற சொல் (Demos) (மக்கள்) (ம) (Kratos) அதிகாரம் (அ) Cre? ஆட்சி என்ற இரண்டு **கிரேக்க சொல்களில்** இருந்து தோன்றியது.
- ➢ மக்களாட்சி என்பது ஒரு அரசாங்க முறை
- ➢ ஜனநாயக ஆட்சியில் (மக்களாட்சி) புரட்சிகள் (ம) கிளர்ச்சிகளுக்கு இடமில்லை.
- ➢ மக்களாட்சி நாட்டில் வாழும் உரிமை (ம) சுதந்திர உரிமைக்கு உத்தரவாதம் வழங்குவது அரசியலமைப்பு சட்டம்
- ➢ மக்களாட்சியில் தூணாக விளங்குவது தோ்தல்

‘‘ஜனநாயகம் எனும் கருத்து மக்களாட்சி அரசிற்கு அடித்தளமாக உள்ளது’’.
**- ஹெரோடோடஸ்**

‘‘ஜனநாயகம் என்பது ஒரு அரசாங்க முறை இதில் மக்கள் அனைவரும் பங்கு பெறுகின்றனது. **- பேராசிரியா் ஷீலே**

‘‘மக்களாட்சி என்பது பலருடைய அரசாங்கம்’’ **அரிஸ்டாட்டில்**

‘‘மக்களாட்சி என்பது மக்களால் மக்களுக்காக மக்களே நடத்தும் ஆட்சி’’ - **ஆபிரகாம் லிங்கன் (அமெரிக்க முன்னாள் அதிபா்)**

**மக்களாட்சி 2 வகைப்படும்**

- ✓ நேரடி மக்களாட்சி (Direct Democracy)
- ✓ மறைமுக மக்களாட்சி (Indirect Democracy)

❖ **நேரடி மக்களாட்சி:**

- ✓ மக்கள் தொகை குறைவான நாடுகளில் இம்முறை பின்பற்றபடுகிறது
- ✓ ஆட்சியாளா்கள் (ம) தலைவா்களை மக்கள் நேரடியாக தோ்ந்தெடுக்கின்றனா்.
- ✓ நேரடி மக்களாட்சி நாடுகளில் திரும்ப அழைத்தல் முறை பின்பற்றபடுகிறது.
- ✓ கிரேக்க நாட்டில் **ஏதேன்ஸ்** நகரத்தில் முதல் முதலில் நேரடி மக்களாட்சி முறை பின்பற்றப்பட்டது.
- ✓ இந்தியாவில் பண்டைய கிராம பஞ்சாயத்து, பண்டைய கிரேக்க, ரோமானிய அரசுகள், இடைக்கால இத்தாலி அரசு ஆகியவற்றில் நேரடி மக்களாட்சி முறை பின்பற்றப்பட்டது.
- ✓ தற்போது **சுவீட்சா்லாந்தில்** நேரடி மக்களாட்சி முறை பின்பற்றப்படுகிறது.

❖ **மறைமுக மக்களாட்சி:**

- ✓ மறைமுக மக்களாட்சியில் (பிரதிநிதித்துவ மக்களாட்சி) பிரதிநிதிகளை தேர்வு செய்வது முக்கிய பணியாகும்.
- ✓ மறைமுக மக்களாட்சியில் முக்கிய பங்காற்றுவது அரசியல் கட்சிகள்.
- ✓ நமது அரசியலமைப்பு மக்களாட்சி கருத்துகளின் அடிப்படையில் அமைந்துள்ளது.
- ✓ இந்தியாவில் மறைமுக மக்களாட்சியில் பாராளுமன்ற மக்களாட்சி முறை பின்பற்றபடகிறது.
- ✓ **Eg: இந்தியா, இங்கிலாந்து. பிரான்ஸ்,USA**

## ❖ சமத்துவம் (Equality)

- ➢ சமத்துவம் என்ற சொல்லை முதன் முதலில் பயன்படுத்தியவர் **ராபர்ட் ஓவன்** (கூட்டுறவின் தந்தை).
- ➢ அனைவருக்கும் சமமான சமத்துவத்தை வழங்குவது ராணுவம் சாரா தனிநபர் சமத்துவம் (அ)சிவில் சமத்துவம்.
- ➢ சமத்துவத்தை பற்றி **H.J.லாஸ்கி** எழுதிய நூல் **"அரசியல் இலக்கணம்"**
- ➢ ''சமத்துவம் என்பது அடிப்படையில் சமன்படுத்தபடும்செய்வகை''. **H.J. லாஸ்கி**

## ❖ சுதந்திரம் (Liberty): லத்தின் சொல

- ➢ Liberty என்ற சொல் **லைபர்** என்ற **லத்தின்** சொல்லிருந்து தோன்றியது.

''நாம் செய்ய விழையும் வற்றை செய்யும ஆற்றலே சுதந்திரம்''
**-மாண்டெஸ் கியூ**

''தான் மட்டுமோ (அ) மற்றவர்களுடனோ சேர்ந்து எதையேனும செய்யும் ஆற்றல் (அ) அடையும் மகிழ்ச்சியை சுதந்திரம்'' **-T.H. கிரீன்**

''கட்டுபாடு இல்லாமையை சுதந்திரம்''**-பேராசிரியர் ஹீலே**

## ❖ மத சார்பின்மை (அ) சமய சார்பின்மை: (Secularism)

- ➢ இந்திய அரசின் தேசிய குறிக்கோள்களில் ஒன்றாக விளங்குகிறது.
- ➢ **Secularism என்ற** ஆங்கில சொல் (செக்யூலம்) என்ற **லத்தின்** சொல்லிருந்து தோன்றியது.
- ➢ மதசார்புடைய அரசாங்கத்தின் அடிப்படையாக விளங்குவது மதம்.
- ➢ **1789-ல்** பிரெஞ்சு புரட்சி மத சார்பின்மையை பிரபலப்படுத்தியது, **1791-ல்** பிரெஞ்சு அரசியலமைப்பு சட்டம் பிரான்ஸை மத சார்பற்ற நாடாக அறிவித்தது.
- ➢ தனது அரசாங்கத்தின் கொள்கையாக மத சார்பின்மையை பின்பற்றி வெற்றி பெற்ற இந்திய அரசர் **மகாராஜா ரஞ்சித் சிங்**
- ➢ **1888-ல் ஜார்ஜ் யூல்** தலைமையில் நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரஸ் மாநாட்டில் மதசார்பின்மை கலந்த தேசியம் அறிமுகப்படுத்தப்பட்டது.
- ➢ **1955-ல்** நடைபெற்ற **ஆவடி காங்கிரஸ் மாநாட்டில்** சமதர்ம,சமத்துவ தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.(தலைவர்-காமராசர்)
- ➢ இந்திய அரசியலமைப்பின் வழிகாட்டு கொள்கைகளில் மதசார்பின்மை **5-ம்** இடத்தில் உள்ளது.

- அலுவலர் ஆட்சி என்பது நியமிக்கப்பட்ட அலுவலர்களை கொண்ட ஓர் நிர்வாகஅமைப்பு என்று கூறியவர் – **மாக்ஸ் வீபர்**.

## இந்திய அரசியலமைப்பின் பகுதிகள்(ம) ஷரத்துகள்(Parts and Articules)

# PART- I

### ஒன்றியமும் அதன் ஆட்சி பகுதிகளும்:(Union and its Terrirory)Art 1-4

### Art 1:

- இந்தியா மாநிலங்களின் ஒன்றியம் என குறிப்பிடுகிறது (Union of states)
- இந்தியாவின் பெயர் **பாரத்** எனக் குறிப்பிடகிறது.
- அரசியலமைப்பில் கூட்டாட்சி (Federation) என்ற சொல்லிற்கு பதிலாக யூனியன் (ஒன்றியம்) என்ற சொல்லை பயன்படுத்தியவர் Dr.B.R. அம்பேத்கார்.

### Art2:

- நாடாளுமன்றத்தில் சட்டம் இயற்றுவதன் மூலம் புதிய மாநிலங்கள் உருவாக்குதல் (அ) அனுமதித்தல் பற்றி குறிப்பிடுகிறது.

### Art 3:

- புதிய மாநிலங்கள் உருவாக்குவதில் எல்லைகள், பெயர் (ம) பரப்பளவை மாற்றி அமைத்தல் பற்றி குறிப்பிடுகிறது.

### Art 4:

- Art 2 (ம) 3- ஐ பின்பற்றி புதிய மாநிலங்கள் உருவாக்கும் முறைகள் பற்றி குறிப்பிடுகிறது.

### மொழி வாரி மாநிலங்கள்:- (Linguistic states)

- இந்திய சுதந்திரத்திற்கு பின் இந்தியாவை மொழி, பண்பாடு, கலாச்சரம்வாரியாக பிரிவது பற்றி ஆராய **1948 June-ல் S.K. தார்** தலைமையில் குழு அமைக்கப்பட்டது.
- இக்குழு **1948 Dec–ல்** அறிக்கை அளித்தது, அவ்வறிக்கையில் இந்தியாவை மொழி, பண்பாடு (ம)கலாச்சாரம் வாரியாக பிரிக்க பரிந்துரை செய்தது.
- 1948 Dec-ல் நடைபெற்ற **ஜெய்பூர்** இந்தி தேசிய காங்கிரஸ் மாநாட்டில் S.K தார் குழுவின் அறிக்கையை ஆராய **ஜவஹர்லால் நேரு, வல்லபாய் பட்டேல், பட்டாயி சீத்தராமையா** ஆகியோர் அடங்கிய குழு **(JVP குழு அமைக்கப்பட்டது.)**

- JVP குழு 1949 April – ல் அறிக்கை அளித்தது, அவ்வறிக்கையில் தார் குழுவின் பரிந்துறைகளை நிராகரித்தது.
- **1953-ல**் ஆந்திர பிரதேச தனி மாநில கோரிக்கையை வலியுறுத்தி **பொட்டி ஸ்ரீராமலு 56** நாட்கள் உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்தார்.
- இதன் விளைவாக **1953 Oct 1-ல்** இந்தியாவில முதல் மொழி வாரி மாநிலமாக **ஆந்திர பிரதேசம்** உவாக்கபட்டது. **Tamil Nadu– சங்கரலிங்கனார்**
- **1953 Dec மொழி** வாரி மாநிலங்கள் பிரிப்பது பற்றிய அராய **∴பாசல் அலி (Fazl Ali)** தலைவராகவும்,**K.M. பணிக்கர்,M.N. குன்ஸ்ரூ** ஆகியோரை உறுப்பினர்களாக கொண்ட
- மாநில மறு சீரமைப்பு குழு (பாசர் அலி குழு) அமைக்கபட்டது.
- இக்குழு **1955 Sep-**ல் அறிக்கை அளித்தது.
- அவ்வறிக்கையில் இந்தியாவை மொழிவாரியாக **16** மாநிலங்கள் (ம) **3** யூனியன் பிரதேசங்களாக பிரிக்க பரிந்துரைத்தது.
- இவ்வறிக்கையின் படி இந்திய அரசு **1956-ல்** மாநில மறுசீரமைப்பு சட்டத்தை இயற்றியது. **7-வது** சட்டதிருத்தம் மாநில மறுசீரமைப்பு சட்டம் 1956 ஆகியவற்றின் படி இந்தியா 14 மாநிலங்கள் (ம) 6 யூனியன் பிரதேசங்களாக **Nov 1 1956-ல் பிரிக்கப்பட்டது. (1-11-1956)**

1. அஸ்ஸாம்
2. ஆந்திரபிரதேசம்
3. பீஹார்
4. பம்பாய்
5. ஜம்மு – காஷ்மீர்
6. கேரளா
7. மத்திய பிரதேசம்
8. மெட்ராஸ்
9. மைசூர் (கர்நாடகா 1973)
10. ஒரிஸ்ஸா
11. பஞ்சாப்
12. ராஜஸ்தான்
13. உத்திரபிரசேம்
14. மேற்கு வங்காளம்

- **யூனியன் பிரதேசங்கள்: - 6**

1. அந்தமான் நிகோபார் தீவுகள்
2. டெல்லி
3. இமாச்சல பிரதேசம்
4. லட்ச தீவு, மினிக்காய் (ம) அமிந்திவி தீவுகள்
5. மணிப்பூர்
6. திரிபுரா

- 1960-ல் பம்பாய் 2-ஆக பிரிக்கப்பட்டு (குஜராத், மகாராஷ்டிரா) **குஜராத் - 15-வது** மாநிலமாக உருவாக்கப்பட்டது.
- 1961-ல் 10-வது சட்டதிருத்தத்தின் தாத்ரா- நாகர் வேலி யூனியன் பிதேசமாக அறிவிக்கப்பட்டது.

- 1962 12-வது சட்டத்திருத்தத்தின் படி கோவா, டாமன், டையு யூனியன் பிரதேசமாக அறிவிக்கப்பட்டது.
- 1962-ல் 14-வதுசட்டதிருத்தத்தின் படி பாண்டிச்சேரி யூனியன் பிரதேசமாக அறிவிக்கப்பட்டது.
- நாகாலாந்து மாநில சட்டம் 1962-ன் (13வச. ச. தி) படி 1.12.1963-ல் அஸ்ஸாமிலிருந்து **நாகலாந்து பிரிக்கப்பட்டு 16-வது** மாநிலமாக அறிவிக்கப்பட்டது.
- 1966-ல் **ஷா கமிஷன்** பரிந்துரைப்படி 1.11.1966-ல் பஞ்சாப் 3-ஆக பிரிக்கப்பட்டு (பஞ்சாப், ஹரியானா, சண்டிகர்) **ஹரியானா 17-வது** மாநிலமாகவும், சண்டிகர் யூனியன் பிரதேசமாகவும் அறிவிக்கப்பட்டது.
- 1969-ல் 22-வது சட்ட திருத்தத்தின் படி அஸ்ஸாமிவிருந்து மேகாலாயா பிரிக்கப்பட்டு தனி மாநில அந்தஸ்து வழங்கப்பட்டது.
- ஹிமாச்சல பிரதேச சட்டம் 1970-ன் படி 25.1.1971-ல் **ஹிமாச்சல பிரதேசம் 18-வது** மாநிலமாக உருவாக்கப்பட்டது.
- வடகிழக்கு பகுதிகள் மறுசீரமைப்பு சட்டம் 1970-ன் படி 21.1.1972-ல் **மணிப்பூர் 19-வது** மாநிலமாகவும், **திரிபுரா 20-வது** மாநிலமாகவும், **மேகாலயா 21-வது** மாநிலமாகவும் உருவாக்கப்பட்டது.
- 1972-ல் அஸ்ஸாமிலிருந்து அருணாச்சலபிரதேசம் பிரிக்கப்பட்டு யூனியன் பிரதேசமாக அறிவிக்கப்பட்டது.
- 1974 35-வது சட்டதிருத்தத்தின் படி சிக்கிம் இந்தியாவுடன் இணைக்கப்பட்டு இணை மாநில அந்தஸ்து வழங்கப்பட்டது.
- 1975 36-வது சட்டதிருத்தத்தின் படி **சிக்கிம் 22-வது** மாநிலமாக அறிவிக்கப்பட்டது.
- மிசோரம் மாநில சட்டம் 1986-ன் படி 20.2.1987-ல் அஸ்ஸாமிலிருந்து **மிசோராம் பிரிக்கப்பட்டு 23-வது** மாநிலமாக அறிவிக்கப்பட்டது.
- அருணாச்சல பிரதேச மாநில மறு சீரமைப்பு சட்டம் 1986-ன் படி 20.2.1987-ல் **அருணாச்சலபிரதேசம் 24-வது** மாநிலமாக அறிவிக்கப்பட்டது.
- கோவா, டாமன், டையு மறுசீரமைப்பு சட்டப் படி 30.5.1987-ல் **கோவா 25-வது** மாநிலமாக அறிவிக்கப்பட்டது.
- **1991-ல் 69-வது சட்டதிருத்தத்தின் படி டெல்லி தேசிய தலைநகர் பகுதியாக அறிவிக்கப்பட்டது.**
- நடைமுறைக்கு 1992.
- மத்திய பிரதேச மறுசீரமைப்பு சட்டம் 2000-ன் படி 1.11.2000-ல் மத்திய பிரதேசத்திலிருந்து **சட்டீஸ்கர் பிரிக்கப்பட்டு 26-வது** மாநிலமாக அறிவிக்கப்பட்டது.
- உத்திர பிரதேசம் மறுசீரமைப்பு சட்டம் 2000-ன் படி 9.11.2000-ல் உத்திரபிரதேசத்திலிருந்தது **உத்தராஞ்சல் பிரிக்கப்பட்டு 27-வது** மாநிலமாக அறிவிக்கப்பட்டது.
- பீஹார் மறுசீரமைப்பு சட்டம் 2000-ன் படி 15.11.2000-ல் பீஹாரிலிருந்து **ஜார்கண்ட் பிரிக்கப்பட்டு 28-வது** மாநிலமாக அறிவிக்கப்பட்டது.
- ஆந்திர பிரதேசம் மறுசீரமைப்பு சட்டம் 2014-ன் படி 2.6.2014-ல் ஆந்திரபிரதேசத்திலிருந்து **தெலுங்காண பிரிக்கப்பட்டு 29-வது** மாநிலமாக அறிவிக்கப்பட்டது.

- தற்போது இந்தியாவில் **29** மாநிலங்கள், **7** யூனியன் பிரதேசங்கள் (6 யூனியன் பிரதேசங்கள், 1 தேசிய தலைநகர் பகுதி) உள்ளது.

### மாநிலங்கள் (ம) யூனியன் பிரதேசங்களின் பெயர் மாற்றங்கள்:-

16.4.1967-ல் சென்னை மாகாண சட்டமன்ற தீர்மானப்படி, 1968-ல் சென்னை மாநில பெயர் மாற்றச் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு **14.1.1969-ல்** சென்னை மாகாணத்தின் பெயர் **தமிழ் நாடு** என மாற்றப்பட்டது.

- 1973-ல் மைசூர் பெயர் மாற்ற சட்டப்படி மைசூர் மாநிலத்தின் பெயர் **கர்நாடகா** என மாற்றப்பட்டது.
- 1973-ல் லட்சதீவு, மினிக்காய், (ம) அமிந்திவி தீவுகள் பெயர் மாற்ற சட்டப்படி லட்சதீவு, மினிக்காய், (ம) அமிந்திவி தீவுகளின் பெயர் **லட்சதீவுகள்** என மாற்றப்பட்டது.
- 2006-ல் பாண்டிச்சேரி பெயர் மாற்ற சட்டப்படி பாண்டிச்சேரி **புதுச்சேரி** என மாற்றப்பட்டது.
- 2006-ல் உத்தராஞ்சல் பெயர் மாற்ற சட்டப்படி உத்தராஞ்சல் மாநிலத்தின் பெயர் **உத்தர் காண்ட்** என மாற்றப்பட்டது.
- 2010-ல் ஒரிஸ்ஸா மாநில பெயர் மாற்ற சட்டப்படி 2011-ல் ஒரிஸ்ஸா **ஒடிஸா** என மாற்றப்பட்டது.

  1995- **மும்பை** (பம்பாய்). 1996- **சென்னை** (மெட்ராஸ்). 2000- **கொல்கத்தா** (கல்கத்தா)

# PART – II

## இந்திய குடியுரிமை - Art 5 to 11

- **Citizen** என்ற சொல் **சிவிஸ்** என்ற **லத்தின்** சொல்லிருந்து தோன்றியது.
- **1955-ல் இந்திய குடியுரிமை சட்டம்** இயற்றப்பட்டது.
- இச்சட்டம் 1986, 1992, 2003, 2005 ஆகிய 4 முறை திருத்தப்பட்டுள்ளது.
- இந்தியாவில் **ஒற்றை குடியுரிமை** முறை பின்பற்றப்படுகிறது.
- USA-வில் இரட்டை குடியுரிமை முறை பின்பற்றப்படுகிறது.
- **2003-ல் L.M. சிங்வி குழுவின்** பரிந்துரையின்படி **16-நாடுகளில்** வாழும் வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கு இரட்டை குடியுரிமை வழங்கப்பட்டது.

**16-நாடுகள்**

1. சுவிட்சர்லாந்து
2. ஆஸ்திரேலியா
3. கனடா
4. இஸ்ரேல்
5. USA
6. போர்ச்சுகல்
7. பிரான்ஸ்
8. சுவீடன்
9. நியூசிலாந்து

10. கிரீஸ்
11. சைப்ரஸ்
12. இத்தாலி
13. பின்லாந்து.
14. அயர்லாந்து
15.நெதர்லாந்து(ஹாலந்து)
16. இங்கிலாந்து

- **2003 ஜனவரி 9-ம்** தேதி முதல் ஒவ்வொரு ஆண்டும் **ஜனவரி 9-ம் நாளை பிரவேசிய பாரதிய தினமாக** (வெளி நாடு வாழ் இந்தியர்கள் தினம்) கொண்டாடப்படுகிறது.
- இந்திய குடியுரிமையை 5 முறைகளில் பெறலாம்
- **2011** லிருந்து ஒட்டுரிமை வழங்கப்பட்டது.

**1. பிறப்பின் மூலம்:-**

இந்திய அரசியலமைப்பு சட்டம்நடைமுறைக்கு வந்த நாளான **26.1.1950** அன்றோ அதற்கு பின்னரோ **இந்தியாவில் பிறந்தால்** பிறப்பின் மூலம் இந்திய குடியுரிமை பெறுவர்.

**2. மரபு வழி (அ) வம்சா வழி மூலம்:-**

26.1.1950 அன்றோ (அ) அதற்கு பின்ரோ **வெளிநாட்டில் பிறந்து** அவரது பெற்றோர் இந்திய குடியுரிமை பெறுவர்.

**3. பதிவின் மூலம்:- (By Registratikon)**

தொடர்ந்து 7 ஆண்டுகளில் 5 ஆண்டுகள், இந்தியாவில் தங்கி விண்ணப்பித்தது பதிவு மூலம் இந்திய குடியுரிமை பெறலாம்.

**4.இயல்பு (அ) அயல் நாட்டவர் குடியுரிமை:-(By Naturalization)**

1 ஆண்டு இந்தியாவில் வசித்து, குடியுரிமை சட்டத்தின் 3-வது அட்டவணையில் உள்ள தகுதிகளை பெற்று இருந்தால் இயல்பு மூலம் இந்திய குடியுரிமை பெறலாம்.

**5. புதிய பகுதி இணைப்பின் மூலம்:-**

இந்தியாவுடன் எந்த பகுதி இணைக்கபட்டாலும், அப்பகுதி மக்கள் அனைவரும் இந்திய குடியுரிமை பெறுவர்

**Eg:** பாண்டிச்சேரி 1954ல் சுதந்திரம் (1962-ல் தான் பிரெஞ்சு பாராளுமன்ற விடுவிக்க தீர்மானம் இயற்றியது.

கோவா, டாமன், டையு,(போர்ச்சுகல்)(1961)

சிக்கிம்(74) தாத்ரா நாகர்வேலி(1961)

- **இந்திய குடியுரிமையை 3 முறைகளில் இழக்கலாம்**

**1. விளம்புகை (அ) துறத்தல்:-**

**(By Declaration (or) Renunciation)**

இந்திய குடியுரிமையை தானே விண்ணப்பம் அளித்து துறத்தல்.

**2.நீக்குதல் (அ) விலக்கிவைத்தல்:-(By Termination)**

இந்திய குடிமகன் வெளிநாட்டில் குடியுரிமை பெற்றால் (16 நாடுகளை தவிர) 2003க்கு பிறகு பாராளுமன்றம் அவரது இந்திய குடியுரிமையை நீக்கும்.

**3. பறித்தல்:-(By Deprivation)**

முறைகோடாக இந்திய குடியுரிமையை பெறுதல் (அ) அரசியல் அமைப்கை மீறி செயல்படுதல் ஆகிய காரணங்களுக்காக அவரது குடியுரிமையை பாராளுமன்றம் பறிக்கும்.

## Art 5:

26.1.1950-ற்கு பின் இந்தியாவில் பிறந்தவர்கள் 'இந்திய குடிமக்கள்' எனக் குறிப்பிடுகிறது.

## Art 6:

19.7.1948-ற்கு முன் பாகிஸ்தானில் இருந்து இந்தியாவிற்கு குடி பெயர்ந்தவர்களுக்கு இந்திய குடியுரிமை வங்குவது குறிப்பிடுகிறது.

## Art 7:

1.3.1947-ற்கு பின் இந்தியாவிலிருந்து பாகிஸ்தானிற்கு குடிபெயர்ந்தவர்களுக்கு இந்திய குடியுரிமை வழங்குவது பற்றி குறிப்பிடுகிறது.

## Art 8:

அயல் நாடடில் உள்ள இந்தியா வம்சா வழியினருக்கு இந்திய குடியுரிமை வழங்குவது பற்றி குறிபிபடுகிறது.

## Art 9:

இந்திய குடிமகன் வெளிநாட்டில் குடியுரிமை பெற்றால் இந்திய குடியுரிமையை இழந்துவிடுவார் என்று குறிப்பிடுகிறது.

### Art 10:

- பராளுமன்றம் ஒருவரது குடியுரிமையை நீக்கி சட்டம் இயற்றம் வரை அவர் தனது குடியுரிமையை தொடரலாம். எனக் குறிப்பிடுகிறது.

## Art 11:

குடியுரிமையை வழங்குவது (ம) கட்டுபடுத்தும் அதிகாரம் பாராளுமன்றம் பெற்றுள்ளது எனக் குறிப்பிடுகிறது.

# PART – III

## அடிப்படை உரிமைகள் Art 12-35

- ✓ இந்திய அரசியலமைப்பு சட்டம் நடைமுறைக்கு வந்த போது **7** அடிப்படை உரிமைகள் அருந்தது.
- ✓ தற்போது **6** அடிப்படை உரிமைகள் உள்ளது.
- ✓ **1978 44-வது** சட்டதிருத்ததில் **Art 19(1)F(ம) Art 31** ஆகியவற்றிலிருந்து சொத்துரிமை நீக்கபட்டு **Art 300 A-வில்** சொத்துரிமை **சட்ட உரிமையாக** சேர்க்கப்பட்டது.
- ✓ Art 15, 16, 19, 29, 30 ஆகிய உரிமைகள் **இந்திய குடிமக்களுக்கு மட்டும்** வழங்கபட்டுள்ளது.
- ✓ Art14, 20, 21, 23, 25, 27, 28, ஆகிய உரிமைகள்**,இந்திய குடிமக்கள்,வெளிநாட்டினர்** ஆகிய அனைவருக்கும் பொருந்தும்.
- ✓ அடிப்படை உரிமைகள் நமது அரசியலமைப்பின் மக்களாட்சி தன்மையை கூறுகிறது.
- ✓ அடிப்படை உரிமைகள் இந்தியகுடிமக்களின் தனிநபர் மனித உரிமைகளை பாதுகாக்கிறது.
- ✓ **ஐ.நா 1948 Dec 10-ல்** ஐ.நாவின் **மனித உரிமை பிரகடனத்தின்** இடம் பெற்ற பெரும்பாலான விதிகள் நமது **அடிப்படை உரிமைகளில்** இடம் பெற்று உள்ளது.
- ✓ அடிப்படை உரிமைகளை நீதிமன்றத்தின் மூலம் நடைமுறைப்படுத்தலாம் (அ) தீர்வு காணலாம்.
- ✓ அடிப்படை உரிமைகளின் பாதுகாவலன் **உச்சநீதி மன்றம்.**
- ✓ அடிப்படை உரிமைகளை பாதிக்கும் வகையில் மத்திய, மாநில அரசுகள் சட்டம் இயற்ற இயலாது.
- ✓ 1976 42-வது சட்டத்திருத்தத்தில் அடிப்படை உரிமைகளுக்கும், அரசுக்கு வழிகாட்டும் நெறிமுறை கோட்பாடுகளுக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டால் DPSP-களை முன்னுரிமை பெற்றது என அறிவிக்கப்பட்டது.
- ✓ 1971 24-வது சட்டத்திருத்தத்தில் **Art 368-ன்** படி அடிப்படை உரிமைகள் உட்படஅரசியாமைப்பின் எந்த பகுதியையும் திருத்துவதற்கான அதிகாரம் **பாராளுமன்றத்திற்கு** வழங்கப்பட்டது.

## Art 12:

முத்தியஅரசு, பாராளுமன்றம், மாநில அரசு, மாநில சட்டமன்றங்கள், உள்ளாட்சி அமைப்புகள் (ம) இதர அதிகாரம் பெற்ற அமைப்புகள் பற்றி குறிப்பிடுகிறது.

## Art 13: அடிப்படை உரிமைகளின் பாதுகாவலன்)

அடிப்படை உரிமைகளை மீறும் (அ)அடிப்படை உரிமைகளுக்கு முரணாக உள்ள சட்டங்கள் செல்லாது எனக் குறிப்பிடுகிறது.

### 6 வகையான அடிப்படை உரிமைகள்:

1. சமத்துவ உரிமை- Art 14 - 18
2. சுதந்திர உரிமை –Art 19 - 22
3. சுரண்டலுக்கெதிரான உரிமை –Art 23 - 24
4. சமய சுதந்திர உரிமை –Art- 25 - 28
5. கல்வி (ம) பண்பாட்டு உரிமை - Art 29 - 30

6. அரசியலமைப்பு தீர்வுகாணும் உரிமை –Art- 32

## சமத்துவ உரிமை:- Art 14-18

**Art** 14:

சட்டத்தின் முன் **அனைவரும் சமம்** எனக் குறிப்பிடுகிறது.
குடியரசு தலைவர் (ம) ஆளுநர்களுக்கு விதிவிலக்கு வழங்கப்பட்டுள்ளது.

(பதவியில் இருக்கும் போது எந்த விதமான குற்ற வழக்கு தொடர முடியாது)

**Art 15:**

மதம், இனம், சாதி, பாலினம், நிறம் (அ) பிறந்த இடத்தின் காரணமாக யாரையும் **பாகுபாடு காட்டக் கூடாது** எனக் குறிப்பிடகிறது.

**Art 16:**

பொது வேலை வாய்ப்பில் அனைவருமக்கும் **சம வாய்ப்பு** வழங்க வேண்டும் எனக் குறிப்பிடுகிறது.

**Art 16 (4):**

வேலை வாய்ப்பில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு **இட ஒதுக்கீடு** வழங்குவது பற்றி குறிப்பிடுகிறது.

**Art 17:**

- ✓ **தீண்டாமையை தடை** செய்கிறது (ம) சமுதாயத்தில் பின் தங்கிய பிரிவினர்களின் நலன்களை பாதுகாக்கிறது.
- ✓ தீண்டாமை ஒழிப்பு சட்டம் **1955-ல்** இயற்றப்பட்டது.
- ✓ இச்சட்டம் **1976-ல் "சிவில் உரிமைகள் பாதுகாப்பு சட்டம்"**என மாற்றப்பட்டது.
- ✓ **1989-ல்** SC>ST நலன்களை (உரிமைகளை) பாதுகாக்க **"வன் கொடுமை தடுப்பு சட்டம"** இயற்றப்பட்டது.

**Art 18:**

அரசு **அனுமதியின்றி பெறும்** ராணுவம் (ம) கல்வி தர்த்த மற்ற பதவி (ம) **பட்டங்களை தடை செய்கிறது.**
**1954-ல்** பத்மஶ்ரீ, பத்மபூஷன், பத்மவிபூஷன் பாரத் ரத்னா ஆகிய விருதுகள் ஏற்படுத்தப்பட்டது.

## 2. சுந்திர உரிமை:-Art 19-22

**Art 19:**

குடிமக்களுக்கு பேச்சு (ம) கருத்து உரிமை உட்பட 6 வகையான சுதந்திர உரிமைகளை வழங்குகிறது.

a. பேச்சு (ம) கருத்து உரிமை:

**1963 16-வது** சட்டத்திருத்ததின் படி இந்திய இறையாண்மை (ம) ஒருமைபாடடிற்கு சவால் விடுதல் (அ) இந்தியாவிலிருந்து பிரிந்து செல்வது பற்றி பேச (ம) கருத்துக் கூற தடை செய்கிறது.

b. ஆயுதமின்றி கூடும் உரிமை.

c. சங்கம் அமைத்து கொள்ளும் உரிமை.

d.இந்தியாவெங்கும் சென்று வரும் உரிமை.

e. இந்தியாவில் எங்கும் வசிக்கும் உரிமை.

f. சொத்துரிமை நீககப்பட்டது.

g. தொழில் செய்யும் உரிமை.

**Art 352-ன் படி தேசிய நெருக்கடி அறிவிக்கப்பட்டால் Art 19 தானே செயலிழந்து விடும்.**

**Art 20:**

ஒருவரை ஒரு குற்றத்திக்காக ஒரு முறை மட்டுமே தண்டிக்க வேண்டும், மேலும் யாரையும் **சுய விருப்பமின்றி சாட்சியாக்க** கட்டாயப்படுத்த கூடாது.

**Art 21:**

- ✓ உயிர் பாதுகாப்பு (ம) தனி மனித சுதந்திரம் பற்றிக் குறிப்பிடுகிறது.
- ✓ தனது சுதந்திரத்தை மற்றவரின் சுதந்திரம் பாதிக்காத வகையில் அனுபவிக்க வெண்டும்.
- ✓ **Art 352** நெருக்கடி நிலையின் போது **Art 20 (ம) 21 ரத்து செய்ய இயலாது** எனக் குறிப்பிடுகிறது.

**Art 21A:**

- ✓ **2002-ல் 86-வது** சட்டத்திருத்தத்தின் **Art 21A** அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டது.
- ✓ **6 to 14 வயதிற்கு** உட்பட்ட அனைத்து குழந்தைகளும் **கட்டாய இலவச கல்வி** வழங்க வேண்டும் எனக் குறிப்பிடுகிறது.
- ✓ **2009-ல் கல்வி உரிமை பாதுகாப்பு சட்டம்** (RTE ACT) இயற்றப்பட்டது.
- ✓ **2011-ல் தமிழ் நாடு** அரசு குழந்தைகள் உரிமை (ம)இலவச கட்டாய கல்வி விதிகளை வெளியிட்டது.

SSA-சர்வ சிக்ஷா அபியான (2002-2010)

RMSA ராஷ்டிரியா மத்தியமிக் சிக்ஷா அபியான (2010 –till date)

**Art 22:**

- ➢ கைது செய்யப்பட்ட நபருக்கு **கைதிற்கான காரணம்** தெரிவிக்க வேண்டும்.
- ➢ கைதுசெய்யப்பட்ட நபரை **24 மணி நேரத்திற்குள் நீதிமன்றத்தில்** ஆஜர்படுத்த வேண்டும்.
- ➢ எந்த நபரையும் நீதிமன்றத்தின் **அனுமதியின்றி காவலில்** வைக்க கூடாது.

1. தடுப்பு காவல் சட்டம் **1950** தடுப்பு, **1969-ல்** நீக்கப்பட்டது.
2. உள்நாட்டு பாதுகாப்பு (ம) பாராமரிப்பு சட்டம் **1971, (MISA) 1978-ல்** நீக்கப்பட்டது.

3. அந்நிய செலாவணி (ம) கள்ளக்கடத்தல் தடுப்பு சட்டம் - **(COFEPOSA)– 1974 நடைமுறையில் உள்ளது**.

4. தேசிய பாதுகாப்பு சட்டம் **(NSA) 1980 நடைமுறையில் உள்ளது.**

5. கள்ள வணிகம் தடுப்பு (ம) அத்தியாவசிய பொருட்கள் பராமரிப்பு சட்டம் **(PBMSECA) 1980 –நடைமுறையில் உள்ளது.**

6. தீவிரவாத (ம) இடையூறுகள் தடுப்பு சட்டம் (தடா சட்டம்) **1985. 1995-ல்** நீக்கப்பட்டது.

7.போதை பொருட்கள் தடுப்புச் சட்டம் **(PITNDPSA) 1988 நடைமுறையில் உள்ளது**.

8. தீவிரவாதிகள் தடுப்பு சட்டம் **(POTA)Mar28 2002 Oct 23 2004 –** நீக்கப்பட்டது.

## சுரண்டலுக்கெதிரான உரிமை:- Art 23 to 24

### Art 23:

சட்ட விரோதமாக பெண்கள் (ம) குழந்தைகளை வியாபார நோக்கில் **விற்பனை செயதல்**, கட்டாயபடுத்தி **வேரை வாங்குதலை** (கொத்தடிமை) தடை செய்கிறது.
**கொத்தடிமை ஒழிப்பு சட்டம் 1976**

### Art 24:

14 வயதிற்குட்பட்ட குழந்தைகளை தொழிற்சாலைகள் (அ) சுரங்கங்கள் உள்ளிட்ட ஆபத்தான வேளைகளில் ஈடுபடுத்துவதை தடை செய்கிறது.
**குழந்தை தொழிலாளர் தடுப்பு (ஒழிப்பு) (ம) ஒழுங்கு படுத்தும் சட்டம் 1986.**

## சுமய சுதந்திர உரிமை:- Art 25 to 28

### Art 25:

ஒருவர் தான் விரும்பும் மதத்தை பின்பற்றி பரப்பலாம். என குறிப்பிடுகிறது.

### Art 26:

மத நிறுவனங்களை நிறுவி நிர்வகிக்கும் உரிமை பற்றி குறிப்பிடுகிறது.

### Art 27:

மதம் சார்ந்த செலவுகளுக்கு (அ) மதத்தை வளர்ப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகளுக்கு வரி விலக்கு பெறும் உரிமை பற்றி குறிப்பிடுகிறது.

### Art 28:

அரசு (ம) அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் மத போதனைகள் மேற்கொள்ள கூடாது எனக் குறிப்பிடுகிறது.

## கல்வி (ம) பண்பாட்டு உரிமை: Art 29 to 30

**Art 29:**

சிறுபான்மையினர் தனது மொழி, எழுத்து, பண்பாடு மத சின்னம், உள்ளிட்ட மதம் தொடர்பான உரிமைகளை பாதுகாத்து, சிறுபான்மையினர் நலனுக்கும் பாதுகாப்பு வழங்குகிறது.

**Art 30:**

சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்களை நிறுவி நிர்வகிக்கும் உரிமை பற்றி குறிப்பிடுகிறது. Art 29 (ம) 30 சிறுபான்மையினர் பாதுகாப்பு தொடர்பாக இருப்பதால், சிறுபான்மையினர் உரிமைகள் என்றும் அழைக்கபடுகிறது.

## அரசியலமைப்பு தீர்வு காணும் உரிமை: Art 32

**Art 32:**

அடிப்படை உரிமைகளை செயலுறுத்துவதற்கான தீர்வு வழிகள் பற்றி குறிப்பிடுகிறது.
**Art 32 இந்திய அரசியலமைப்பின் இதயமும் ஆன்மாவும் போன்றது என கூறியது Dr. B. R. அம்பேத்கார்.**

Art 32 ன் படி உச்சநீதிமன்றமும்,
Art 226 ன் படி உயர் நீதி மன்றமும்,
**5 வகையான ரிட்** உரிமைகளை பெற்றுள்ளது.

இதன் மூலம் அடிப்படை உரிமைகளுக்கு தீர்வு வழங்குகிறது.

**ரிட் உரிமைகள் (அ) நீதி பேராணைகள்:**

(i).ஆட்கொணர் நீதி பொரணைகள்:-

(Write of Habeas corpus)

(ii).செயலுறுத்தும் நீதி பேராணை

(Writ of Manbeas corpus)

(ii). தடையுறுத்தும் நீதி பேராணை:

(Writ of prohibition)

(IV).நெறிமுறையுறுத்தும் நீதி பேராணை

(Writ of certiorari)

(V).தகுதியுறுத்தும் நீதி பேராணை

(Writ of Quo-warranto)

**(I). ஆட்கொணர் நீதி பேராணை:-**

- ஒருவர் அவரது விருப்பத்திற்கு புறம்பாக மற்றொருவர் கட்டுபாட்டிலோ (அ) சட்ட விரோத காவலிலோ வைக்கப்பட்டு அருந்தால் அந்நபரை நீதிமன்றத்தின் முன் கொணர செய்வதாகும்.
- இந்நீதி பேராணையை யார் வேண்டுமானாலும் பயன்படுத்தலாம்.
- பின்வரும் நபர்களுக்கு எதிராக பயன்படுத்த முடியாது.

    1. குற்ற வழக்குகளில் சிறை வைக்கப்பட்டவர்களை விடுதலை செய்ய கோரி.
    2. நாடாளுமன்றம் (அ) சட்டமன்றம்.
    3. நீதிமன்ற அவமதிப்பு செயல்களில் ஈடுபடும் நோக்கில் பயன்படுத்த கூடாது.

**(II). செயலுறுத்தும் நீதி பேராணை:-**

- அரசு அலுவலர் ஒருவர் தனது கடமையை செய்ய தவறும் போது அவ்வராசு அலுவலரை அக்கடமையை மேற்கொள்ள ஆணை பிறப்பிப்பது ஆகும். (கு. த. (ம) ஆளுநர் (ம)த. நீதி தவிர).
- பின்வரும் நபர்களுக்கு எதிராக இந்நீதி பேராணையை பயன்படுத்த முடியாது.
    1. குடியரசு தலைவர்.
    2. ஆளுநர்
    3. தலைமை நீதிபதி
    4. தனியார் (அ) தனிப்பட்ட அமைப்புகள்

**(II). தடையுறுத்தும் நீதி பேராணை:-**

- உச்சநீதி மன்றம் (அ) உயர் நீதி மன்றம் தனக்கு கீழ் உள்ள நீதிமன்றங்களுக்கு அவற்றின் எல்லைக்கு உட்படாத செயலை செய்யாமல் இருக்க ஆணை பிறபிப்பது ஆகும்.
- இந்நீதி பேராணை நீதி துறைக்கு மட்டுமே பயன்படுத்த முடியும்.
- பின்வருபவர்களுக்கு எதிராக பயன்படுத்த முடியாது.
    1. நிர்வாக துறை
    2. சட்டமன்றஅமைப்புக்ள
    3. தனியார் (அ) தனிப்பட்ட அமைப்புகள்

**(IV).நெறிமுறையுறுத்தும் நீதி பேராணை:-**

- உச்சநீதிமன்றம் (அ) உயர் நீதி மன்றம் தனக்கு கீழ் உள்ள நீதி மன்றங்களுக்கு அவற்றின் அதிபார வரம்பை மீறி வழங்கபட்ட தீர்ப்புகளை ரத்து செய்து ஆணை பிறப்பிப்பது ஆகும்.
- நிர்வாக துறையில் அதிகார வரம்பை மீறி செயல்பட்டாலும் அதனையும் ரத்து செய்யலாம்.
- பின்வருபவர்களுக்கு எதிராக பயன்படுத்த முடியாது.
    1. சட்ட மன்ற அமைப்புகள்.
    2. தனியார் (ம) தனிப்பட்ட அமைப்புகள்

**(V).தகுதியுறுத்தும் நீதி பேராணை:-**

- அரசு அலுவலர் ஒருவரை அவர் எந்த தகுதியின் அடிப்படையில் குறிப்பிட்ட பதவியை வகிக்கிறார் (அ) ஒரு பணியை செய்ய உண்மையான தகுதியை பெற்றுள்ளாரா என அறிவதாகும்.
- பின்வருபவர்களுக்கு எதிராக பயன்படுத்த முடியாது.

1.அமைச்சர்

2. தனியார் (அ) தனிப்பட்ட அமைப்புகள்

**Art 33:**

முப்படை வீரர்கள், காவல் துறை உளவுத்துறை ஆகியோருக்கு கடமை நிறைவேற்றம், ஒழுங்கு பராமரிப்பு ஆகியவற்றை கருத்தில் கொண்டு அடிப்படை உரிமைபனை மாற்றி அமைக்க அவர்களின் நாடாளுமன்றம் அதிகாரம் பெற்றுள்ளது என குறிப்பிடுகிறது.

**Art 34:**

ராணுவ ஆட்சி அமலில் இருக்கும் போது குடிமக்களின் அடிப்படை உரிமைகளை மீறி செயல்படும் போது குடிமக்களும் சட்டத்தின் முன் முன்காப்பீடு வழங்க நாடாளுமன்றம் அதிகாரம் பெற்று உள்ளது.

**Art 35:**

அடிப்படை உரிமைகளுக்கு செயல் திறன் அளிப்பதற்காக நாடாளுமன்றம் சட்டம் இயற்றலாம் என குறிப்பிடுகிறது.

# Part – IV

## அரசுக்கு வழிகாட்டும் நெறிமுறை கோட்பாடுகள்(Directive principle of state policy (DPSP) Art 36 -51

- ✓ சட்டங்கள் இயற்றும் போதும், அவற்றை நடைமுறை படுத்தும் போதும் பின்பற்ற வேண்டிய செயல்முறைகள் பற்றி குறிப்பிடுகிறது.
- ✓ DPSP-யின் நோக்கம் மக்கள் நலன் காத்தல்
- ✓ DPSP-யை நீதிமன்றத்தின் மூலம் நடைமுறைபடுத்த இயலாது. (அ) தீர்வு காண இயலாது.
- ✓ **19 வகையான பொது நல** நோக்கங்கள் பற்றி குறிப்பிடுகிறது.

"அரசுக்கு வழிகாட்டும் நெறி முறை கோட்பாடுகள் அரசியலமைப்பின் புது வகையான முக்கியத்துவம்." **-Dr.B.R. அம்பேத்கார்.**

"அடிப்படை உரிமைகள் (ம) அரசுக்கு வழிகாட்டும் நெறிமுறை கோட்பாடுகள் அரசியலமைப்பின் மனசாட்சி" **-கிரான்வில் ஆஸ்டின்**

- DPSP 4 வகைபடும்

1. சமத்துவ (அ)சமூக நலனைஅடைய உதவும் கோட்பாடுகள்:
 Art 38, Art 39,39A, 41, 42, 43A

2. கந்திய கோட்பாடுகள்- Art 40, 43, 43B, 46, 47, 48

3. பன்னாட்டு கோட்பாடுகள் (அ) பன்னாட்டு அமைதியை ஏற்படுத்த உதவும் கோட்பாடுகள்- Art 44, 45, 48A, 49, 50, 51

4. பல்வகை (அ) மற்ற கோட்பாடுகள்- Art 36, 37

**Art 36:**

அரசை பற்றி வளக்குகிறது.

**Art 37:**

**DPSP-**யை செயல்படுத்துவது பற்றி குறிப்பிடுகிறது.
**DPSP-** யை செயல்படுத்த அரசாங்கத்தை நீதி துறை கட்டுப்படுத்த இயலாது, ஆனால் சட்டங்கள் இயற்றும் போதும், அதனை நடைமுறைப்படுத்தும் போதும் DPSP யை பின்பற்றுவது அரசாங்கத்தின் கடமை.

**Art 38:**

அரசு மக்களின் **வாழ்க்கை தரத்தை உயர்த்தி கொள்ள சமமான வாய்ப்பு** வழங்க வேண்டும் என குறிப்பிடுகிறது.

**Art 39:**

ஆண்,பெண் இருபாலருக்கும் **சம வேலைக்கு சம ஊதியம்** வழங்க வேண்டும், மேலும் ஊழியர் நலநனை தவறாக பயன்படுத்த கூடாது என குறிப்பிடுகிறது.
**1976 சம ஊதிய சட்டம்** கொண்டு வரப்பட்டது.

Art 39A:

அரசு மக்களுக்கு **இலவச சட்டஉதவிகளையும்**, ஆலோசனைகளையும் வழங்க வேண்டும்.
உரிமை பணிகள் சட்டம் 1987

**Art 39E:**

குழந்தைகள் சுதந்திரமாகவும், **உடல் ஆரோக்கியத்துடனும்** வாழ வழி செய்கிறது.

**Art 39F:**

குழந்தைகளின் ஆரோக்கியமான வளாச்சி, குந்தைகள் (ம) இளையோர் மீது அரசு கவனத்துடன் செயல்பட்டு சுரண்டலில் இருந்து பாதுகாக்க வேண்டும்.

**Art 40:**

**கிராம பஞ்சாயத்து** அமைப்புகளை அமைக்கவேண்டும்.

**Art 41:**

பொது மக்கள் வேலை (ம) கல்வி கற்க **அரசின் உதவிகளை பெறும் உரிமை** பற்றி குறிப்பிடுகிறது.

**Art 42:**

தொழிலாளர்களுக்கு நியாயமான (ம) மனிதாபிமான பணி சூழல்களுக்கும், மகப்பேறு கால உதவிக்கும் ஏற்பாடு செய்ய வேண்டும்.
**மகப்பேறு நலச் சட்டம் 1961**

**Art 43:**

தொழிலாளர்களுக்கு வாழ்க்கைக்கு ஏற்ற **கூலி வழங்க** வேண்டும், மேலும் குடிசை தொழில்களை வளர்க்க வேண்டும்.

**Art 43A:**

தொழிற்சாலை **மேலாண்மை நடவடிக்கைகளில்** தொழிலாளர்களும் பங்கேற்கலாம் என குறிப்பிடுகிறது.

**Art 44:**

குடிமக்களுக்கு **பொதுவான உரிமையியல் சட்டம்** (அ) civil code ஏற்படுத்த வேண்டும்.

**Art 45:**

**6-14 வயது** வரை உள்ள குழந்தைகளின் குழந்தை பருவம் (ம) அவர்களது கல்வியில் அரசு கவனம் செலுத்த வேண்டும்.

**Art 46:**

தாழத்தப்பட்ட (Sc), பழங்குடியினர்(ST) (ம) இதர பின் தங்கிய பிரிவினர்களின் கல்வி, பொருளாதார நலன்களை உயர்த்த வேண்டும்.

**Art 47:**

ஊட்டசத்தின் தரநிலை, வாழ்க்கை தரம் ஆகியவற்றை மேம்படுத்துவதும், மக்களின் உடல் நலத்தை மேம்படுத்துவதும் **போதை பொருள்களை தடுப்பதும்** அரசின் கடமை.

**Art 48:**

வேளாண்மை (ம) கால்நடை வளர்ப்பை அமைப்பு ரீதியாக்கி **பசுவதையை தடை** செய்ய வேண்டும்.

**Art 48A:**

சுற்றுசூழலை பாதுகாத்து மேம்படுத்துதல் (ம) **காடுகள் (அ) வனங்கள்**,வன உயிரினங்களை பாதுகாக்க வேண்டும்.

**Art 49:**

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த **நினைவு சின்னங்கள்** நினைவடங்கள், நினைவு பொருட்களை பாதுகாக்க வேண்டும்.

**Art 50:**

நிர்வாகம் (அ) ஆட்சி துறையிலிருந்து **நீதித்துறை தனித்து** செயல்பட வேண்டும்.

**Art 51:**

பன்னாட்டு **அமைதி (ம) பாதுகாப்பை** உயர்த்த வேண்டும்.

# PART – IV A

## அடிப்படை கடமைகள் (Fundamental Duties)

**Art – 51 A**

- ✓ **ஸ்வரண்சிங் குழுவின்** பரிந்துரைப்படி 1976 42 – வது சட்ட திருத்தத்தின் படி **PART IV A ( Art 51A)** அரசியரமைப்பில் சேர்க்கப்பட்டது.
- ✓ ஆரம்பத்தில் 10 அடிப்படை கடமைகள் உள்ளது.
- ✓ தற்போது 11 அடிப்படை கடமைகள் உள்ளது.
- ✓ **2002-ல் 86-வது சட்டதிருத்தத்தின் படி 11-வது அடிப்படை கடமை Art 51A(k)-வில் சேர்க்கப்பட்டது**.
- ✓ **(1999 வர்மான குழு ஆராய்ந்தது)**

**A.** அரசியலமைப்பு சட்டப்படி நடத்தல் (ம) தேசிய கொடி, தேசிய சின்னங்களுக்கு மதிப்பளித்தல்.

**B.** நாட்டின் விடுதலை போராட்ட வீரர்களின் உன்னத உணர்வுகளை நினைத்து போற்ற வேண்டும்.

**C.** நாட்டின் இறையாண்மை, ஒற்றுமை, ஒருமைபாட்டை பேணி பாதுகாக்க வேண்டும்.

**D.** நாட்டின் பாதுகாப்பில் அக்கறை கொள்ள வேண்டும். தேவை ஏற்பட்டால் பாதுகாப்பு பணியில் ஈடுபட வேண்டும்.

**E.** சகோதரத்துவத்தையும், நல்லிணக்கத்தையும் உருவாக்க முனைய வேண்டும்.

**F.** நமது பண்பாடு, (ம) பன்முக பாரம்பரிய பண்பாட்டின் மேன்மையை மதித்து பாதுகாக்க வேண்டும்.

**G.** காடுகள், ஏரிகள், ஆறுகள், (ம) வன விலங்குகள் போன்ற இயற்கை சுற்று புற சூழலை பாதுகாத்தல் (ம) மேம்படுத்தி தரம் உயர்த்துதல், வாழும் உயிரினங்களின் மீது இரக்கம் கொள்ளுதல்.

**H.** அறிவியல் மனப்பான்மை, மனித நேயம், ஆய்வு மனப்பான்மை ஆகியவற்றை மேம்படுத்த வேண்டும்.

**I.** நாட்டின் பொது சொத்துகளை அக்கறையுடன் பாதுகாக்க வேண்டும், வன்முறையை கைவிட வேண்டும்.

**J.** அனைத்து துறைகளிலும் மிகச் சிறந்த நிலையை அடைய முயற்சி செய்தல், நமது நாடு தொடர்ந்து முன்னேறி உயர்ந்த நிலையை அடைய பாடுபட வேண்டும்.

**K. 6 to 14 (2002 86 சட்டத்திருத்தம்) வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு கல்வி பெற (பெற்றோர் (அ) பாதுகாவலர்) வாய்ப்பை ஏற்படுத்தி தர வேண்டும்.**

# PART – V

## The union government (மத்திய அரசு (அ) ஒன்றிய அரசு) Art 52 to 151

- முத்திய அரசு 5 பிரிவுகளாக பிரிக்கபட்டடுள்ளது.

1. மத்திய செயலாட்சி குழு **(52 to 78)**

   (The Union Exe cutives)

2. பாராளுமன்றம் **(79 – 122)**

3. குடியரசு தலைவரின் சட்டமன்ற அதிகாரங்கள் **123**

4. உச்சநீதி மன்றம் (அ) இந்திய நீதி துறை **(124 – 147)**

5. CAG- **(Art 148 – 151)**

## 1. மத்திய செயலாட்சி குழு Art 52 to 78

மத்திய அரசு நிர்வாகம், நீதிதுறை, சட்ட மன்றம் என 3 அங்கங்களை கொண்டது. மத்திய செயலாட்சி குழுவில் குடியரசு தலைவர், துணை குடியரசு தலைவர், பிரதமர், அமைச்சரவை, அட்டார்ணி ஜெனரலை உள்ளடக்கியது.

### குடியரசு தலைவர் Art 52-62

- ✓ இந்திய குடியரசின் தலைவராகவும், இந்திய ஒன்றியத்தின் நிர்வாக தலைவராகவும் விளங்குகிறார்.
- ✓ நாட்டின் முதல் குடிமகன்
- ✓ நமது அரசின் தலைவராக திகழ்கிறார்
- ✓ அரசியலமைப்பு அதிகார வரிசையின் (protocol) முதலிடத்தில் உள்ளார்.
- ✓ இந்தியாவில் நடைபெறும்அனைத்து நடவடிக்கைகளும் இவரது பெயரில் நடை பெறுகிறது.
- ✓ முப்படைகளின் தலைமை தளபதியாக உள்ளார்

  (ஜெனரல், அட்மிரல், ஏர்சீப்,மார்ஷல்)

**Art 52:**

இந்திய குடியரசிற்கு குடியரசு தலைவர் இருக்க வேண்டும் எனகுறிப்பிடப்படுகிறது.

**Art 53:**

இந்திய ஒன்றியத்தின் அதிகாரங்கள் அனைத்தும் குடியரசு தலைவரிடம் உள்ளது. (Exicutive Power of the Union)

**Art 54:**

- ✓ குடியரசு தலைவர் தேர்தல் பற்றி குறிப்பிடுகிறது.
- ✓ தேர்தலை நடத்துவது இந்திய தேர்தல் ஆணையம்
- ✓ குடியரசு தலைவர் தேர்தல் தொடர்பான வழக்குகளை விசாரிப்பது உச்சநீதிமன்றம்.
- ✓ பாராளுமன்ற இரு அவை (ராஜ் சபா, லோக்சபா) தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், மாநில சட்ட பேரவைகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள்,Union பிரதேச சட்ட பேரவைகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் ஆகியோர் அடங்கிய வாக்காளர் குழாம் மூலம் ஒற்றை மாற்று வாக்கு (Electrol college) முறையில் (Prefrencial system) மறைமுகமாக தேர்ந்தெடுக்கிறார்.

**1992 70 –வது சட்டதிருத்தத்தின் படி பாண்டிச்சேரி, டெல்லி யூனியன் பிரதேச தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட பேரவை உறுப்பினர்களும் குடியரசு தலைவர் தேர்தலில் பங்கு பெற அனுமதிக்கப்பட்டது**.

**Art 55:**

குடியர தலைவரை தேர்ந்தெடுக்கும் முறைகள் (Manner of Election of president) பற்றி குறிப்பிடுகிறது.

குடியரசு தலைவர் தேர்தலில் பங்கு பெறும் வாக்காளர்கள் எண்ணிக்கை **4,896**

| | |
|---|---|
| State and UTs MLA'S | 4120 |
| MP'S | 779 |
| | 4896 |

**ஒரு சட்ட மன்ற உறுப்பினரின் வாக்கு மதிப்பு பின்வருமாறு கணக்கிடபடுகிறது.**

$$\frac{\text{மாநிலத்தின் மொத்த மக்கள் தொகை}}{\text{மாநிலத்தின் மொத்த தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட உறுப்பினாகள்}} \times \frac{1}{1000}$$

$$= \frac{\text{Total poputation}}{\text{Total MLA's}} \times \frac{1}{1000}$$

**Ex:**

தமிழ் நாட்டின் 1971 மக்கள் தொகை 41,199,168

$$\frac{41199168}{234} \times \frac{1}{1000}$$

**ஒரு MLA-ன் வாக்கு மதிப்பு =176**

MLA வாக்கு மதிப்பு அதிகம் பெற்றுள்ள மாநிலம் **உத்திர பிரதேசம் (208)**
MLA- வாக்கு மதிப்பு குறைவாக உள்ள மாநிலம் **சிக்கிம் (7)** (32 Total MLA'S)
**ஒரு பாராளுமன்ற உறுப்பினரின் வாக்கு மதிப்பு (MP'S) பின்வருமாறு கணக்கிடப்படுகிறது.**

$$\frac{\text{மாநிலங்களின் மொத்த வாக்கு மதிப்பு}}{\text{பாராளுமன்றத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட மொத்த உறுப்பினாகள்}}$$

1MlaTN = 234 × 176 545-2=543

$$\frac{245}{790} - \frac{12}{14} = \frac{233}{776}$$

$$=\frac{5,49,474}{776}$$

**1mp's ன் வாக்குமதிப்பு 708**

(மாநிலங்கள் (ம) யூனியன் மொத்த மதிப்பு)

- ✓ **2001 84 – வது** சட்டதிருத்தத்தின் படி சட்ட மன்ற (MLA) (ம) நாடாளுமன்ற (MP) உறுப்பினர்களின் வாக்கு மதிப்பை கணக்கிடுவதற்கு **1971** மக்கள் தொகையை **2026** வரை பயன்படுத்த அனுமதிக்கப்பட்டது.
- ✓ குடியரசு தலைவர் வேட்பாளரின் பெயரை **50** வாக்காளர்கள் முன்மொழிய வேண்டும். **50** வாக்காளர்கள் வழிமொழிய வேண்டும்.
- ✓ குடியரசு தலைவர் வேட்பாளர் வைப்பு தொகை **15,000.**
- ✓ மொத்த வாக்குகளில் **1/6** பங்கிற்கு குறைவாக பெற்றால் டெபாசிட் இழப்பார்.

## Art 56:

- ✓ குடியரசு தலைவரின் பதவிகாலம் பற்றி குறிப்பிடுகிறது.
- ✓ பதவி காலம் **5** ஆண்டுகள்.
- ✓ பதவி காலம் முடிந்தும் புதிய குடியரசு தலைவர் தேர்ந்தெடுக்கும் வரைபதவியில் இருக்குலாம்.
- ✓ பதவி விலகல் கடிதத்தை துணை குடியரசு தலைவரிடம் அளிக்க வேண்டும்.
- ✓ துணை குடியரசு தலைவர், குடியரசு தலைவரின் பதவீலகலை உடனடியாக மக்களவை சபா நாயகர்-க்கு தெரிவிப்பார்.

## Art 57:

குடியரசு தலைவர் மீண்டும் எத்தனை எத்தனை முறை வேண்டுமானாலும் போட்டியிட்டு தேர்ந்தெடுக்கபடலாம்.

**Art 58:**

**குடியரசு தலைவர் தகுதிகள் பற்றி குறிப்பிடுகிறது**.

1. இந்திய குடிமகன்
2. குறைந்த பட்ச வயது **35** நிரம்பியிருக்க வேண்டும்.
3. மக்களவைக்கு தேர்ந்தெடுப்பதற்கான தகுதிகள் பெற்று இருக்க வேண்டும்.
4. ஊதியம் (ஆதாயம்) தரும் இரட்டை பதவி வகிக்கக் கூடாது.
5. சட்டமன்ற (அ) நாடாளுமன்ற உறுப்பினராக இருக்க கூடாது.

**Art 59:**

குடியரசு தலைவர் பதவிக்கான **வரைமுறைகள்** பற்றி குறிப்பிடுகிறது.

**Art 60:**

குடியரசு தலைவர் **பதவி பிரமாணம்**, உறுதி மொழிகள் பற்றி குறிப்பிடுகிறது.
பதவி பிரமணம் செய்து வைப்பவர் உச்சநீதி மன்ற தலைமை நீதிபதி.

**Art 61:**

- ✓ குடியரசு தலைவரை குற்ற விசாரனை மூலம் **பதவி நீக்கம்** (impeachment) செய்து பற்றி குறிப்பிடுகிறது.
- ✓ குடியரசு தலைவர் மூதான குற்றச்சாட்டு தீர்மானத்தை நாடாளுமன்றத்தின் இரு அவைகளில் எந்த அவையிலும் முதலில் அறிமுகப்படுத்தி **¼ பங்கு** உறுப்பினர்கள் ஆதரவுடன் நிறைவேற்றி மற்றொர அவைக்கு அனுப்ப வேண்டும்.
- ✓ குற்றச்சாட்டு தீர்மானத்தின் நகல் **14 நாட்களுக்கு முன்** குடியரசு தலைவருக்கு வழங்க வேண்டும்.
- ✓ நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் **2/3 பங்கு சிறப்பு பெருபான்மை தீர்மானம்** மூலம் பதவி நீக்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் குடியரசு தலைவர் பதவி நீக்கம் செய்யபடுவார்.

**Art 62:**

குடியரசு தலைவர் பணி காலியிடத்திற்கு **6 மாதத்திற்குள் தேர்தல்** நடத்த வேண்டும்.

## குடியரசு தலைவரின் அதிகாரங்கள்:-

### 1. நிர்வாக அதிகாரங்கள்: (Executive powers)

- ✓ இந்திய ஒன்றியத்தில் நிர்வாக அதிகாரம் (பெயரளவு அதிகாரம்) பெற்றுள்ளார்.
- ✓ **Art 77 –** ன் படி இந்திய அரசாங்கம் மேற்கொள்ளும் அனைத்தும் அலுவல் பணிகளும் குடியரசு தலைவரின் அனுமதி பெற்ற பின்னரே நடைமுறைக்கு வரும்.
- ✓ **Art 299–** ன் படி இந்திய அரசாங்கம் மேற்கொள்ளும் சர்வதேச ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகள் கு. தலைவர் ஒப்புதல் பெற்ற பின்னரே நடைமுறைக்கு வரும்.

- ✓ நாடளுமன்றத்தின் ஒப்புதல் உடன் ஒரு நாட்டின் மீது போர் பிரகடனம் மேற்கொள்கிறார். (அ) திரும்ப பெறுகிறார்.
- ✓ முப்படை தளபதிகள் (ஜெனரல், அட்மிரல், ஏர்சிப் மார்ஷல்) மாநில ஆளுநர்கள், யூனியன் பிரதேச துணை நிலை ஆளுநர்கள், பிரதமர், பிரதமர் பரிந்துரையின் படி அமைச்சர்கள், UPSC தலைவர் (ம) உறுப்பினர்கள், தலைமை தேர்தல் ஆணையர் (ம) தேர்தல் ஆணையர்கள் நிதி குழு தலைவர் (ம) உறுப்பினர்கள்,CAG ஆகியோரை நியமிக்கிறார்.
- ✓ அமைச்சரவையின் பரிந்துரையின் படி வெளிநாடுகளுக்கான இந்திய தூதுவர்களை நியமிக்கிறார்.

- ✓ ஆட்சி மொழி ஆணையம், தேசிய பழங்குடியினர் ஆணையம், சிறுபான்மையினர் ஆணையம், தேசிய மகளிர் ஆணையம்,சிறுபான்மையினர் மொழிக்கான தனிஅலுவலர் ஆகியவற்றை நியமிக்கிறார்.
- ✓ நாட்டி எந்த பகுதியையும் பின்தங்கிய பகுதியாக அறிவிக்க அதிகாரம் பெற்றுள்ளார்.
- ✓ **Art 361-ன் படி குடியரசு தலைவர் (ம) ஆளுநர் தமது அதிகாரங்கள் கடமைகள் தொடர்பாக எந்த நீதி மன்றத்திலும் ஆஜராக தேவையில்லை.**

**2. சட்டமன்ற அதிகாரங்கள்:- (Legislative powers)**

- ✓ நாடாளுமன்றத்தின் ஒரு பகுதியே குடியரசு தலைவர்
- ✓ நாடாளுமன்றத்தை **குறைந்தபடசம் ஆண்டிற்கு 2** முறையாவது கூட்ட அதிகாரம் பெற்றுள்ளார்.
- ✓ **Art 87-ன்** ஒரு ஆண்டின் முதல் நாடாளுமன்ற கூட்ட தொடரை துவக்கி வைத்து உரையாற்றுவார்.
- ✓ **Art 85-ன் படி** நாடாளுமன்ற கூட்டத்தொடரை முடிவுக்கு கொண்டு வரவோ (அ) மக்களவையை கலைக்கவோ அதிகாரம் பெற்று உள்ளார்.
- ✓ குடியரசு தலைவர் அனுமதியின்றி எந்த மசோதவும் சட்டம் ஆகாது.
- ✓ சபாநாயகர் (ம) துணை சபாநாயகர் பதவி காலியாக இருக்கும் போது மக்களவை உறுப்பினர் ஒருவரை தற்காலிக சபாநாயகராக நியமிப்பார்.
- ✓ **Art 108-ன் படி** பாராளுமன்ற கூட்டு கூட்டத்தை கூட்டும் அதிகாரம் பெற்றுள்ளர்.(**தலைமை சபாநாயகர்**)
- ✓ **Art 80 (3)-ன் படி** கலை, இலக்கியம், அறிவியல் சமூக சேவை ஆகிய துறைகளில் சிறந்து விளங்கும் **12 நபர்களை ராஜ்ய சபாவிற்கு** நியமிப்பார்.
- ✓ **Art 331-ன் படி** மக்களவையில் ஆங்கிலோ இந்திய பிரதிநித்துவம் இல்லாத போது **2 ஆங்கிலோ** இந்திய உறுப்பினர்களை நியமிப்பார்.
- ✓ **Art 123-ன் படி** நாடாளுமன்றம் கூடாத காலங்களில் அவசர சட்டம் பிறப்பிக்க அதிகாரம் பெற்றுள்ளார் (அதனை திரும்ப பெறவும்அதிகாரம் பெற்றுள்ளார்)
- ✓ **ஆவசர சட்டத்திற்கு பாராளுமன்றம் கூடிய 6 வாரத்திற்குள் ஒப்புதல் பெற வேண்டும். இல்லையேல் அச்சட்டம் செயலிழந்து விடும்**.
- ✓ பாராளுமன்றத்தில் நிறைவேற்றிய மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்க (அ) நிறுத்தி வைக்க (அ) திருப்பி அனுப்ப அதிகாரம் பெற்றுள்ளார்.
- ✓ ஆனால் **மசோதா (Money Bill)** (ம) **அரசியலமைப்பு சட்டத் திருத்த மசோதாக்களை திருப்பி அனுப்ப இயலாது கட்டாயம் ஒப்புதல் வழங்க வேண்டும்.**

3. **நிதி அதிகாரங்கள்:(Financial powers)**

- ✓ குடியரசு தலைவரின் அனுமதியின்றி நிதி (ம) பண மசோதாக்களை நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்த இயலாது.
- ✓ **Art 267-ன் படி** இந்திய அரசின் எதிர்பாரா செலவு நிதியை (Contingency fund of india)நிர்வாகிக்கிறார்.
- ✓ இயற்கை பேரிடர்கள். (ம) அவசர காலங்களுக்கு இந்தியாவிலிருந்து முன்பணம் வழங்குவார்.
- ✓ மத்திய மாநில அரசுக்கு இடையே நிதியை பகிர்ந்து அளிக்க **5 ஆண்டிற்கு ஒரு** முறை நிதி குழுவை அமைப்பார்.
- ✓ நாடாளுமன்றத்தில் பட்ஜெட் தாக்கல் செய்வதற்கு முன் ஒப்புதல் அளிப்பார்.
- ✓ குடியரசு தலைவரின் பரிந்துரை பெற்ற பின்னரே மானிய கோரிக்கைக்ள மக்களவையில் அறிமுகப்படுத்த முடியும்.

4. **நீதி அதிகாரங்கள்: (Judeciul powers)**

- ✓ உச்சநீதிமன்றம் (ம) உயர்நீதி மன்ற நீதிபதிகளைநியமிக்கிறார்.
- ✓ **Art 143 –ன்** படி உச்ச நீதி மன்றத்திடம் ஆலோசனை பெறுவார்.
- ✓ **Art 72-ன் படி** குற்றவாளிகளுக்கு தண்டனை நிறுத்தி வைக்க (அ)குறைக்க (அ) மன்னிக்க (ரத்து செய்ய) அதிகாரம் பெற்றுள்ளார்.(Art 72-ன் படி மரண தண்டனையையும் ரத்து செய்யும் அதிகாரம் குடியரசு தலைவர் பெற்றுள்ளார்) ஆனால் **Art 161-ன் படி** ஆளுநருக்கு மரண தண்டனையை ரத்து செய்யும் அதிகாரம் இல்லை.

5. **நெருக்கடி நிலை (அ) அவசர நிலை அதிகாரங்களா:-( Emergency powers)**

- ➢ குடியரசு தலைவர் 3 வகையான நெருக்கடி நிலை அதிகாரங்களை பெற்றுள்ளார்.

## i. தேசிய நெருக்கடி (Natuibal Emergency)

**Art 352**

- ✓ போர் (அ) அயல் நாட்டு ஆக்கிரமிப்பு (அ) உள்நாட்டு கலவரம் ஆகிய காரணங்களுக்காக நாடு முழுவதுமோ (அ) நாட்டின் ஏதாவது ஒரு பகுதிக்கோ தேசிய நெருக்கடி அறிவிப்பார்.
- ✓ **1978 44-வது** சட்டத்திருத்தம் அவசர நிலை பிரகடனங்களை தவறாக பயன்படத்துவதிலிருந்து பாதுகாப்பை வழங்கியது.
- ✓ மேலும் அமைச்சரவையின் ஆலோசனை படியே அவசர நிலை பிரகடனங்களை அறிவிக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தியது.
- ✓ **தேசிய நெருக்கடி அறிவிக்கப்பட்ட 1 மாதத்திற்குள் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் 2/3 பங்கு சிறப்பு பெரும்பாண்மை ஆதரவுடன் ஒப்புதல் பெற வேண்டும்**.
- ✓ 1976 42-வது சட்டத்திருத்தத்தின் படி ஒப்புதல் பெறுவதற்கான கால அளவு 2 மாதமாக நீட்டிக்கப்பட்டது, 1978 44-வது சட்டத்திருத்தத்தின் படி ஒப்புதல் கால அளவு மீண்டும் 1 மாதமாக குறைக்கப்பட்டது.

- ✓ **தேசிய நெருக்கடியே பாராளுமன்ற ஒப்புதலுடன் ஒரு முறையில் 6 மாதத்திற்கு மட்டுமே அறிவிக்க முடியும், ஒவ்வொரு 6 மாதத்திற்கு ஒரு முறை பாராளுமன்ற ஒப்புதலுடன் எவ்வளவு காலத்திற்கும் தேசிய நெருக்கடியே நீட்டிக்கலாம்**.

**தேசிய நெருக்கடியின் விளைவுகள்:- Art -353**

**1.**அடிப்படை உரிமைகளுக்கு பாதிப்பு ஏற்படும்

Art 358-ன் படி Art 19 தானே செயலிழந்துவிடும்

Art 359-ன் படி Art 20 (ம) 21-ஐ ரத்து செய்ய இயலாது. **(ஆயுத கிளர்ச்சிக்காக 1978 44-ச.தி Art 19ஐ நிறுத்தி வைக்க முடியாது).**

**2.** சட்டமன்றம் (ம) நாடாளுமன்றத்தின் ஆயட்காலத்தில் பாதிப்பு ஏற்படும்.
தேசிய நெருக்கடி அமலில் இருக்கும் போது மக்களவை மற்றும் சட்டப்பேரவையின் ஆயுட்களத்தை ஆண்டு வரை நீட்டிக்கலாம்.

**3.** மத்திய, மாநில உறவுகளின் பாதிப்பு ஏற்படும்.
தேசிய நெருக்கடி அறிவிக்கப்பட்டவுடன் மத்திய மாநில அரசுகளின் அதிகாரம் பாராளுமன்றத்திற்கு மாற்றப்படும்.

**<u>G.P</u>**

- ✓ தேசிய நெருக்கடியை எதிர்த்து உச்சநீதி மன்றத்தில் வழக்கு தொடரலாம்.
- ✓ ஜம்மு காஷ்மீரில் அம்மாநில சட்டமன்றத்தின் ஒப்புதல் பெற்ற பின்னரே தேசிய நெருக்கடி அறிவிக்க முடியும்.
- ✓ **1978-ல் தேசிய நெருக்கடி பற்றி ஆராய ஜனதா அரசாங்கம் ஷ கமிஷனை அமைத்தது.**
- ✓ **தேசிய நெருக்கடி இது வரை 3 முறை பயன்படுத்தப்பட்டுள்ளது.**

1. 1962- 68 - **இந்திய – சீனப் போர்.**
2. 1971-77 - **இந்தியா – பாகிஸ்தான் போர்** (இந்திராகாந்தி காலத்தில் அறிவிகக்ப்பட்டு ஜனதா அரசு காலத்தில் நீக்கப்பட்டது.)
3. 1975-77 – **உள்நாட்டு கலவரம்**.

## மாநில நெருக்கடி :Art 356 and 365

- ✓ **Art 355-**ன் படி மாநிலத்தில் முறையாக ஆட்சி நடைபெறுவதை உறுதி செய்வது மத்திய அரசின் கடமை.
- ✓ மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து அரசியலமைப்பு இயங்கும்நிலை செயலற்று போகும் போது ஆளுநரின் பரிந்துரைபடி (அ) மாநில நிர்வாகத்தில் மத்திய அரசுக்கு (கு.த)திருப்தி இல்லாத போது **கு.த. Art 356 –ன் படி** மாநில நெருக்கடியை அறிவிப்பார்.
- ✓ மத்திய அரசு இடும் கட்டளைகளை மாநில அரசு ஏற்க மறுத்தால், **Art 365-ன்** படி குடியரசு தலைவர் மாநில நெருக்கடியை அறிவிப்பார்.
- ✓ மாநில நெருக்கடி (அ) குடியரசு தலைவர் ஆட்சி அமல்படுத்தப்பட்டால் குடியரசு தலைவர் ஆட்சி சட்டமன்றத்தை முடக்கி வைக்கலாம்; (Suspension) (அ) கலைக்கலாம் (Disrolve)

- ✓ **மாநில நெருக்கடிஅறிவிக்கப்பட்ட 2 மாதத்திற்குள் பாராளுமன்றத்தின் ஒப்புதல் பெற வேண்டும்.**
- ✓ **ஒரே முறையில் மாநில நெருக்கடியை 6 மாதத்திற்கு மட்டுமே அறிவிக்க முடியும், ஒவ்வொரு 6 மாதத்திற்கு ஒரு முறை பாராளுமன்றத்தின் ஒப்புதல்- உடன் அதிக பட்சம் 3 ஆண்டுகளுக்கு நீட்டிக்கலாம் ஆனால் பஞ்சாபில் 5 ஆண்டுகள் (1987 – 92) குடியரசு தலைவர் ஆட்சி செயல்படுத்தப்பட்டது.**
- ✓ மாநில நெருக்கடியை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்கு தொடரலாம்.∴.
- ✓ இது வரை 110 முறைக்கு மேல் மாநில நெருக்கடி பயன்படுத்தப்பட்டுள்ளது.
- ✓ **முதலில் பயன்படுத்தப்பட்ட மாநிலம் பஞசாப் (1951)**
- ✓ அதிக முறை பயன்படுத்தபட்ட மாநிலம் உத்திரபிரதேசம், கேரளா (தலா 9 முறை)
- ✓ நீண்ட காலம் பயன்படுத்தப்பட்டது பஞசாப் (1987+1992)
- ✓ கடைசியாக பயன்படுத்தப்பட்ட மாநிலம் -
- ✓ **TN-ல் இது வரை 4 முறை பயன்படுத்தப்பட்டு உள்ளது.**
  1. 1976 – 77 தி.மு.க அரசாங்கம் (M- கருணாநிதி)
  2. 1980 அ.இ.அ.தி.மு.க (M- MGR)
  3. 1988 – 89 அ.இ.அ.தி.மு.க( N- ஜனாகிராமசந்திரன்)
  4. 1991 – தி.மு.க அரசாங்கம் (M- கருணநிதி)

## நிதி நெருக்கடி: Art 360

நாடு முழுவதுமோ (அ) நாட்டின் ஏதாவது ஒரு பகுதியிலோ நிதி நிலை சீர்குலையும் போது Art 360 – ன் படி குடியரசு தலைவர் நிதி நெருக்கடியை அறிவிப்பார்.

**நிதி நெருக்கடி அறிவிக்கப்பட்ட 2 மாதத்திற்குள் பாராளுமன்றத்தின் ஒப்புதல் பெற வேண்டும்.**

**நிதி நெருக்கடியின் விளைவுகள்:-**

- ✓ மத்திய (ம) மாநில அரசு ஊழியர்களின் சம்பளம் (ம)படிகளை குறைக்கலாம் (அ) நிறுத்தி வைக்கலாம்.
- ✓ உச்சநீதிமன்ற (ம) உயர்நீதி மன்ற நீதிபதிகளின் சம்பளம் (ம) படிகளை குறைக்கலாம்(அ) நிறுத்தி வைக்கலாம்.
- ✓ பாராளுமன்றம் (ம) மாநில சட்ட மன்றங்களில் நிறைவேற்றப்பட்ட நிதி (ம) பண மசோதாக்களை நிறுத்தி வைக்கலாம்.
- ✓ குடியரசு தலைவரின் சம்பளம், படிகளை குறைக்கவோ நிறுத்தி வைக்கவோ முடியாது.
- ✓ **ஜம்மு காஷ்மீரில் மட்டும் நிதி நெருக்கடியை அறிவிக்க இயலாது.**
- ✓ **நிதி நெருக்கடி இதுவரை பயன்படுத்தபடவில்லை.**

## துணை குடியரசு தலைவர் Art 63 – 73

### Art 63:-

- ✓ குடியரசு தலைவருக்கு அடுத்த நிலையில் துணை குடியரசு தலைவர் ஒருவர் இருக்க வேண்டும் என குறிப்பிடுகிறது.

- ✓ **Art 64:-**
- ✓ துணை குடியரசு தலைவர் **தனது பதவி வழியே (Ex- officio)chairmen மாநிலங்களவை தலைவராக செயல்படுவார்** என குறிப்பிடுகிறது.
- ✓ துணை குடியரசு தலைவர் குடியரசு தலைவர் பொறுப்பை வகிக்கும் போது மாநிலங்களவை தலைவராக செயல்பட முடியாது.

**Art 65:**

- ✓ து.கு. தலைவரின் பணிகள் பற்றி குறிப்பிடுகிறது.
- ✓ அரசியலமைப்பு அதிகார வரிசையில் 2-ம் இடத்தில் உள்ளார்.
- ✓ குடியரசு தலைவர் உடல்நலக்குறைவு, அயல் நாட்டு பயணம் ஆகிய காரணங்களால் அவரது பணியை ஆற்ற இயலாத போது து.கு. தலைவர் குடியரசு தலைவரின் பணிகளை மேற்கொள்வார்.
- ✓ குடியரசு தலைவரின் இறப்பு (அ) பதவி விலகல் (அ)பதவி நீக்கம் ஆகிய காரணங்களால் ஏற்படும் காலியிடத்தில் அதிக பட்சம் 6 மாதம் வரை குடியரசு தலைவர் பொறுப்பை வகிப்பார். (குடியரசு தலைவர் பொறுப்பை வகிக்கும் போது கு.தலைவருக்கான அனைத்து அதிகாரங்ளையும், சம்பளம் (ம) படிகளையும் பெறுவார்.)
- ✓ மாநிலங்களவை வாக்கெடுப்பில் சம நிலை ஏற்படும் போது **து.கு. தலைவர் (ராஜ்ய சபை தலைவர்) முடிவு செய் வாக்கை (Casting Uote) அளிக்க இயலாது. (கூட்டு கூட்டத்திற்கு இவர் தலைமை ஏற்க முடியாது.** மாநிலங்களவை து.தலைவர் தலைமை ஏற்கலாம்).

**Art 66:-**

- ✓ துணை குடியரசு தலைவர் தேர்தல் பற்றி குறிப்பிடுகிறது.
- ✓ தேர்தலை நடத்துவது இந்தியதேர்தல் ஆணையம்.
- ✓ தேர்தல் தொடர்பான வழக்குகளை விசாரிப்பது உச்சநீதி மன்றம்

**தகுதிகள்:-**

- ✓ இந்திய குடிமகன்
- ✓ குறைந்தபட்ச வயது **35**
- ✓ ராஜ் சபா உறுப்பினர்களுக்கான தகுதிகளையும் (வயதை தவிர) (ம) குடியரசு தலைவருக்கான தகுதிகளையும் பெற்று இருக்க வேண்டும்.
- ✓ பதவி விலகல் கடிதத்தை குடியரசு தலைவரிடம்வழங்க வேண்டும்.
- ✓ நாடாளுமன்ற இரு அவை உறுப்பினர்கள் (ராஜ்யசபா, லோக் சபா) அடங்கிய வாக்காளர் குழாம் (Electrolcollege) மூலம் ஒற்றை மாற்று வாக்கு முறையில் மறைமுகமாக து.கு.த தேர்ந்தெடுக்கப்படுவார். **(நாடாளுமன்ற நியமன உறுப்பினர்களும் வாக்களிக்க தகுதி உடையவர்கள்).**

**Art 67:-**

- ✓ து.கு. தலைவரின் பதவி காலம் பற்றி குறிப்பிடுகிறது.
- ✓ புதவி காலம் 5 ஆண்டுகள்

- ✓ மீண்டும் எத்தனை முறை வேண்டுமானலும் தேர்தலில் போட்டியிட்டு தேர்ந்தெடுக்கப்படலாம்.

**Art 68:-**

- ✓ து.கு.தலைவர் **(பொறுப்பு ஒப்படைக்கும் வரை)** தனது பதவி காலம் முடிந்தும் புதிய து.கு.தலைவர் தேர்ந்தெடுக்கும் வரை பதவியில் இருக்கலாம் என குறிப்பிடுகிறது.

**Art 69:**

- ✓ து.கு.தலைவரின் பதவி பிரமாணம் பற்றி குறிப்பிடுகிறது.
- ✓ பதவி பிரமாணம் செய்து வைப்பவர் குடியரசு தலைவர் (அ) அவரால் நியமிக்கப்பட்ட நபர்.

**Art 70:-**

- ✓ து.கு.தலைவர் குடியரசு தலைவரின் பணிகளை மேற்கொள்வது பற்றி குறிப்பிடுகிறது.

**துணை குடியரசு தலைவரின் பதவி நீக்கம்:-**

- ✓ து.கு.தலைவர்மீதான குற்றச்சாட்டு தீர்மானம் **முதலில் ராஜ்ய சபையில் மட்டுமே** கொண்டு வர வேண்டும்.
- ✓ குற்றச்சாட்டு தீர்மானம் ராஜ்ய சபையில் நிறைவேற்றபட்டு **14 நாட்களுக்குள்** லோக் சபாவிற்கு அனுப்ப வேண்டும்.
- ✓ குற்றச்சாட்டு தீர்மானம் நகலை **14 நாட்களுக்கு, முன் து.கு.தலைவருக்கு** வழங்க வேண்டும்.
- ✓ நாடாளுமன்ற **இரு அவைகளிலும் 2/3 பங்கு சிறப்பு பெரும்பான்மை தீர்மானம்** மூலம் பதவி நீக்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் பதவி நீக்கம் செய்யபடுவார்.

**Art 71:-**

- ✓ குடியரசு தலைவர் (ம) து.கு.தலைவர் தேர்தல் தொடர்பான பிரச்சனைகள் (ம) சிக்கல்களை (உச்சநீதிமன்றம்) தீர்த்து வைப்பது பற்றி குறிப்பிடுகிறது.

**Art 72:-**

- ✓ குடியரசு தலைவரின் **பொது மன்னிப்பு அதிகாரம்** பற்றி குறிப்பிடுகிறது.

**Art 73:-**

- ✓ மத்திய செயல் அதிகாரங்கள் (அ) நிர்வாக அதிகாரங்களை (Extension of Executive powers) விரிவாக்கம் (ம) நீட்டிப்பு செய்வத பற்றி குறிப்பிடபட்டுள்ளது.

## மத்திய அமைச்சரவை (அ) அமைச்சர்கள் குழு Council of ministers Art 74-75

**Art 74:-**

- ✓ குடியரசு தலைவருக்கு உதவ (ம) ஆலோசனை வழங்க பிரதமரை தலைவராக கொண்ட அமைச்சரவை (அ) அமைச்சர்கள் குழு இருக்க வேண்டும் என குறிப்பிடுகிறது.
- ✓ **1976 42 –** வது சட்டதிருத்தம் குடியரசு தலைவர் அமைச்சரவையின் ஆலோசனைக்கு கட்டுபட்டவர் என குறிப்பிடுக்றது.
- ✓ **1978 44 –**வது சட்டதிருத்தின் படி குடியரசு தலைவர் அமைச்சரவையின் ஆலோசனையை மறு பரிசிலனைக்கு பின் அமைச்சரவையின் ஆலோசனை படியே செயல்பட வேண்டும்.
- ✓ அமைச்சர்கள் பாராளுமன்றத்திற்கு வெளியேயும் (பாராளுமன்ற உறுப்பினர் அல்லாதவரை) நியமிக்கபடலாம். ஆனால் அமைச்சர் பதவி ஏற்ற **6 மாதத்திற்குள்** பாராளுமன்ற இரு அவைகளில் ஏதாவது ஒரு அவையில் உறுப்பினராக வேண்டும்.
- ✓ **2003 91-வது சட்டத்திருத்தத்தின் படி பிரதமர் உட்பட மத்திய அமைச்சர்கள் எண்ணிக்கை மக்களவை உறுப்பினர் எண்ணிக்கயில் 15%-க்கு மேல் இருக்க கூடாது என அறிவிக்கப்பட்டது.**
- ✓ (நடைமுறைக்கு வந்த நாள் 1.1.2004)
- ✓ **மத்திய அமைச்சர்கள் 3 தகுதிகளில் நியமிக்கபடுகின்றனர்.**

1. கேபினட் அமைச்சர்கள் (அ) மூத்த அமைச்சர்கள்
2. ராஜாங்க அமைச்சர்கள் (அ) தனி பொறுப்பு அமைச்சர்கள்
3. இணை (அ) துணை அமைச்சர்கள்

**1. கேபினட் அமைச்சர்கள் (அ) மூத்த அமைச்சர்கள்:-**

- ✓ துறைகளுக்கு தலைமை பொறுப்பு வகிக்கின்றனர்.
- ✓ அரசின் (அ) அரசாங்கத்தின் கொள்கைகளையும், முடிவுகளையும் வகுக்கின்றனர்.
- ✓ கேபினட் (அ) அமைச்சரவை கூட்டத்தில் கலந்து கொள்ள தகுதியுடையவர்கள்.

**2. ராஜாங்க (அ) தனி பொறுப்பு அமைச்சர்கள்:-**

- ✓ பல்வேறு இலாக்காகளுக்கு (சிறிய துறைகள்) தனி பொறுப்பு வகிப்பார்கள்
- ✓ சிறப்பு அழைப்பாளராக அழைக்கப்பட்டால் மட்டுமே கேபினட் கூட்டத்தில் கலந்து கொள்ள முடியும்.

**3.இணை (அ) துணை அமைச்சர்கள்:-**

- ✓ கேபினட் (ம) ராஜாங்க அமைச்சர்களுக்கு உதவியாக பணியாற்றுவர்.
- ✓ கேபினட் கூட்டத்தில் கலந்து கொள்ள தகுதி அற்றவர்கள்.

**கேபினட் (அ) அமைச்சரவை:-**

- ✓ கேபினட் (அ) மூத்த அமைச்சர்களை கொண்ட ஒரு தனிப்பட்ட அமைப்பு.
- ✓ இது மத்திய நிர்வாகத்தின் மையமாக விளங்குகிறது.
- ✓ அரசின் முக்கிய முடிவுகளை வகுக்கிறது.

- ✓ நாடாளுமன்ற கூட்டத் தொடர் நடை பெறும் தேதி (ம) ஒத்தி வைக்கப்படும் தேதிகளை தீர்மானிக்கிறது.
- ✓ ஆவசர சட்டம் பிறப்பிக்க குடியரசு தலைவருக்கு பரிந்துரை செய்கிறது.
- ✓ அரசியலமைப்பு சட்டத்திருத்த மசோதாக்களை கொண்டு வர முக்கிய பங்கு வகிக்கிறது.
- ✓ அனைத்து அமைச்சர்களின் கருத்துகளையும் ஒருங்கிணைந்து தேசிய கொள்கைகளை வகுக்கிறது.
- ✓ கேபினட்டின் ஆலோசனை படியே நிதி அமைச்சர் பட்ஜெட் தயார் செய்து நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்கிறார்.
- ✓ **நிதி (ம) பண மசோதாவின் பிறப்பிடமாக திகழ்கிறது.**
- ✓ சர்வதேச உடன்படிக்கைகளை அங்கீகரிக்கிறது.
- ✓ நெருக்கடி நிலையை செயல்படுத்த குடியரசு தலைவருக்கு பரிந்துரை செய்கிறது.
- ✓ அரசின் வெளிநாட்டு கொள்கைகளை தீர்மானிக்கிறது.
- ✓ வெளிநாடுகளுக்கான இந்திய தூதர்களை நியமிப்பதில் குடியரசு தலைவருக்கு ஆலோசனை வழங்குகிறது.
- ✓ புதிய மாநிலங்களை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கிறது.
- ✓ கேபினட் கூட்டம் கூடாத போது பிரதமர் 2 (அ) 3 கேபினட் அமைச்சர்களுடன் கலந்து ஆலோசித்து முடிவு எடுப்பார்.
- ✓ **நாட்டில் மிக அதிகாரம் வாய்ந்த அமைப்பு கேபினட். (கேபினட்டை விட அதிகாரம் உள்ள அமைப்பு கிச்சன் கேபினட்அமைச்சர்கள் குழு.**
- ✓ **'கேபினட்' வாசகம் அரசியலமைப்பு சட்டத்தில் குறிப்பிடவில்லை (அமைச்சர்களின் 3 தகுதிகள் பற்றியும் குறிப்பிடவில்லை)**

## Art 75:

- ✓ மத்திய அமைச்சர்கள் (ம) பிரதமர் தொடர்பான கூறுகளை குறிப்பிடுகிறது.
- ✓ **Art 75-ன்** படி மக்களவை பெரும்பான்மை கட்சி தலைவரைபிரதமராக குடியரசு தலைவர் நியமிப்பார்.
- ✓ மக்களவையில் எந்த கட்சிக்கும் பெரும்பான்மை இல்லாத போது **(தொங்கு பாராளுமன்றம்**) அதிக உறுப்பினர்களை கொண்ட கட்சியின் தலைவரை ஆட்சி அமைக்க குடியரசு தலைவர் கோருவார். ஆனால் குடியரசு தலைவர் நிர்ணயிக்கும் காலத்திற்குள் மக்களவையில் பெரும்பான்மையை நிருபிக்க வேண்டும்.
- ✓ பிரதமரின் பரிந்துரையின் படி மத்திய அமைச்சர்களை குடியரசு தலைவர் நியமிப்பார்.
- ✓ மத்திய அமைச்சர்களின் அதிகாரங்கள், பொறுப்புகள் சம்பளம் (ம) படிகள் பதவி பிரமாணம் ஆகியவை பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.
- ✓ பிரதமர் (ம) அமைச்சர்களுக்கு பதவி பிரமாணம் செய்து வைப்பவர் குடியரசு தலைவர்.
- ✓ **Art 75-ன் படி மத்திய அமைச்சர்கள் ஒட்டு மொத்தமாகவும் (அ) கூட்டமாகவும் (Collective pesponsibitlity) மக்களவைக்கு பொறுப்புடையவர்கள், தனிப்பட்ட முறையில் (Individual Responsibility) குடியரசு தலைவருக்கு பொறுப்புடையவர்கள்.**

## அட்டார்னி ஜெனரல் (Attorney General)

## (இந்திய அரசு தலைமை வழக்கறிஞர்)

**Art 76:-**

- ✓ **இவரை நியமிப்பவர் (ம) பதவி நீக்கம் செய்பவர் குடியரசு தலைவர்.**
- ✓ அவர் **உச்சநீதி மன்ற நீதிபதிக்கான தகுதிகளை** பெற்று இருக்க வேண்டும்.
- ✓ **பதவி காலம் (ம) சம்பளம் அரசியலமைப்பில் குறிப்பிடவில்லை.**
- ✓ சம்பளத்தை தீர்மானிப்பவர் குடியரசு தலைவர் (ம) பதவிகாலம்.
- ✓ எந்த வித முன்னறிவிப்பும் இன்றி குடியரசு தலைவரால் பதவி நீக்கம் செய்யப்படலாம்.
- ✓ இவர் பாராளுமன்ற இரு அவை கூட்டங்களிலும் கலந்து கொண்டு பேசலாம் கருத்து தெரிவிக்கலாம். ஆனால் வாக்கெடுப்பின் போது வாக்களிக்க இயலாது.
- ✓ நாட்டில் உள்ள அனைத்து நீதிமன்றங்களிலும் அரசின் சார்பில் வாதாடுவார்.
- ✓ குடியரசு தலைவருக்க சட்டம் தொடர்பான ஆலோசனைகளை வழங்குவார்.
- ✓ இவர் **நாட்டின் மிக உயர்ந்த சட்ட அலுவலராக கருதப்படுகிறார்**.
- ✓ பாராளுமன்ற உறுப்பினருக்கான சிறப்பு உரிமைகளையும் பாதுகாப்பையும் பெறுவார்.
- ✓ இவர் பதவியில் இருக்கும் போது மற்ற நிறுவனங்களில் (அ) அமைப்புகளில் பொறுப்ப வகிக்க முடியாது.

**Art 77**:

- ✓ இந்திய அரசாங்கத்தின் அலுவல்கள் (அ) பணிகள் பற்றி குறிப்பிடுகிறது.

## பிரதமரின் அதிகாரங்கள், பொறுப்பகள், கடமைகள்:-

**Art 78:**

- ✓ **கேபினட்டின் தலைவராக** செயல்படுவார்
- ✓ திட்ட குழு, தேசிய வளர்ச்சி குழு (NDC), தேசிய ஒருமைப்பாட்டு குழு, மாநிலங்களுக்கிடையேயான குழு ஆகியவற்றின் தலைவராக செயல்படுவார்
- ✓ அமைச்சர்களுக்கு துறை ஒதுக்கீடு செய்கிறார்.
- ✓ கடமை தவரும் போது எந்த ஒரு அமைச்சரையும் பதவி விலக கோருவார்.
- ✓ பல்வேறு துறைகளின் பணிகளை மேற்பார்வை இடுவார்.
- ✓ தான் தலைமை வகிக்கும் கேபினட்டின் கூட்டத் தேதி, கருது பொருளை (Ajenda) தீர்மானிப்பார்.
- ✓ குடியரசு தலைவருக்கும், அமைச்சர்களுக்கும் இடையே பாலமாக செயல்படுவார்.
- ✓ ஆமைச்சரவையின் முடிவுகளை குடியரசு தலைவருக்கு தெரிவிப்பார்.
- ✓ கேபினட் கூட்டம் கூட்டாத போது 2 (அ) 3 கேபினட் அமைச்சர்களுடன் கலந்து ஆலோசித்து முடிவு எடுப்பார்.
- ✓ நாட்டின் உண்மையான நிர்வாக அதிகாரம் பெற்று உள்ளார்.
- ✓ **அரசியல் தலைவர் (leader of the Govt) (அ) அரசாங்கத்தின் தலைவராக** (Head of the Govt) செயல்படுகிறார்.
- ✓ மக்களவையை கலைக்க குடியரசு தலைவருக்கு பரிந்துரை செய்வார்.

- ✓ அவசர நிலை பிரகடனத்தை செயல்படுத்த குடியரசு தலைவருக்கு பரிந்துரைப்பார்.
- ✓

# Chapter – II
## பாராளுமன்றம் Art 79-122

**Art 79:**

நாடாளுமன்றம் என்பது குடியரசு தலைவர் மக்களவை, மாநிலங்களவையை உள்ளடக்கியது.

**மாநிலங்களவை: (ராஜ்ய சபா) (அ) மத்திய மேலவை**

- ✓ 1952 ல் ஏற்படுத்தப்பட்டது.
- ✓ 1954 ல் மாநிலங்களவையின் பெயர் ராஜ்ய சபா என்றும், மக்களவையின் பெயர் லோக் சபா என்றும் ஹிந்தி பெயர்களாக மாற்றப்பட்டன.

**Art 80:**

- ✓ ராஜ்ய சபாவின் அதிகபட்ச **உறுப்பினர்கள் எண்ணிக்கை 250**
- ✓ மாநிலங்கள் (ம) யூனியன் பிரதேசங்களில் இருந்து தேர்ந்தெடுக்க வழி செய்யும் அதிக உறுப்பினர் எண்ணிக்கை **238**
- ✓ குடியரசு தலைவரால் கலை, இலக்கியம், அறிவியல் சமூக சேவை ஆகிய துறைகளை சார்ந்த நியமன உறுப்பினர்கள் **12**
- ✓ ராஜ்ய சபையின் தற்போதைய உறுப்பினர் எண்ணிக்கை **245**
- ✓ மாநிலம் (ம) யூனியன் பிரதேசத்திலிருந்து தேர்ந்து எடுக்கப்பட்ட உறுப்பினர்கள் **233**
- ✓

மாநிலம் - **229**
யூனியன் பிரதேசம் - 4
Total - 233

- ✓ குடியரசு தலைவரால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் 12
- ✓ Art 80 (3) கலை, இலக்கியம், அறிவியல் சமூக சேவை ஆகியவற்றில் சிறந்து விளங்கும் 12 நபர்களை குடியரசு தலைவர் நியமிப்பது பற்றி குறிப்பிடுகிறது.
- ✓ **1956 7 வது சட்டத்திருத்தத்தின் படி யூனியன் பிரதேசங்களும், ராஜ்ய சபாவிற்கு உறுப்பினர்களை தேர்ந்தெடுக்க வழி செய்தது**.
- ✓ தமிழ்நாட்டில் இருந்து ராஜ்ய சபாவிற்கு தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்கள் **18**
- ✓ அதிக உறுப்பினர்களை ராஜ்ய சபாவிற்கு பெற்றுள்ள மாநிலம் உத்திரபிரதேசம் **(31)**
- ✓ மாநிலங்கள் (ம) யூனியன் பிரதேசங்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட பேரவை (MLA) உறுப்பினர்களில் ஒற்றை மாற்று வாக்கு முறையில் ராஜ்ய சபா உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கின்றனர்.

**Art 83**:

- ✓ மாநிலங்களவை (ம) உறுப்பினர்களின் பதவிகாலம் பற்றி குறிப்பிடுகிறது.

- ✓ மாநிலங்களவை நிரந்தரமானது,கலைக்க இயலாது
- ✓ **உறுப்பினர்களின் பதவிகாலம் 6 ஆண்டுகள், 2 ஆண்டிற்கு ஒரு முறை 1/3 பங்கு உறுப்பினர்கள் பதவி விலகுவர்.**

**உறுப்பினர் தகுதிகள்: Art 84**

- ✓ குறைந்தபட்ச வயது 30
- ✓ நாடாளுமன்ற தொகுதியில் வாக்காளராக இருக்க வேண்டும்.
- ✓ குற்ற வழக்கில் 2 ஆண்டிற்கு மேல் தண்டனை பெற்றிருக்க கூடாது.
- ✓ மக்களவை உறுப்பினராக இருக்க கூடாது.

**Art 89**

- ✓ மாநிலங்களவை தலைவர், துணை தலைவர் பற்றி குறிப்பிடுகிறது.

**Art 89 (2)**

- ✓ துணை தலைவர் தேர்தல் பற்றி குறிப்பிடுகிறது.
- ✓ மாநிலங்களவை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுவார்.

**Art 90:**

- ✓ துணை தலைவர் பதவி நீக்கம் பற்றி குறிப்பிடுகிறது.
- ✓ மாநிலங்களவையில் பெரும்பான்மை தீர்மானம் மூலம் பதவி நீக்கம் செய்யப்படுவார்.
- ✓ பதவி நீக்கம் தொடர்பான குற்றச்சாட்டு அறிவிப்பு **14 நாட்களுக்கு முன்** அவருக்கு வழங்க வேண்டும்
- ✓ பதவி விலகல் கடிதத்தை மாநிலங்களவை தலைவரிடம் (துணை குடியரசு தலைவரிடம்) அளிப்பார்

**ராஜ்ய சபாவின் சிறப்பு அதிகாரங்கள்:**

- ✓ 2/3 பங்கு சிறப்பு பெரும்பான்மை தீர்மானம் மூலம் **Art 312 ன்** படி புதிய அகில இந்திய பணிகளை உருவாக்கலாம்.
- ✓ 2/3 பங்கு சிறப்பு பெரும்பான்மை தீர்மானம் மூலம் மாநில பட்டியலில் உள்ள துறை, தேசிய முக்கியத்துவம் வாய்ந்தது என கருதி தீர்மானம் நிறைவேற்றினால் அத்துறை மீது பாராளுமன்றம் சட்டம் இயற்றும்.
- ✓ துணை குடியரசு தலைவர் மீதான குற்றச்சாட்டு தீர்மானம் முதலில் மாநிலங்களவையில் மட்டுமே கொண்டு வர முடியும்.

## மக்களவை: (லோக்சபா)

## மத்திய கீழவை

- ✓ மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களை கொண்ட அவை
- ✓ மத்தியில் அதிகாரம் பெற்ற அவை

**Art 81:**

- ✓ மக்களவை உறுப்பினர் எண்ணிக்கை பற்றி குறிப்பிடுகிறது.
- ✓ **மக்களவையின் அதிகபட்ச உறுப்பினர் எண்ணிக்கை 552**
- ✓ மாநிலம் (ம) யூனியன் பிரதேசங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்படும் அதிகபட்ச உறுப்பினர் எண்ணிக்கை **550**
- ✓ குடியரசு தலைவரால் நியமிக்கப்படும் ஆங்கிலோ இந்திய உறுப்பினர்கள் **2**

- ✓ மக்களவையின் தற்போதைய மொத்த உறுப்பினர் எண்ணிக்கை **545**
- ✓ மாநிலம் (ம) யூனியன் பிரதேசங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் எண்ணிக்கை **(530+13)**
- ✓ குடியரசு தலைவரால் நியமிக்கப்பட்ட ஆங்கிலோ இந்திய உறுப்பினர்கள் **2 (545)(SC-84,ST-47)**
- ✓ மக்களவையில் அதிக உறுப்பினர்களை கொண்ட மாநிலம் **உத்திரபிரதேசம் (80)**
- ✓ மக்களவையில் SC இட ஒதுக்கீடு அதிக பெற்றுள்ள மாநிலம் **உத்திரபிரதேசம் (17)**
- ✓ மக்களவையில் ST இட ஒதுக்கீடு அதிகம் பெற்றுள்ள மாநிலம் **மத்திய பிரதேசம் (6)**
- ✓ **TN ல் மக்களவை உறுப்பினர் எண்ணிக்கை- 39**

  **(TN-ல் 39 G-32,SC-7,ST-NIC)**

**Art 83:**

- ✓ மக்களவை (ம) உறுப்பினர்களின் பதவி காலம் பற்றி குறிப்பிடுகிறது.(5Years)
- ✓ மக்களவை (ம) உறுப்பினர்களின் பதவிகாலம் முடியும் முன்பே **Art 85 ன்** படி குடியரசு தலைவரால் மக்களவை கலைக்கப்படலாம்.
- ✓ **நெருக்கடி நிலையின போது மக்களவையின் பதவிக்காலம் 1 ஆண்டு நீட்டிக்களலாம்.**
- ✓ **1976 42 வது சட்டத்திருத்தத்தின்படி மக்களவை பதவிகாலம் 6 ஆண்டாக உயர்த்தப்படாது, 1978 44 வது சட்டத்திருத்தில் மீண்டும் 5 ஆண்டுகளாக குறைக்கப்பட்டது.**
- ✓ **நீண்ட காலம் செயல்பட்ட மக்களவை 5 வது மக்களவை (1971 – 77) 7 ஆண்டுகள்**
- ✓ மக்களவை தொகுதிகள் 4 முறை சீரமைக்கப்பட்டு உள்ளது
  - ▪ 1952, 1962, 1972, 2002
  - ➢ கடைசியாக 2001 மக்கள் தொகையை பின்பற்றி சீரமைக்கப்பட்டது. ஆனால் மக்களவை (ம) சட்டமன்ற உறுப்பினர் எண்ணிக்கை 1971 வது மக்கள் தொகை அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**Art 84:**

- ✓ உறுப்பினர் தகுதிகள் பற்றி குறிப்பிடுகிறது.
- ✓ குறைந்தபட்ச வயது 25
- ✓ நாட்டின் ஏதாவது ஒரு பகுதியின் வாக்காளராக இருக்க வேண்டும்.
- ✓ குற்ற வழக்கில் 2 ஆண்டிற்கு மேல் தண்டனை பெற்று இருக்க கூடாது.

**Art 93 :**

- ✓ மக்களவை சபாநாயர், துணை சபாநாயர் பற்றி குறிப்பிடுகிறது.
- ✓ மக்களவை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுவர்
- ✓ 1919 மாண்டேகு செம்ஸ்போர்டு சட்டப்படி 1921 ல் சபாநாயகர், துணை சபாநாயகர் பதவிகள் ஏற்படுத்தப்பட்டது.
- ✓ அவையை திறம்பட நடத்தும் பொறுப்பை பெற்றவர் சபாநாயகர்.
- ✓ ஒரு மசோதாவை சாதாரண மசோதாவா (அ) பண மசோதாவா என தீர்மாணிப்பவர் சபா நாயகர்

- ✓ சபாநாயகர் மக்களவை வாக்கெடுப்பில் சமன்நிலை ஏற்படும் பொழுது மட்டும் வாக்களிக்கும் அதிகாரம் பெற்றுள்ளார். முடிவு செய் வாக்கு
- ✓ மக்களவை கலைக்கப்படும் போது சபாநாயகர் பதவி காலி ஆகாது. புதிய மக்களவையின் முதல் கூட்டம் கூடும் வரை பதவியில் இருப்பார்.
- ✓ பாராளுமன்ற கூட்டு கூட்டத்திற்கு தலைமை ஏற்பவர் சபாநாயகர் (கூட்டு கூட்டத்தை கூட்டுபவர் குடியரசுத்தலைவர்)

## Art 94:

- ✓ சபாநாயகர், துணை சபாநாயகர் பதவி நீக்கம் பற்றி குறிப்பிடுகிறது.
- ✓ மக்களவையில் பெரும்பான்மை தீர்மானம் மூலம் பதவி நீக்கம் செய்யப்படுவர்.
- ✓ பதவி நீக்கம் தீர்மான அறிவிப்பு 14 நாட்களுக்கு முன் அந்நபருக்கு வழங்க வேண்டும்.

**மக்களவையின் சிறப்பு அதிகாரங்கள்:**

- ✓ அரசாங்கத்தின் மீது (அ) அமைச்சரவையின் மீது நம்பிக்கையில்லா தீர்மானம் மக்களவையில் மட்டுமே கொண்டு வரமுடியும்.
- ✓ பண (ம) நிதி மசோதா, மானிய கோரிக்கை முதலில் மக்களவையில் மட்டுமே அறிமுகப்படுத்த முடியும்
- ✓ மானிய கோரிக்கை மீது வாக்கெடுப்பு மக்களவையில் மட்டுமே நடத்த முடியும்.
- ✓ 3 பட்டியல் மீதும் சட்டம் இயற்றலாம்.
- ✓ ராஜ்ய சபாவின் அதிகாரத்தை மீறி செயல்படலாம்.
- ✓ இவை தவிர மற்ற அனைத்திலும் (ராஜ்யசபா, லோக் சபா, சிறப்பு அதிகாரங்கள் தவிர) இரு அவைகளும் சமமான அதிகாரம் பெற்ற இருக்கும்.
- ✓ நாடாளுமன்றத்தின் சிறப்பு அதிகாரங்கள்:
- ✓ Art 122 ன் படி நாடாளுமன்றத்தின் செயல்பாட்டில் நீதிமன்றம் தலையிட இயலாது.
- ✓ குடியரசு தலைவர், துணைகுடியரசு தலைவர் தேர்தல்களில் பங்கு பெறுகிறது.
- ➢ நாடாளுமன்ற கூட்டத் தொடர் தொடங்குவதற்கு 40 நாட்களுக்கு முன்னரும், பின்னர் 40 நாட்கள் வரையும் உறுப்பினர்களை குற்றவழக்கு தவிர மற்ற வழக்குகளில் கைதி செய்ய இயலாது.
- ➢ நாட்டின் நிதி நிலைமைக்கு முழு பொறுப்பு வாய்ந்த அமைப்பு நாடாளுமன்றம்
- ➢ சீரிய முறையில் ஆட்சி நடத்த சட்டம் இயற்றுகிறது.
- ➢ அரசியலமைப்பு சட்டத்தை திருத்தும் அதிகாரம் பெற்றுள்ளது.
- ➢ துறைகளுக்கு நிதியை பகிர்ந்து அளிக்கிறது.
- ➢ பட்ஜெட் பற்றி விவாதித்து ஒப்பதல் அளிக்கிறது.
- ➢ நெருக்கடி நிலை பிரகடனங்கள், அவசர சட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கிறது.
- ➢ அமைச்சரவை செயல்பாட்டை கண்காணிக்கிறது.
- ➢ குடியரசு தலைவர், துணை குடியரசு தலைவர், உச்சநீதி மன்ற, உயர் நீதி மன்ற நீதிபதிகள்,CAG, UPSA, SPSC தலைவர் (ம) உறுப்பினர்கள், தேர்தல் ஆணையர்கள்(ம) அரசியலமைப்பு சட்டப்படி உயர் அலுவலர்கள் மீது பதவி நீக்க தீர்மானம் நிறைவேற்றுகிறது.

## Art 85:

- நாடாளுமன்ற கூட்ட தொடர் கூட்டுதல், ஒத்தி வைத்தல், முடிவுக்கு கொண்டு வருதல் (ம) மக்களவையை கலைத்தல் பற்றி குறிப்பிடுகிறது.
- நாடாளுமன்ற குறைந்த பட்சம் ஆண்டிற்கு 2 முறையாவது கூட்டுவது குடியரசு தலைவரின் கடமை
- ஒரு கூட்ட தொடருக்கும், மற்றொரு கூட்ட தொடருக்கும் இடையே 6 மாதத்திற்கு மேல் இடைவெளி இருக்க கூடாது.
- நடைமுறையில் நாடாளுமன்றம் 3 முறை கூட்டப்படுகிறது
    - பட்ஜெட் கூட்ட தொடர்- Feb to May
    - பருவ கால (அ) மழைகால கூட்ட தொடர்- July to Sep
    - குளிர் கால கூட்ட தொடர்- Nov to Dec
- கூட்டத்தொடரை 3 வழிகளில் முடிவுக்கு கொண்டு வரலாம்.
    - ஆவையை ஒத்தி வைத்தல் - சபாநாயகர்
    - மக்களவையை கலைத்தல் - குடியரசு தலைவர்
    - கூட்டதொடரை முடிவுக்கு கொண்டு வருதல் - குடியரசு தலைவர்
- **Art 86:**
- நாடாளுமன்ற இரு அவைகளிலும் குடியரசு தலைவர் உரை நிகழ்த்துவது பற்றி குறிப்பிடுகிறது.

**Art 87:**

- பொதுத் தேர்தல் முடிந்த முதல் கூட்டம் மற்றும் ஆண்டின் முதல் கூட்டத்தில் குடியரசுத் தலைவர் உரை நிகழ்த்துவது பற்றி குறிப்பிடுகிறது.

**Art 99:**

- பாராளுமன்ற உறுப்பினர்கள் பதவி பிரமாணம் பற்றி குறிப்பிடுகிறது.
- பாராளுமன்ற உறுப்பினர்களுக்க பதவி பிரமாணம் செய்து வைப்பவர் குடியரசு தலைவர் (அ) அவரால் நியமிக்கப்பட்ட நபர்.
- நடைமுறையில் மக்களவை உறுப்பினர்களுக்கு – சபாநாயகர்
- நடைமுறையில் உறுப்பினர்களுக்கு – மாநிலங்களவை தலைவர்

**Art 100:**

- இரு அவைகளில் உறுப்பினர் ஆவதை தடை செய்கிறது.
- குறைவெண் பற்றி குறிப்பிடுகிறது.(அவையை நடத்த தேவையான குறைந்தபட்ச உறுப்பினர் எண்ணிக்கை)
- குறைந்தபட்சம் 1/10 பங்கு உறுப்பினர்கள் இருக்க வேண்டும்.
- மக்களவைக்கு கோரம் - 1/10 பங்கு (அ) 55
- மாநிலங்களுக்க கோரம் - 1/10 பங்கு (அ) 25

**Art 101:**

- பாராளுமன்ற உறுப்பினர் காலி பணியிடம் பற்றி குறிப்பிடுகிறது.

- உறுப்பினர் எந்த வித முன்னறிவிப்பம் இன்றி தொடர்ந்து 60 நாட்களுக்க மேல் சபைக்கு வராமல் இருந்தால் அவ்வுறுப்பினர் பதவி காலியானதாக கருதப்படும்.

**Art 102:**

- பாராளுமன்ற உறுப்பினர் தகுதி இழப்பு பற்றி குறிப்பிடுகிறது.
- தேர்தல் ஆணையத்தை கலந்து ஆலோசித்த பின் உறுப்பினர் தகுதி இழப்பை தீர்மானிப்பவர் குடியரசு தலைவர்
- கட்சி தாவல் தடை சட்டத்தின் படி உறுப்பினர் தகுதி இழப்பை தீர்மானிப்பவர் சபா நாயகர்

**Art 107:**

- பாராளுமன்றத்தில் மசோதா அறிமுகப்படுத்துவது பற்றி குறிப்பிடுகிறது.
- மசோதா 2 வாசிப்புகளுடன் 5 நிலைகளை கடந்து குடியரசு தலைவரின் ஒப்புதலுடன் சட்டம் ஆகும்.
    - முதல் வாசிப்பு (நோக்கம் (ம) நன்மைகள்)
    - 2 ம் வாசிப்ப (மசோதா மீது விவாதம், திருத்தம்)
    - 3 ம் வாசிப்பு (வாக்கெடுப்பு)
    - 4 ம் வாசிப்ப மற்றொரு அவையில் 3 வாசிப்பம் நிறைவேற்றுதல் வேண்டும்.
    - 5 வாசிப்ப குடியரசு தலைவர் ஒப்புதல்

**Art 108 :கூட்டு கூட்டம்**

- ஒரு மசோதா ஒரு அவையில் நிறைவேற்றப்பட்டு மற்றொரு அவையில் நிராகரித்தல், திருத்தம் மேற் கொள்வதில் இரு அவைகளிலும் ஒன்றுபடாத சூழ்நிலை, மசோதா ஒரு அவையில் நிறைவேற்றப்பட்டு மற்றொரு சபையில் 6 மாதத்திற்கு மேல் நிலுவையில் இருந்தல் ஆகிய காரணங்களுக்காக கூட்டு கூட்டம் கூட்டப்படும்.
- கூட்டு கூட்டத்தை கூட்டுபவர் குடியரசு தலைவர்
- கூட்டு கூட்டத்திற்கு தலைமை ஏற்பவர் மக்களவை சபாநாயகர்
- சபாநாயகர் இல்லாத போது துணை சபாநாயகர் தலைமை ஏற்பார்.
- சபாநாயகர் (ம) துணை சபாநாயகர் இருவரும் இல்லாத போது மாநிலங்களவை துணை தலைவர் தலைமை ஏற்பார்.
- பண மசோதாவிற்கு கூட்டு கூட்டம் கூட்ட முடியாது.
- கூட்டு கூட்டத்தில் மசோதா மீது எந்த பரிந்துரையும் மேற்கொள்ள இயலாது.
- இதுவரை 3 கூட்டு கூட்டங்கள் நடைபெற உள்ளது.
- வரதட்சணை தடுப்பு சட்ட மசோதாவை நிறைவேற்ற 1961 May 6 to 9
- வங்கி பணியாளர் தேர்வாணையத்தை நீக்க 1978 May 16
- பொடா சட்ட மசோதாவை 2002 May 26

**Art 109:**

- பண மசோதா அறிமுகப்படுத்துவது பற்றி குறிப்பிடுகிறது.

- முதலில் மக்களவையில் அறிமுகப்படுத்த வேண்டும்.

**பண மசோதா –Art 110**

- வரவு செலவு தொடர்புடையது
- நிதி மசோதாவின் ஒரு பகுதியே பண மசோதா
- வரி விதித்தால், நடைமுறையில் உள்ள வரிமை நீக்குதல், கடன் வாங்குதல், நிதி ஒதுக்கீடு பெறுதல், சில்லறை செலவினம், மத்திய மாநில அரசு கணக்க தணிக்கை, இந்திய பொது கணக்க ஆகியவை தொடர்பான மசோதாக்கள் பண மசோதாக்கள் ஆகும்.
- பண மசோதாவை தீர்மானிப்பவர் சபாநாயகர்
- பண மசோதாவின் பிறப்பிடம் கேபினட்.
- மக்களவையில் நிறைவேற்றப்பட்ட பண மசோதாவை மாநிலங்களவை 14 நாட்களுக்கள் ஒப்பதல் அளிக்க வேண்டும் (அ) திருப்பி அனுப்ப வேண்டும். இல்லையெனில் மசோதா நிறைவேறியதாக கருதப்படும்.

**Art 111:**

- குடியரசு தலைவர் மசோதாவுக்கு ஒப்பதல் அளித்தல், நிறுத்தி வைத்தல், திருப்பி அனுப்புதல் பற்றி குறிப்பிடுகிறது.
- சாதாரண மசோதாவை ஒப்புதல் அளிக்கலாம். (அ) நிறுத்தி வைக்கலாம் (அ) திருப்பி அனுப்பலாம். ஒரு முறை மட்டுமே திருப்பி அனுப்ப முடியும் மறுமுறை கட்டாயம் ஒப்புதல் அளிக்க வேண்டும்)
- பண மசோதா (அ) அரசியலமைப்பு சட்ட திருத்த மசோதாக்களை திருப்பி அனுப்ப இயலாது கட்டாயம் ஒப்புதல் அளிக்க வேண்டும்.

**Art 112:**

- மத்திய வரவு செலவு திட்டம் (பட்ஜெட்) பற்றி குறிப்பிடுகிறது.

**Art 117:**

நிதி மசோதா பற்றி குறிப்பிடுகிறது.

- ஆனைத்து வரவினங்களையும், செலவினங்களையும்உள்ளடக்கிய மசோதா நிதி மசோதா

**Art 120:**

- பாராளுமன்ற அலுவல் (அ) ஆட்சி மொழி பற்றி குறிப்பிடுகிறது.
- அலுவல் மொழி ஹிந்தி, ஆங்கிலம்
- பாராளுமன்ற உறுப்பினர்கள் அவர்களின் தாய்மொழியில் பேசவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.’

**Art 121:**

- பாராளுமன்ற விவாத முறை பற்றி குறிப்பிடுகிறது.

- **கேள்வி நேரம்:**

  - சபை தொடங்கி முதல் ஒரு மணி நேரம் கேள்வி நேரம் (11 am to 12.00 am)
  - கேள்வி நேரத்தில் 3 வகையாக கேள்விகள் விவாதிக்கப்படும்.
- **நட்சத்திர குறியிட்ட கேள்விகள்:**
  - உறுப்பினா் கேட்க விரும்பும் கேள்விகளில் நட்சத்திரம் குறியிடப்பட்டு இருக்கும்.
- இக்கேள்விக்கு அமைச்சா்கள் வாய்மொழியாக பதில் அளிப்பா்.
- இக்கேள்வி மீது உறுப்பினா்கள் துணை கேள்வி எழுப்பலாம்.

**நட்சத்திர குறியிடப்படாத கேள்விகள்.**

- இக் கேள்விகளுக்கு அமைச்சா்கள் எழுத்து மூலம் பதில் அளிப்பா்.
- இக்கேள்வி மீது துணை கேள்வி எழுப்ப இயலாது.

**குறித்த கால அவகாச கேள்விகள்:**

- உறுப்பினா் கேட்க விரும்பும் கேள்விகளை 10 நாட்களுக்கு முன் சபாநாயகரிடம் அளிக்க வேண்டும்.
- இக்கேள்விகளுக்கு அமைச்சா்கள் வாய் மொழியாக பதில் அளிப்பா்.

**பூஜ்ஜிய நேரம்:**

- கேள்வி நேரத்திற்கு அடுத்து வரும் 1 மணி நேரம் (12.00a.m to 1.am)
- 1962 –ல் பூஜ்ஜிய நேரம் அறிமுகப்படுத்தப்பட்டது.
- பூஜ்ஜிய நேரத்தில் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சனைகள் பற்றி விவாதிக்க வேண்டும்.
- உறுப்பினா்கள் எந்த வித முன்னறிவிப்பின்றி கேள்வி எழுப்பலாம்.

**தீா்மானங்கள்:**

- தீா்மானங்கள் அமைச்சா்கள் (அ) உறுப்பினா்களால் அவையின் ஒப்புதலுடன் அறிமுகப்படுத்தப்படும்.

### I.விவாத நிறுத்த தீா்மானம் Closure Motion

- ஒரு மசோதா மீது தேவையான அளவு விவாதம் நடத்தி திருப்தி ஏற்பட்டவுடன் வாக்கெடுப்பிற்கு விடும் முறையாகும்.
- இது 4 வகைப்படும்.

**சாதாரண விவாத நிறுத்த தீா்மானம்**

- ஒரு மசோதா மீது போதுமான அளவு விவாதம் நடைபெற்றவுடன் வாக்கெடுப்பிற்கு விடும் முறையாகும்.

### II.பகுதி விவாத நிறுத்த தீா்மானம்

- மசோதாவை பகுதிகளாக பிரித்து விவாதம் நடத்தி வாக்கெடுப்பிற்கு விடுவதாகும்.

**III.கங்காரு விவாத நிறுத்த தீர்மானம்:**

- மசோதாவின் முக்கியமான பிரிவுகளை மட்டும் விவாதிக்கவும், வாக்கெடுப்பிற்கும் எடுத்து கொண்டு நேரடியாக அடுத்த பிரிவிற்கு செல்வது ஆகும்.

**IV. கில்லட்டின்**

- விவாதம் நடைபெற்ற மசோதாவுடன் விவாதம் நடைபெறாத மசோதாவையும் சேர்த்து வாக்கெடுப்பிற்கு விடுவதாகும்.
- இம்முறை பட்ஜெட் விவாதத்தில் அதிகம் பயன்படுத்தப்படுகிறது.

**II.உரிமை மீறல் தீர்மானம்**

- அமைச்சர்கள் பாராளுமன்ற சிறப்புரிமைகளை மீறினால் உறுப்பினர்களால் அமைச்சர்களை கண்டித்து கொண்டு வரப்படும் தீர்மானம் ஆகும்.

**III.கவனஈர்ப்பு தீர்மானம்:**

- 1954 –ல் அறிமுகப்படுத்தப்பட்டது.
- முக்கியமான பிரச்சனைகள் தொடர்பாக அமைச்சர்களின் கவனத்தை ஈர்க்க (அ) அவர்களை பதில் அளிக்க கோரி உறுப்பினர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம் ஆகும்.

**IV. ஓத்தி வைப்பு தீர்மானம்:**

- இத் தீர்மானத்தை அறிமுகப்படுத்த 50 உறுப்பினர்கள், ஆதரவு தேவை.
- ஏற்கனவே நடைபெற்று வரும் பாராளுமன்ற அலுவல்களை ஒத்தி வைத்து குறிப்பிட்ட பிரச்சனை பற்றி விவாதிக்க கொண்டு வரப்படுவது ஆகும்.

**V. நம்பிக்கையில்லா தீர்மானம்:**

- இத்தீர்மானத்தை மக்களவையில் மட்டுமே கொண்டு வர முடியும்.
- இத்தீர்மானத்தை அறிமுகப்படுத்த 50 உறுப்பினர்கள் ஆதரவு தேவை.
- இத்தீர்மானம் நிறைவேற 50%ற்கு மேல் உறுப்பினர்கள் ஆதரவு தேவை.
- இத்தீர்மானம் நிறைவேறினால் அமைச்சரவை (அ) அரசாங்கம் பதவி இழக்கும்.

**VI.கண்டன தீர்மானம்:**

- உறுப்பினர்களால் அமைச்சர்களின் கொள்கைகள் (அ) செயல்பாட்டை கண்டித்து கொண்டு வரப்படுவது ஆகும்.
- இத்தீர்மானம் நிறைவேறினால் அரசாங்கம் பதவி விலகு தேவையில்லை.

**VII.வெட்டு தீர்மானம்:**

- மசோதாவில் மாற்றம் செய்வதற்காக கொண்டு வரப்படுவது ஆகும்.
- இது 3 வகைப்படும்.

**i. கொள்கை வெட்டு தீர்மானம்:**

- மசோதாவில் 1 ரூபாய் மட்டும் குறைத்து கொண்டு வரப்படும் தீர்மானம்.

**ii.அடையாள வெட்டு தீர்மானம்:**

- மசோதாவில் 100 ரூ மட்டும் குறைத்து கொண்டு வரப்படும் தீர்மானம்.

**iii.பொருளாதார வெட்டு தீர்மானம்:**

- மசோதாவில் குறிப்பிட்ட தொகையை குறைத்து கொண்டு வரப்படும் தீர்மானம் ஆகும்.

**அவை தலைவர்: (Leader of the house)**

- அரசாங்கத்தின் சார்பில் ஒவ்வொரு அவைக்கும் ஒரு தலைவர் இருப்பார்.
- பிரதமர் எந்த அவையில் உறுப்பினராக உள்ளாரோ அந்த அவையின் அவை தலைவர் பிரதமர்.
- மற்றொரு அவைக்கு பிரதமர் கேபினட் அமைச்சர் ஒருவரை அவை தலைவராக நியமிப்பார்.

**எதிர் கட்சி தலைவர்:- Leader of Oposition Party**

- மக்களவையில் குறைந்த பட்சம் 1/10 பங்கு உறுப்பினர்களை பெற்ற கட்சியை எதிர் கட்சி அந்தஸ்த்தை பெறும்.
- 1969-ல் எதிர் கட்சி தலைவர் பதவி ஏற்படுத்தப்பட்டது.
- 1977 –ல் எதிர் கட்சி தலைவருக்கு சட்ட பூர்வ அங்கிகாரம் (அ) சட்ட பூர்வ அந்தஸ்து வழங்கப்பட்டது.
- எதிர் கட்சி தலைவர் கேபினட் அமைச்சருக்கு இணையான அதிகாரம் பெற்றுள்ளார்.
    - ‘‘எதிர் கட்சி தலைவர் என்பவர் ஒரு மாற்று பிரதமர்’’

-சர் ஐவர் ஜென்னிங்ஸ்

**பாராளுமன்ற குழுக்கள்:- Parliamentary Committees**

- பாராளுமன்றத்தில் 2 வகையாக குழுக்கள் செயல்படுகின்றன.
  I. நிலை குழுக்கள் Stanclingt Committees
  II.தற்காலிக குழுக்கள் Ad-hoc Committes
- நிலை குழுக்கள் அவையால் அவ்வபோது ஏற்படுத்தப்படும், நிரந்தரமானவை.
- தற்காலிக குழுக்கள் தேவை ஏற்படும் பொழுது ஏற்படுத்தப்படும்.
- குழுக்களின் தலைவரை நியமிப்பவர் சபாநாயகர்
- சபாநாயகர் குழுவில் இடம் பெற்று இருந்தால் அக்குழுவின் தலைவர் சபாநாயகர்.

- துணை சபாநாயகர் குழுவில் இடம் பெற்று இருந்தால் அக்குழுவின் தலைவர் துணை சபாநாயகர்
- சபாநாயகர், துணை சபாநாயகர் இருவரும் குழுவில் இடம் பெற்று இருந்தால் அக்குழுவின் தலைவர் சபாநாயகர்.
- பொது கணக்கு குழு:- Public Accounts Committee
- பாராளுமன்ற குழுக்களில் மிக பழமையானது
- 1919 மாண்டேகு செம்ஸ் போர்டு சட்டப்படி 1921-ல் ஏற்படுத்தப்பட்டது.
- இக்குழுவின் உறுப்பினர்கள் 2.2
- இக்குழுவின் அமைச்சர்கள் உறுப்பினராக முடியாது.
- 1967 –வரை இக்குழுவின் தலைவரை சபாநாயகர் நியமித்தார்.
- 1967-முதல் மக்களவை எதிர் கட்சி தலைவர் தலைவராக செயல்படுகிறார்.
- இக்குழு அரசின் வரவு செலவுகளையும், (AG-யின் அறிக்கைகளையும் பரிசீலித்து ஆராய்கிறது.

## 2. மதிப்பீட்டு குழு:- Estimate Commettee.

- 1950 –ல் ஜான் மாத்தாய் குழுவின் பரிந்துரைப்படி இக்குழு ஏற்படுத்தப்பட்டது.
- இக்குழு பாராளுமன்ற குழுக்களில் மிக பெரியது.
- குழுவின் உறுப்பினர்கள் எண்ணிக்கை 30
- அனைவரும் லோக் சபாவை சார்ந்தவர்கள்
- ராஜ்ய சபாவில் உறுப்பினராக உள்ள அமைச்சர் இக்குழுவில் இடம் பெற முடியாது.
- இக்குழு பட்ஜெட் பற்றி மதிப்பீடு செய்கிறது.

## பொது துறை நிறுவனங்கள் குழு: Commitiee on Public Undertakings.

- 1964 V.K. கிருஷ்ண மேனன் குழுவின் பரிந்துரைப்படி ஏற்படுத்தப்பட்டது.
- 1974 –ல் இக்குழுவின் உறுப்பினர் எண்ணிக்கை 15-22 ஆக உயர்த்தப்பட்டது.
- இக்குழு பொது துறை நிறுவனங்களின் நிதி நிலை அறிக்கைகள் (ம) அவற்றின் செயல்பாடுகள், நடவடிக்கைகள் பற்றி ஆராய்கிறது.

## 4. துறைரீதியான நிலை குழுக்கள்: Departmental Standarding Committee

- 1993-ல் விதிகள் குழுவின் பரிந்துரைப்படி 17 துறை ரீதியான நிலை குழுக்கள் ஏற்படுத்தப்பட்டது.
- 2004-ல் இக்குழுக்களின் எண்ணிக்கை 17-24 ஆக உயர்த்தப்பட்டது.
- 24 குழுக்களில் 16 குழுக்கள் மக்களவையிலும், 8 குழுக்கள் மாநிலங்களவையிலும் செயல்படுகிறது.
- ஒவ்வொரு குழுவிலும் உறுப்பினர் எண்ணிக்கை 31
- இக் குழுக்கள் துறைகளின் பணிகள் செயல்பாடுகள் பற்றி ஆராய்கிறது.

## 5. அரசு உறுதியளிப்பு பரிசீலனை குழு: Committee on Govt Assurances

- 1953 ஏற்படுத்தப்பட்டது.

- இரு அவைகளிளும் தனி தனி குழுக்கள் செயல்படுகிறது.
- லோக் சபா குழுவில் உறுப்பினர்கள் 15
- ராஜ்ய சபா குழுவில் உறுப்பினர்கள் 10
- பாராளுமன்ற அவைகளில் அமைச்சர்கள் அவ்வபோது உறுதியளிக்கும் கருத்துக்கள் (ம) திட்டங்களை செயல்படுத்துவது பற்றி ஆராயும்.

### 6. SC, ST-க்கள் நல குழு: Committee on Welfare of Sc's and ST's

- குழுவில் உறுப்பினர்கள் 30
- இக்குழு தேசிய தாழ்த்தப்பட்டோர் ஆணையம் (ம) தேசிய பழங்குடியினர் ஆணையம் அளிக்கும் அறிக்கைகளை ஆராய்கிறது.

### 7. அறம் சார்ந்த (அ) தருமம் சார்ந்த குழுக்கள்: Ethic's Committee

- இரு அவைகளிலும் தனி தனி குழு செயல்படுகிறது.
- 1997-ல் ராஜ்ய சபா குழுவும், 2000 லோக் சபா குழுவும் ஏற்படுத்தப்பட்டது.
- உறுப்பினர் எண்ணிக்கை அவ்வபோது தீர்மானிக்கப்படும்.
- பாராளுமன்றத்தின் உறுப்பினர்கள் நடத்தை விதிகள் பற்றி ஆராய்கிறது (Code of Conduct of MPS)

### 48. மகளிர் நலக் குழு (அ) மகளிருக்கு அதிகாரம் அளித்தல் குழு: Committee on Empowerment of Women

- 1997 –ல் ஏற்படுத்தப்பட்டது.
- உறுப்பினர் எண்ணிக்கை 30.
- தேசிய மகளிர் ஆணையம் அளிக்கும் அறிக்கைகளை ஆராய்கிறது.
    - 1990 – தேசிய மகளிர் ஆணைய சட்டம்
    - 1992 – தேசிய மகளிர் ஆணையம்
    - 1993 –TN மாநில மகளிர் ஆணையம்
    - 2001 –மகளிர்க்கு அதிகாரமளித்தல் தேசிய கொள்கை வெளியிடப்பட்டது.

### 9. மசோதா நிலுவை பரிசீலிப்பு குழு: Committee on Papers Lid on the Table.

- 1975 –ல் ஏற்படுத்தப்பட்டது.
- இரு அவைகளுக்கும் தனி தனி குழு செயல்படுகிறது.
- லோக் சபா குழுவில் உறுப்பினர்கள் எண்ணிக்கை 15
- ராஜ்ய சபா குழுவில் உறுப்பினர்கள் எண்ணிக்கை 10
- உறுப்பினர்கள் அவையில் பேசும் (அ) கருத்து தெரிவிக்கும் விசயங்கள் அரசியலமைப்பு சட்டத்திற்கு உட்பட்டதா என ஆராயும்.

### உச்சநீதி மன்றம்:- Art 124-147

- இந்தயாவின் மிக உயர்ந்த நீதி துறை அமைப்பு
- 1935 இந்திய அரசு சட்டத்தின் படி கூட்டாட்சி நீதிமன்றமாக செயல்பட்டது.

**Art 124:**

- உச்சநீதி மன்றம் இருக்க வேண்டும் என குறிப்பிடுகிறது.
- 28.1.1950 –ல் ஏற்படுத்தப்பட்டது.
- ஆரம்பத்தில் 8 நீதிபதிகள் (1தலைமை+ 7நீதிபதிகள்) இருந்தனா்.

  1950 –ல் 1 + 10 = 11 ஆகவும்,

  1960-ல் 1 + 13 = 14 ஆகவும்,

  1977 –ல் 1 + 17 =18 ஆகவும்,

  1986 –ல் 1 + 25 = 26 ஆகவும்,

  Feb 2009 –ல் 1+30= 31 ஆகவும் உயா்த்தப்பட்டது.

- தலைமை நீதிபதியை நியமிப்பவா் கு. தலைவா், மற்ற நீதிபதிகளை தலைமை நீதிபதியின் ஆலோசனை –படி கு. தலைவா் நயமிப்பாா்.
- தலைமை நீதிபதி (ம) மற்ற நீதிபதிகளுக்கு பதவி பிரமாணம் செய்து வைப்பவா் கு.தலைவா்

**நீதிபதிகளுக்கான தகுதிகள்:**

- ஒன்று (அ) ஒன்றுக்கு மேற்பட்ட உயா்நீதிமன்றங்களில் நீதிபதியாக தொடா்ந்து 5 ஆண்டுகள் பணியாற்றி இருக்க வேண்டும். (அ) உயா்நீதி மன்ற வழக்கறிஞராக 10 ஆண்டுகள் பணியாற்றி இருக்க வேண்டும்.
- கு. தலைவா் கருத்துப்படி சிறந்த சட்ட வல்லுனராக இருக்க வேண்டும்.

**பதவிக்காலம்:**

- 65 வயது வரை
- பதவி விலகல் கடிதத்தை கு.தலைவாிடம் வழங்க வேண்டும்.
- ஓய்வுக்கு பின் இந்தியாவில் எந்த நீதிமன்றத்திலும் வாதாட கூடாது, அரசின் அனுமதியின்றி எந்த பதவியும் வகிக்க கூடாது.

**பதவி நீக்கம்:-**

- தவறான நடத்தை (அ) தகுதியின்மை காரணங்களுக்காக நாடாளுமன்றத்தில் 2/3 பங்கு சிறப்பு பெரும்பான்மை தீா்மானம் மூலம் கு.தலைவரால் பதவி நீக்கம் செய்யப்படுவா்.

**Art 126:-**

- தலைமை நீதிபதி பதவி காலியாக இருக்கும் போது உச்ச நீதி மன்ற மூத்த நீதிபதி ஒருவரை கு.தலைவா் தற்காலிக தலைமை நீதிபதியாக நிமிக்கலாம்.

**Art 127:**

- உச்சநீதி மன்ற நீதிபதிகள் பதவி காலியாக இருக்கும் போது தலைமை நீதிபதி கு.தலைவரின் ஒப்புதல் உடன் உயர் நீதி மன்ற நீதிபதிகளை தற்காலிக (அ) தனி நீதிபதிகளாக நியமிக்கலாம் என குறிப்பிடுகிறது.

**Art 128:**

- ஒய்வு பெற்ற உச்சநீதி மன்ற நீதிபதிகளை கு.தலைவர் ஒப்புதல் உடன் தலைமை நீதிபதி 2 ஆண்டுகளுக்கு மிகாமல் தற்காலிக நீதிபதியாக நியமிக்கலாம் என குறிப்பிடுகிறது.

**Art 129:**

- உச்சநீதிமன்ற ஆவண நீதிமன்றமாக (Court of record) செயல்படுவது பற்றியும், நீதிமன்ற அவமதிப்புகளை (Contempt of Court) தண்டிக்கும் அதிகாரம் பெற்றுள்ளதை பற்றியும் கூறுகிறது.

**Art 130:**

- உச்சநீதி மன்றத்தின் அமைவிடம் (Seat) பற்றி குறிப்பிடுகிறது.
  அமைவிடம் டெல்லி
- கு. தலைவரின் ஒப்புதலுடன் தலைமை நீதிபதி அமைவிடத்தையோ (அ) கிளையேயோ இந்தியாவில் எந்த இடத்திற்கும் (அ) எந்த மாநிலத்திற்குள் மாற்றலாம் (அ) ஏற்படுத்தலாம்.

**Art 137:**

- உச்சநீதி மன்றம் தான் வழங்கும் தீர்ப்புகளை மறு ஆய்வு (அ) மறு சீராய்வு செய்வது பற்றி குறிப்பிடுகிறது.

**Art 138:**

- நாடாளுமன்றம் உச்ச நீதி மன்றத்தின் அதிகார வரம்பை நீட்டிக்கலாம் (அ) அதிகரிக்கலாம் என குறிப்பிடுகிறது. (குறைக்க இயலாது)

**Art 141:**

- உச்ச நீதி மன்றத்தின் அறிவிப்புகள் (அ) தீர்ப்புகள் நாட்டில் உள்ள அனைத்து நீதிமன்றங்களையும் கட்டுபடுத்தும்.

**Art 143:**

- கு. தலைவர் உச்சநீதி மன்றத்திடம் ஆலோசனை பெறுவது பற்றி குறிப்பிடுகிறது.

**Art 145:**

- உச்சநீதிமன்றம் தனக்கு தானே விதிகளையும் ஒழுங்கு முறை விதிகளையும் ஏற்படுத்துவது பற்றி குறிப்பிடுகிறது.

**உச்ச நீதிமன்றத்தின் அதிகாரங்கள்:**

**1. முதல் வரம்பு நீதி அதிகாரம் (Original Judiction)**

- Art 131 –ன் படி இந்த அதிகாரத்தை பெற்றுள்ளது.
- மத்திய, மாநில அரசுக்கிடையேயான வழக்குகள், இரு மாநிலங்களுக்கிடையேயான வழக்குகள் ஆகியவற்றை இந்த அதிகாரத்தை பயன்படுத்தி விசாரிக்கும்.

**2. நீதி பேராணை நீதி அதிகாரம் (Writ Jurisoliction)**

- குடிமக்களின் அடிப்படை உரிமை மீறல் தொடர்பான பிரச்சனைகளை 5-வகையான நீதி பேராணை அதிகாரங்களை கொண்டு தீர்த்து வைக்கிறது. (Art 32)

**3. மேல் முறையீட்டு நீதி அதிகாரம்: (Appellate Jarisoliction)**

- உச்சநீதி மன்றம் 4-வகையான மேல் முறையீட்டு வழக்குகளை விசாரிக்கிறது.
  a) Art 132 –ன் படி அரசியலமைப்பு தொடர்பான வழக்குகள் (Constitutional Maters)
  b) Art 133 –ன் படி சிவில் (அ) உரிமையியல் வழக்குகள் (Civil maters)
  c) Art 134A –ன் படி குற்றவியல் வழக்குகள் (Criminal Maters)
  d) Art 136 –ன் படி சிறப்பு அனுமதி வழக்குகள் (Appeal By Special Leave)

Art 134 A-ன் படி மேல் முறையீட்டு வழக்குகளை தீர்க்க அரசியலமைப்பு சட்டப்படி மேலும் விளக்கம் தேவை என உயர்நீதி மன்றம் சான்று அளித்தால் மட்டுமே உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்ய இயலும்.

**4. ஆலோசனை அதிகாரம் (Advisory Jurisoliction)**

- குடியரசு தலைவர் Art 143 –ன் படி உச்சநீதி மன்றத்திடம் 2 வகையான ஆலோசனைகளை கோரலாம்.
  (i) பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சனைகள் (அ) சட்டம் தொடர்பான கருத்துகள்
  (ii) அரசியலமைப்பு சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கைகள், ஒப்பந்தகங்கள், பட்டையங்கள், அறிக்கைகள் தொடர்பான கருத்துக்கள்.
- உச்ச நீதிமன்றம் முதல் வகை ஆலோசனைக்கு ஆலோசனை வழங்கலாம் (அ) வழங்காமலும் இருக்கலாம், 2-வது வகை ஆலோசனைக்கு கட்டாயம் ஆலோசனை வழங்க வேண்டும்.

**5. ஆவண நீதி மன்ற அதிகாரம் (Court of Record)**

- Art 129 –ன் படி ஆவண நீதிமன்ற அதிகாரத்தையும், நீதி மன்ற அவமதிப்புகளையும் (Contempt of Court) தண்டிக்கும் அதிகாரம் பெற்றுள்ளது.

- உச்சநீதி மன்றம் வழங்கும் தீர்ப்புகள், நடவடிக்கைகள், விதிகள் ஆகியவற்றை நாட்டில் உள்ள அனைத்து நீதிமன்றங்களும் ஆவணமாக கருதி தீர்ப்பு வழங்க வேண்டும்.

**6. நீதிமன்ற மறு ஆய்வு (அ) மனு நீதி புனராய்வு அதிகாரம் (Power of Judicial Review)**

- உச்சநீதி மன்றம் அரசியலமைப்பு சட்டத்தின் பாதுகாவலனாக விளங்குவதால் மத்திய, மாநில அரசுகள் இயற்றும் சர்ச்சைக்குரிய சட்டங்களை ஆராய்ந்து அச்சட்டம் அரசியலமைப்பிற்கு முரணானது (அ) செல்லாது என அறிவிக்கலாம்.
- பின்வரும் இனங்களிலும் நீதி புனராய்வு அதிகாரத்தை பெற்றுள்ளது.

(i) அரசியலமைப்பிற்கு முரணான சட்டங்கள்

(ii) மத்திய மாநில அரசுக்கு இடையே கூட்டாட்சி சமத்துவம் தொடர்பான சட்டங்கள்

(iii) அடிப்படை உரிமைகள் தொடர்பான சட்டங்கள் (அடிப்படை உரிமைகளை பாதுகாத்தல்)

மேலும் ஐயப்பாடுகள் (ம) கருத்து வேறுபாடுகளுக்கு உள்ளாகும் அரசியலமைப்பு சட்ட அம்சங்களை ஆராய்கிறது.

**7. மற்ற அதிகாரங்கள்:- Other Powers**

- குடியரசு தலைவர், துணை குடியரசுத் தலைவர் தேர்தல் தொடர்பான வழக்குகளை விசாரிக்கிறது.
- ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்கு ஒரு உயர் நீதி மன்றத்திலிருந்து மற்றொரு உயர் நீதி மன்றத்திற்கு வழக்குகளை மாற்றும் அதிகாரம் பெற்றுள்ளது.
- UPSC (ம) SPSC தலைவர் (ம) உறுப்பினர்களை தான் விசாரித்து அளிக்கும் விரைவு அறிக்கையின் (Enquiry Report) படி பதவி நீக்கம் செய்ய பரிந்துரை செய்கிறது.
- நாட்டில் உள்ள அனைத்து நீதிமன்றங்கள் (ம) தீர்ப்பாயங்களின் (ராணுவ தீர்ப்பாயம் தவிர) பணிகளை மேற்பார்வை இட்டு கண்காணித்தல்.

Art 139(A) மனுதாரர் விருப்பத்தின் பெயரில் மேல் முறையீடு செய்யலாம் 1976 –42$^{th}$ Ament.

## Chapter – V

## Comptroller and Auditor General of India

### இந்திய அரசு தலைமை தணிக்கையாளர் (CAG)

**Art 148 – 151**

- இந்திய தணிக்கை கணக்கு துறையின் தலைமை அலுவலராக உள்ளார்.
- CAG –யை நியமிப்பவர் குடியரசு தலைவர்.
- தகுதிகள் - அரசியலமைப்பில் குறிப்பிடபடவில்லை
- பதவிக்காலம் - 6 ஆண்டுகள் (அ) 65 வயது வரை
- ஓய்வுக்கு பின் மத்திய, மாநில அரசு பணிகளுக்கு நியமிக்க கூடாது.
- உச்ச நீதிமன்ற நீதிபதிகளை பதவி நீக்கும் முறையில் குடியரசுத் தலைவர் பதவி நீக்கம் செய்வார்.
- பதவி விலகல் கடிதத்தை குடியரசுத் தலைவரிடத் அளிக்க வேண்டும்.

- பதவி பிரமாணம் - குடியரசுத் தலைவர் (அ) அவரால் நியமிக்கப்பட்ட நபர்
- சம்பளம் (ம) அதிகாரங்கள் உச்சநீதி மன்ற நீதிபதிகளுக்கு இணையானது.
- சம்பளம் (ம) படிகளை நிர்ணயிப்பது பாராளுமன்றம்
- 1971 –ல் CAG-யின் கடமை அதிகாரம் பற்றிய சட்டம் இயற்றப்பட்டது (Duties, Responsbilities Act)
- இச்சட்டம்1976 –ல் திருத்தப்பட்டது.
- CAG இந்திய தொகுப்பு நிதியிலிருந்து (Consolidated Fund of India) மேற்கொள்ளப்படும் செலவினங்களை கண்காணிப்பார்.
- CAG பாராளுமன்றத்தின் ஒரு அதிகாரியாக கருதபடுகிறார்.
- CAG பாராளுமன்ற பொது கணக்கு குழுவின் (Public Accounts Committee) கண்கள் (ம) காதுகள் போன்றவர் என அழைக்கப்படுகிறார்.

  Cabinet என்பது அரசியல் கட்டமைப்பின் அடிக்கல்-**லாவெல்**

  “CAG அரசியலமைப்பு சட்டப்படி மிக முக்கியத்துவம் வாய்ந்த அலுவலர்”

  -Dr. B.R. அப்பேத்கர்
- CAG தனது ஆண்டு அறிக்கையை குடியரசுத் தலைவரிடம் அளிப்பார், குடியரசுத் தலைவர் ஆண்டு அறிக்கையை பாராளுமன்ற ஒப்புதலுக்கு அனுப்பி வைப்பார். (CAG அறிக்கையை ஆராயும் குழு – பொது கணக்கு குழு)

**Art 148:**

- இந்தியாவிற்கு CAG இருக்க வேண்டும் என குறிப்பிடுகிறது.

**Art 149:**

- CAG–ன் கடமைகள், அதிகாரங்கள், பொறுப்புகள் பற்றி குறிப்பிடுகிறது.
- CAG மத்திய அரசு (ம) மத்திய அரசின் கீழ் உள்ள நிறுவனங்கள், அமைப்புகளின் கணக்குகளை தணிக்கை செய்து தணிக்கை அறிக்கையை குடியரசுத் தலைவரிடம் அளிப்பார், குடியரசுத் தலைவர் பாராளுமன்ற ஒப்புதலுக்கு அனுப்பு வைப்பார்.
- மாநில அரசு (ம) மாநில அரசின் கீழ் உள்ள நிறுவனங்கள், அமைப்புகளின் கணக்குக் தணிக்கை செய்து தணிக்கை அறிக்கையை ஆளுநரிடம் அளிப்பார். ஆளுநர் சட்ட மன்ற ஒப்புதலுக்கு அனுப்பி வைப்பார்.

**Art 150:**

- CAG மத்திய, மாநில அரசுகளின் கணக்குகளை தணிக்கை செய்வது பற்றி குறிப்பிடுகிறது.

**Art 151:**

- CAG யின் தணிக்கை அறிக்கை பற்றி குறிப்பிடுகிறது.

## PART – VI

## State Government

## மாநில அரசு

**Art 152-237**

- மாநில அரசு 6 பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. (Chapter)
  Chapter I– பொது General – Art 152
  Chapter II– மாநில செயலாட்சி குழு –Art 153 – 167
  Chapter III – மாநில சட்டமன்றம் - Art 168 – 212
  Chapter IV– ஆளுநரின் சட்டமன்ற அதிகாரங்கள் - Art 213
  Chapter V– உயர்நீதிமன்றம் - Art 214 – 232
  Chapter VI– சார்பு (அ) துணை நீதி மன்றங்கள் - Art 233 – 237

**Art 152:**

- மாநில அரசு பற்றி விளக்குகிறது.

## மாநில செயலாட்சி குழு

**Art 153 – 167**

- மாநில செயலாட்சி குழுவில் ஆளுநர், முதலமைச்சர் மாநில அமைச்சர்கள், அட்வகேட் ஜெனரல் ஆகியோரை உள்ளடக்கிது.

## ஆளுநர்

**Art 153 – 162**

**Art 153:**

- ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு ஆளுநர் இருக்க வேண்டும் என குறிப்பிடுகிறது.
- 1956 7-வது சட்டதிருத்தின் படி 2(அ) அதற்கு மேற்பட்ட மாநிலங்களுக்கும் பொதுவாக ஒரு ஆளுநர் நியமிக்கபடலாம் என மாற்றப்பட்டது.

**Art 154:**

- மாநில் ஆளுநரின் நிர்வாகம் (ம) செயல் அதிகாரங்கள் பற்றி குறிப்பிடுகிறது.

**Art 155:**

- மாநில ஆளுநர் நியமனம் பற்றி குறிப்பிடுகிறது.
- மத்திய அமைச்சரவையின் பரிந்துரையின் படி குடியரசுத் தலைவர் நியமிப்பார்.
- நியமனத்திற்கு முன் குடியரசுத் தலைவர் அம்மாநில முதலமைச்சரையும் கலந்து ஆலோசிப்பார்.

**Art 156:**

- ஆளுனரின் பதவிக்காலம் பற்றி குறிப்பிடுகிறது.
- பதவிகாலம் 5 ஆண்டுகள்
- பதவிகாலம் முடியும் முன்பே எந்த வித முன்னறிவிப்பும் இன்றி குடியரசுத் தலைவர் பதவி நீக்கம் செய்யலாம்.
- பதவி நீக்கம் பற்றி அரசியலமைப்பில் குறிப்பிடபடவில்லை.
- பதவி விலகல் கடிதத்தை குடியரசுத் தலைவரிடம் வழங்க வேண்டும்.

**Art 157:**

- ஆளுனருக்கான தகுதிகள் பற்றி குறிப்பிடுகிறது.
- குறைந்தபட்ச வயது 35
  கு.தலைவர், து.குடியரசு தலைவர், ஆளுனர் 35.
  ராஜ்ய சபா உறுப்பினர், சட்ட மேலவை உறுப்பினர் 30
  பிரதமர், முதலமைச்சர், மக்களவை உறுப்பினர் சட்டபேரவை உறுப்பினர் 25.
- சட்ட மன்ற (அ) நாடாளுமன்ற உறுப்பினராக இருக்க கூடாது.
- மத்திய, மாநில, உள்ளாட்சி அமைப்புகளில் ஆதாயம் தரம் பதவி வகிக்க கூடாது.

**Art 158:**

- மாநில ஆளுநர் பதவிக்கான வரையறைகள் (அ) வரைமுறைகள் பற்றி குறிப்பிடுகிறது.

**Art 159:**

- மாநில ஆளுநர் பதவி பிரமாணம் பற்றி குறிப்பிடுகிறது.
- பதவி பிரமாணம் செய்து வைப்பவர் உயர் நீதி மன்ற தலைமை நீதிபதி.

**ஆளுநரின் அதிகாரங்கள்:**

- 1979 –ல் உச்சநீதிமன்றம் ஆளுநர் மத்திய அரசின் பணியாளர் எனக் கூறியது.
- மாநில அரசின் தலைவராகவும் (Head of the State) (அ) (Principal of the State), பெயரளவு நிர்வாக தலைவராகவம் செயல்படுவார்.

**நிர்வாக (அ) செயல் அதிகாரங்கள்**

- ஆளுநர் மத்திய அரசின் முகவராக செயல்படுவார். ஆனால் யூனியன் பிரதேசங்களில் துணை நிலை ஆளுநர் மத்திய அரசின் முகவராக செயல்படுவது இல்லை.

**Art 162**–ன் படி மாநில நிர்வாக நடவடிக்கைகள் அனைத்தும் ஆளுநர் பெயரில் நடைபெறுகிறது.

**Art 164**-ன் படி முதலமைச்சர் (ம) அமைச்சர்களை நியமிக்கிறார்.

**Art 164(1)**–ன் படி ஜார்கண்ட், சத்தீஸ்கர் ஒடிஸா ஆகிய மாநிலங்களில் பழங்குடியினர் மேம்பாட்டு துறை அமைச்சரை நியமிக்கிறார்.

- அட்வகேட் ஜெனரல்,SPSC தலைவர் (ம) உறுப்பினர்கள், மாநில தேர்தல் ஆணையர், பல்கலைகழக துணை வேந்தர்கள் ஆகியோரை நியமிக்கிறார்.
- மாநில அரசு பல்கலைகழகங்களின் வேந்தராக செயல்படுகிறார்.

- மாநிலத்தில் நெருக்கடி நிலையை செயல்படுத்த குடியரசுத் தலைவருக்கு பரிந்துரைப்பார்.
- மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி நடைபெறும் போது உண்மையான நிர்வாக அதிகாரங்கள் பெற்று திகழ்வார்.
- மாநிலத்தின் நிர்வாக தகவல்களையும், மசோதாக்களையும் முதலமைச்சர் மூலம் பெறுவார்.

**சட்டமன்ற (அ) சட்டமியற்றும் அதிகாரங்கள்: (Legistative Powers)**

- மாநில சட்டமன்றத்தின் ஒரு பகுதியே ஆளுநர்
- மாநில சட்டபேரவைக்கு ஒரு ஆங்கிலோ இந்திய உறுப்பினரை நியமிக்கிறார்.
- சட்ட மேலவைக்கு கலை, இலக்கியம், அறிவியல், சமூக சேவை, கூட்டுறவு இக்கம் ஆகியவற்றில் சிறந்து விளங்கும் 1/6 பங்கு உறுப்பினர்களை நியமிப்பார்.
- ஆண்டின் முதல் சட்டமன்ற கூட்டத்தொடரை துவக்கி வைத்து உரையாற்றுவார்.
- குறைந்தபட்சம் ஆண்டிற்கு 2-முறையாவது கூட்டும் பொறுப்பை பெற்றுள்ளார்.
- சட்ட பேரவை சபா நாயகர், துணை சபாநாயகர் பதவி காலமாக இருக்கும் போது உறுப்பினர் ஒருவரை தற்காலிக சபாநாயகராக நியமிப்பார்.
- சட்ட மேலவை தலைவர், துணைத் தலைவர் பதவி காலியாக இருக்கும் போது உறுப்பினர் ஒருவரை தற்காலிக தலைவராக நியமிப்பார்.

**Art 174**–ன் சட்ட பேரவையை கலைக்கும் அதிகாரம் பெற்றுள்ளார்.

- மாநில சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்க, நிறுத்தி வைக்க (அ) திருப்பி அனுப்ப அதிகாரம் பெற்றுள்ளார். ஆனால் பண மசோதாவை (அ) நிதி மசோதாவை திருப்பி அனுப்ப இயலாது.
- மாநில சட்டமன்றம் கூடாத போது Art 213 படி அவசர சட்டம் பிறப்பிக்கும் அதிகாரம் பெற்றுள்ளார், அவசர சட்டத்திற்கு சட்டமன்றம் **கூடிய 6 வாரத்திற்குள் ஒப்புதல்** பெற வேண்டும்.
- மாநில நிதி குழு,SPSC, CAG ஆகியோர் அளிக்கும் அறிக்கைகளை சட்ட மன்ற ஒப்புதலுக்கு அனுப்பி வைப்பார்.
- சட்டமன்ற உறுப்பினர்கள் தகுதியிழப்பு தொடர்பாக தேர்தல் ஆணையத்தை கலந்து ஆலோசித்து முடிவெடுப்பார்.

**3. நிதி அதிகாரங்கள்: (Financial Powers)**

- மாநில அரசின் எதிர்பாரா செலவு நிதியை Art 267 (Contingency fand of the state) நிர்வகிக்கும் பொறுப்பை பெற்றுள்ளார்.
- எதிர்பாரா செலவுகளுக்கு இந்நிதியிலிருந்து முன்பணம் வழங்குவார்.
- இந்நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட செலவுகளுக்கு சட்டமன்ற ஒப்புதல் பெற வேண்டும்.
- பண மசோதா ஆளுநர் ஒப்புதல் பெற்ற பின்னரே சட்டமன்றத்தில் (சட்ட பேரவை) அறிமுகப்படுத்த முடியும்.
- மாநில பட்ஜெட் ஆளுநர் ஒப்புதல் பெற்ற பின்னரே சட்டமன்றத்தில் தாக்கல் செய்யப்படும்.
- ஓவ்வொரு 5-ஆண்டிற்கு பின்னரும் மாநில நிதி குழுவை ஏற்படுத்தி பஞ்சாயத்து அமைப்புகள் (ம) நகராட்சி அமைப்புகளின் நிதி நிலையை புனரமைக்கிறார்.

- துறைகளுக்கான மானிய கோரிக்கைகளுக்கு ஒப்புதல் அளிக்கிறார்.

4. **நீதி அதிகாரங்கள்: Judicil Powers**

- உயர்நீதி மன்றத்தை கலந்து ஆலோசித்த பின் மாவட்ட நீதிபதிகளை நியமிக்கிறார்.
- மாவட்ட நீதிபதி அல்லாத மற்ற நீதிதுறை அலுவலர்களை SPSC (ம) உயர்நீதி மன்றத்தை கலந்து ஆலோசித்த பின் நியமிக்கிறார்.
- உயர்நீதி மன்ற நீதிபதிகள் நியமனத்தில் குடியரசுத் தலைவருக்கு ஆலோசனை வழங்குவார்.
- Art 161-ன் படி மாநில நீதி எல்லைக்கு உட்பட்ட குற்றவாளிகளுக்கு தண்டணையை குறைக்க (அ) நிறுத்தி வைக்க (அ) ரத்து செய்ய பொத மன்னிப்பு அதிகாரம் பெற்றுள்ளார். ஆனால் மரண தண்டணையை ரத்து செய்ய இயலாது.

5. **தன் விருப்ப (அ) சுய விருப்ப அதிகாரங்கள்: (Discretionary Powers)**

- மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சியை செயல்படுத்த குடியரசுத் தலைவருக்கு பரிந்துரைப்பார்.
- குடியரசுத் தலைவரின் பரீசிலனைக்காக சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட எந்த மசோதாவையும் அனுப்பி வைக்கலாம்.
- அஸ்ஸாம், மேகாலயா, திரிபுரா, மிசோரம் ஆகிய வடகிழக்கு மாநிலங்களில் பழங்குடியினர் பகுதிகளில் (ST) கனிம உரிமைகளுக்கு (ராயல்ட்டி) வாடகை நிர்ணயம் செய்ய மாவட்ட கவுன்சில் அமைச்சரவையை கலந்து ஆலோசிக்க தேவையில்லை.

6. **ஆளுநரின் சிறப்பு பொறுப்புகள்: Special Responsbilities**

- மகாராஷ்டிரா மாநிலத்தில் விதர்பா (ம) மராத்வாடா ஆகிய மாவட்டங்களுக்கு தனி வளர்ச்சி வாரியம் அமைக்க அம்மாநில ஆளுநர் பொறுப்பை பெற்றுள்ளார்.
- குஜராத்தில் சௌராஷ்டிரா (ம) கட்ச் பகுதிகளுக்கு தனி வளர்ச்சி வாரியம் அமைக்கம் பொறுப்பை அம்மாநில ஆளுநர் பெற்றுள்ளார்.
- கர்நாடகா (ம) ஹைதராபாத்தில் தனி வளர்ச்சி வாரியம் அமைக்கும் பொறுப்பை அம்மாநில ஆளுநர்கள் பெற்றுள்ளனர். (98-வது சட்டதிருத்தம் 2012-ல் சேர்க்கப்பட்டது)
- நாகாலாந்தில் நாகா மலை பகுதிகளில் உள்நாட்டு கலவரம் தொடரும் வரை அப்பகுதியில் சட்டம ஒழுங்கை பராமரிக்கும் பொறுப்பை அம்மாநில ஆளுநர் பெற்றுள்ளார்.
- அஸ்ஸாமில் பழங்குடியினர் பகுதிகளை நிர்வகிக்கும் பொறுப்பை அம்மாநில ஆளுநர் பெற்றுள்ளார்.
- மணிப்பூரில் மலைபகுதிகளை நிர்வகிக்கும் பொறுப்பை அம்மாநில ஆளுநர் பெற்றுள்ளார்.
- சிக்கிமில் பல்வேறு தரப்பிலான மக்களிடையே அமைதி, சமூக பொருளாதார நலன் மேம்படுவதை உறுதி செய்யும் பொறுப்பை அம்மாநில ஆளுநர் பெற்றுள்ளார்.
- அருணாச்சலபிரதேசத்தில் சட்டம் ஒழுங்கை பராமரிக்கும் பொறுப்பை அம்மாநில ஆளுநர் பெற்றுள்ளார்.

**முதலமைச்சர்**

- Art 164 –ன் படி ஆளுநரால் நியமிக்கப்படுகிறார்.
- சட்ட பேரவை பெரும்பான்மை கட்சி தலைவரை முதலமைச்சராக ஆளுநர் நியமிப்பார்.
- எந்த கட்சிக்கும் பெரும்பான்மை இல்லாத போது சட்டப்பேரவையிர் அதிக உறுபினர்களை பெற்ற கட்சியின் தலைவரை ஆளுநர் ஆட்சிஅமைக்க கோருவார், ஆனால் ஆளுநர் நிர்ணயிக்கும் காலத்திற்குள் சட்ட பேரவையின் பெரும்பாண்மையை நிருபிக்க வேண்டும்.
- பதவிகாலம் 5 ஆண்டுகள்.
- பதவி பிரமாணம் செய்து வைப்பவர் ஆளுநர்
- சட்ட பேரவையில் பெரும்பாண்மை உள்ளவரையே பதவியில் இருப்பார்.
- முதலமைச்சரின் பதவிவிலகல் முழு அமைச்சரவையின் பதவி விலகலாக கருதப்படும்.
- நம்பிக்கை இல்லா தீர்மானம் மூலம் முதலமைச்சர் தலைமையிலான அமைச்சரவை பதவி விலகுவது. ஒட்டுமொத்த பொறுப்பு (அ) கூட்டு பொறுப்பு (Collective Responsibility)

**மாநில அமைச்சரவை**

## State Concil of Menisters

## Art 163 – 164

- **Art 163**–ன் படி ஆளுநருக்கு உதவி (ம) ஆலோசனை வழங்க மாநில அமைச்சரவை (முதலமைச்சர் தலைமையில்) இருக்க வேண்டும்.
- 1976 42-வது சட்டதிருத்ததின் படி ஆளுநர் மாநில அமைச்சரவையின் ஆலோசனைக்கு கட்டுபட்டவர் என மாற்றப்பட்டது.
- 1978 44-வது சட்டதிருத்ததின் படி ஆளுநர் அமைச்சரவையின் ஆலோசனையை மறு பரீசிலனைக்கு திருப்பி அனுப்பலாம் ஆனால் மறு பரீசிலணைக்கு பின்அமைச்சரவையின் ஆலோசனை படியே செயல்பட வேண்டும் என மாற்றப்பட்டது.
- Art 164-ன் படி முதலமைச்சர் நியமிக்கபடுகிறார், முதலமைச்சர்களின் பரிந்துரை படி அமைச்சர்கள் ஆளுநரால் நியமிக்கப்படுகிறார்கள்.
- அமைச்சர்களின் பதவி பிரமாணம், கடமைகள், பொறுப்புகள், அமைச்சரவை ஆளுநருக்கு தனி பொறுப்பை பெற்றுள்ளது, சட்ட மன்றத்திற்கு (சட்டபேரவை) கூட்டு பொறுப்பை பெற்றுள்ளது என Art 164 –ல் குறிப்பிடப்பட்டுள்ளது.
- முதலமைச்சர் (ம) அமைச்சர்களுக்கு பதவி பிரமாணம் செய்து வைப்பவர் ஆளுநர்.
- சட்ட மன்ற உறுப்பினராக இல்லாத நபரையும் முதலமைச்சர் (அ) அமைச்சராகவும் நியமிக்கலாம். ஆனால் பதவி ஏற்ற 6 மாத்திற்குள் சட்ட மன்ற இரு அவைகளில் ஏதாவது ஒரு அவையில் உறுப்பினராக வேண்டும்.

- 2003 91-வது சட்டத்திருத்ததின் படி முதலமைச்சர் உட்பட மாநில அமைச்சரவை எண்ணிக்கை சட்டபேரவை உறுப்பினர்களின் எண்ணிக்கையில் 15% க்கு மிக கூடாது குறைந்த பட்சம் 12 பேர் இருக்க வேண்டும் என மாற்றப்பட்டது.
- மாநில அமைச்சர்கள் சட்டமன்றத்திற்கு பதில் அளிக்க பொறுப்புடையவர்கள்.
- மாநில சட்டமன்ற அவை நடவடிக்கைகளுக்கு பொறுப்புடையவர்கள் அமைச்சர்கள்.
- மாநில தலைமை செயலகம் மூலம் மாநில அமைச்சரவை தங்கள் கொள்கைகளையும் திட்டங்களையும் நடைமுறைபடுத்தும்.
- Art 164-ன் படி முதலமைச்சர் (ம) அமைச்சர்கள் சம்பளம் (ம) படிகளை சட்டமன்றம் நிர்ணயிக்கும்.
- முதலமைச்சர் பதவியில் நீடிக்கும் வரை அமைச்சரவை பதவியில் இருக்கும்.
- மத்திய அமைச்சரவை (கேபினட்) பெற்றுள்ள அனைத்து அதிகாரங்களையும் மாநில அளவில் மாநில அமைச்சரவை பெற்றுள்ளது.
- துணை முதலமைச்சர் பற்றி அரசியலமைப்பில் குறிப்பிடப்படவில்லை (துணை பிரதமர் பற்றியும் குறிப்பிடவில்லை)

## மாநில அரசு தலைமை வழக்கறிஞர்

## Art 165

- மாநிலத்தின் மிக உயர்ந்த சட்ட அலுவலர் அட்வகேட் ஜென்ரல்
- இவரை நியமிப்பவர் ஆளுநர்
- புதவி காலம் அரசியலமைப்பில் குறிப்பிடவில்லை.
- ஆளுநரால் எந்த வித முன்னறிவிப்பும் இன்றி பதவி நீக்கம் செய்யலாம்.
- தகுதிகள் - உயர்நீதி மன்ற நீதிபதிக்கான தகுதிகள் பெற்று இருக்க வேண்டும்.
- இவர் சட்டமன்ற உறுப்பினர்களுக்கான சிறப்புரிமை (ம) பாதுகாப்பை பெறுவார்.
- சம்பளம் அரசியலமைப்பில் குறிப்பிடவில்லை.
- சட்டமன்றத்தின் இரு அவைகளிலும் கலந்து கொண்டு பேசலாம், கருத்து தெரிவிக்கலாம் ஆனால் வாக்களிக்க இயலாது.
- ஆளுநர் (ம) மாநில அரசிற்கு சட்ட ஆலோசனைகள் வழங்குவார்.
- மாநிலத்தில் அனைத்து நீதிமன்றங்களிலம் அரசின் சார்பில் வாதாடுவார் (அ) நீதிமன்ற நடவடிக்கைகளில் கலந்து கொள்வார்.
- பதவியில் இருக்கும் போது எந்த அமைப்புகள் (ம) நிறுவனங்களிலும் அங்கம் வகிக்க முடியாது.
- தற்போதைய TN அட்வகேட் ஜெனரல் -

**Art166:**

- மாநில அரசின் பணிகள் (ம) அலுவல்கள் மேற்கொள்வது பற்றி குறிப்பிடுகிறது.

**முதலமைச்சரின் கடமைகள் அதிகாரங்கள் (ம) பணிகள் Art 167:**

- மாநில அரசாங்கத்தின் தலைவராக (அ) அரசியல் தலைவர் என அழைக்கப்படுகிறது. Head of the Govt (or) Leader
- மாநில அமைச்சரவையின் தலைவராக செயல்படுவார்.
- அமைச்சர்கள் நியமனத்தில் ஆளுநருக்கு பரிந்துரைப்பார்.
- கடமை தவரும் போது எந்த அமைச்சரையும் பதவி விலக கோருவார். (பதவி நீக்கம் செய்பவர் ஆளுநர்)
- அமைச்சர்களுக்கு ஆலோசனை வழங்கி ஒருங்கிணைத்து கட்டுப்படுத்துவார்.
- ஆளுநர்களுக்கும் அமைச்சர்களுக்கும் இடையே பாலமாக செயல்படுவார்.
- அமைச்சரவை முடிவுகளை ஆளுநருக்கு தெரிவிப்பார்.
- அவசர சட்டம் பிறப்பிக்கும் (Art 213),முடியும்(Art 174 ன்)படியும் சட்ட பேரவை கலைக்க ஆளுனருக்கு பரிந்துரைப்பார்.
- சட்டமன்ற கூட்ட தொடரை கூட்ட (அ) ஒத்தி வைக்க ஆளுநருக்கு ஆலோசனை வழங்குவார்.
- மாநில திட்ட குழுவின் தலைவராக செயல்படுவார்.
- அட்வகேட் ஜென்ரல்,SPSC தலைவர் (ம) உறுப்பினர்கள், மாநில தேர்தல் ஆணையர் ஆகியோர் நியமனத்தில் ஆளுநருக்கு ஆலோசனை வழங்குவார்.
- தேசிய வளர்ச்சி குழு (NDC) (ம) மாநிலங்களுக்கிடையேயான குழு ஆகியவற்றில் உறுப்பினராக இருப்பார்.
- மண்டல குழுவில் (Zonal Council) உறுப்பினராக இருப்பார். சுழற்சி முறையில் துணை தலைவராகவும் 1 ஆண்டு காலம் இருப்பார்.
- மாநில அரசின் முதன்மை கருத்தாளராக (Chief Spikesman) செயல்படுவார்.
- அரசியல் தொடர்பான பிரச்சனைகளில் முக்கிய முடிவுகளை எடுப்பார்.

# Chapter III

## மாநில சட்டமன்றம்

## Art 168 – 212

- Art 168 மாநில சட்டமன்றம் என்பது ஆளுநர், சட்ட பேரவை, சட்ட மேலவையை உள்ளடக்கியது என குறிப்பிடுகிறது.
- நிர்வாக துறை சட்ட மன்றத்தின் நிகழ்வுகளுக்கு கட்டுப்பட்டது.
- தற்போது 7 மாநிலங்களில் இரு அவை சட்டமன்றம் (சட்ட மேலவை, சட்ட பேரவை) உள்ளது.
  1. ஆந்திர பிரதேசம் - 58
  2. பீஹார் 75
  3. கர்நாடகா 75
  4. ஜம்மு காஷ்மீர் 36
  5. மகாராஷ்டிரா 78
  6. உத்திர பிரதேசம் 100
- ஜம்மு காஷ்மீரில் இரு அவை சட்டமன்றம் அம்மாநில அரசியிலமைப்பின் படி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**சட்ட மேலவை: Legislative Concil (விதான் பரிஷத்)**

**Art 169:**

- நாடாளுமன்றம் சாதாரண பெரும்பான்மை தீர்மானம் மூலம் ஒரு மாநிலத்தில் சட்டமேலவையை உருவாக்கலாம் (அ) நீக்கலாம் (Create (or) Abolish) ஆனால் சட்ட பேரவையை கலைப்பது போல் கலைக்க (dissolve) இயலாது.
- சட்ட மேலவையை உருவாக்கலாம் (அ) நீக்கலாம் என அம்மாநில சட்ட பேரவையில் 2/3 பங்கு சிறப்பு பெரும்பான்மை தீர்மானம் மூலம் நிறைவேற்றி நாடாளுமன்றத்திற்கு பரிந்துரைத்தால் மட்டுமே நாடாளுமன்றம் சட்டமேலவையை உருவாக்கலாம் (அ) நீக்கலாம்.
- 1919 மாண்டேகு செம்ஸ்போர்டு சட்டப்படி 1921 Jan 9-ல் சென்னை மாகாண சட்ட மேலவை செயல்பட துவங்கியது ஆனால் 1921 Jan 12-ல் ஆளுநரால் முறைப்படி துவக்கி வைக்கப்பட்டது.
- Nov 1 1986-ல் TN சட்ட மேலவை நீக்கப்பட்டது (Abolish) (நீக்கப்படும் போது உறுப்பினர் எண்ணிக்கை.-63)
- 2010-ல் 78 உற்பினர்களை கொண்ட TN சட்ட மேலவையில் உருவாக்க நாடாளுமன்றம் தமிழ்நாடு சட்ட மேலவை சட்டத்தை 2010-ல் இயற்றியது, இச்சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன் 2011-ல் நீக்கப்பட்டது.

**Art 171:**

- சட்ட மேலவை உறுப்பினர் எண்ணிக்கை பற்றி குறிப்பிடுகிறது.
- சட்ட மேலவை உறுப்பினர் எண்ணிக்கை அம்மாநில சட்ட பேரவை உறுப்பினர் எண்ணிக்கையில் 1/3 பங்கு இருக்கலாம் (அல்லது) குறைந்தபட்சம் 40 இருக்க வேண்டும்.
- உறுப்பினர்கள் மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கபடாமல் மொத்த உறுப்பினர்களில் 5/6 பங்கு உறுப்பினர்கள் மறைமுக தேர்தல் மூலமும், 1/6 பங்கு உறுப்பினர்களை கலை, இலக்கியம், அறிவியல், சமூக சேவை, கூட்டுறவு இயக்கம் ஆகிய துறைகளில் சிறந்து விளங்குபவர்களை ஆளுநர் நியமிப்பார்.
- 5/6 பங்கு மறைமுக தேர்தல் மூலம் தேர்தெடுக்கப்படுபவர்கள்.
- 1/3 பங்கு உறுப்பினர்களை அம்மாநில சட்டபேரவை உறுப்பினர்களால் (MLA) தோந்தெடுக்கப்படுகின்றன.
- 1/3 பங்கு உறுப்பினர்கள் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகளால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
- 1/12 பங்கு உறுப்பினர்கள் அம்மாநிலத்தில் உள்ள பல்கலைகழக பட்டதாரிகளால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
- 1/12 பங்கு உறுப்பினர்கள் அம்மாநிலத்தில் உள்ள பட்டதாரி ஆசிரியர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

**சட்ட மேலவை தலைவர் (ம) துணை தலைவர்:-**

- Art 182 தலைவர் (ம) துணை தலைவர் பற்றி குறிப்பிடுகிறது.
- தலைவர், துணை தலைவர் சட்ட மேலவை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுவர்.

**Art 183:**

- சட்ட மேலவை தலைவர், துணை தலைவரை சட்ட மேலவையில் பெரும்பான்மை தீர்மானம் மூலம் பதவி நீக்கம் செய்வது பற்றி குறிப்பிடுகிறது.
- பதவி நீக்க தீர்மானம் முன்னறிவிப்பு 14 நாட்களுக்கு முன் அந்நபருக்கு வழங்க வேண்டும்.

**சட்ட பேரவை**

**Legislative assembly Lower house**

**(அ) மாநில கீழவை**

- ஹிந்தி பெயர் விதான் சபா
- மக்களார் நேரடியாக தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களை கொண்டது.
- மாநிலத்தின் அதிகாரம் பெற்ற அவையாக (அதிகார மையமாக) விளங்குகிறது.

**Art 170:**

- சட்ட பேரவை உறுப்பினர் எண்ணிக்கை பற்றி குறிப்பிடுகிறது.
- உறுப்பினர் எண்ணிக்கை மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடும்.
- அதிகபட்சம் 500 உறுப்பினர்கள் இருக்கலாம்.
- குறைந்தபட்சம் 60 உறுப்பினர்கள் இருக்க வேண்டும். ஆனால் சிக்கிம் (32), கோவா (40), மிசோரம் (40), புதுச்சேரி (30) ஆகியவை 60-க்கும் குறைவான உறுப்பினர்களை பெற்றுள்ளன.
- ஆதிக உறுப்பினர்களை கொண்ட மாநிலம் உத்திரபிரதேசம் (403+1) ஆங்கிலோ இந்திய உறுப்பினர்-1
- TN சட்ட பேரவை உறுப்பினர் எண்ணிக்கை 235 (234+1) ஆ.இ. உறுப்பினர்.
- 234 உறுப்பினர்கள் மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
- 234 தொகுதிகளில்
  - பொது தொகுதிகள் General 188
  - தனி தொகுதிகள் 44 SC-44,ST-2
- ஒரு உறுப்பினர் ஆளுநரால் ஆங்கிலோ இந்தி சமூகத்தை சார்ந்தவர் நியமிக்கபடுவார்.
- 2009 95-வது சட்டத் திருத்ததின் படி மக்களவை (ம) சட்ட பேரவைகளில் SC, ST, ஆங்கிலோ இந்தியர்களுக்கான இட ஒதுக்கீடு 26.1.2010–ல் லிருந்து 25.1.2020 வரை மேலும் 10 ஆண்டுகளுக்க நீட்டிக்கப்பட்டது.
- யூனியன் பிரதேசங்களில் 2 யூனியன் பிரதேசங்களில் மட்டும் சட்ட பேரவை உள்ளது.
  1. புதுச்சேரி (30)
  2. டெல்லி (70)

**சட்ட பேரவை சபாநாயகர் (ம) துணை சபாநாயகர்**

**Art 178:**

- சபாநாயகர், துணை சபா நாயகர் பற்றி குறிப்பிடுகிறது.
- சபாநாயகர், துணை சபா நாயகர் சட்ட பேரவை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுவர்.
- சட்ட பேரவையை முறையாக நடத்தும் பொறுப்பை பெற்றவர் சபாநாயகர்.
- மாநில சட்டமன்றத்தில் ஒரு மசோதாவை சாதாரண மசோதாவா (அ) பண மசோதாவா என தீர்மானிப்பவர் சபாநாயகா.
- சட்ட பேரவை கலைக்கப்படும்போத சபாநாயகர் பதவி காலியாகாது.
- புதிய சட்ட பேரவையின் முதல் கூட்டம் கூடும் வரை பதவியில் இருப்பார்.
- சபாநாயகர் இல்லாத போது துணை சபாநாயகர் சபாநாயருக்கான அனைத்து அதிகாரங்களையும் பெற்று இருப்பார்.

**Art 179:**

- சபாநாயகர் (ம) துணை சபாநாயகரை சட்டபேரவையில் பெரம்பான்மை தீர்மானம் மூலம் பதவிநீக்கம் செய்யலாம்.
- பதவி நீக்க தீர்மானம் முன்னறிவிப்பு 14 நாட்களுக்கு முன் அந்நபருக்கு வழங்க வேண்டும்.

**மாநில சட்டமன்றத்தின் பதவிகாலம்:**

**Art 172:**

**சட்ட மேலவை:**

- சட்ட மேலவை நிரந்தரமானது (ராஜ்ய சபா போன்றது), கலைக்க இயலாது (Dissolve)
- உறுப்பினர்களின் பதவிக்காலம் 6 ஆண்டுகள், (MLC –Member of Legislative Council) இரண்டு ஆண்டிற்கு ஒரு முறை 1/3 பங்கு உறுப்பினர்கள் பதவி விலகுவர்.

**சட்ட மேலவை:**

- சட்ட பேரவை (ம) உறுப்பினர்களின் பதவி காலம் 5 ஆண்டுகள்.
- பதவிகாலம் முடியும் முன்பே Art 174 –ன் படி ஆளுநரால் சட்ட பேரவை கலைக்கபடலாம்.
- நெருக்கடி நிலையின் போது சட்ட பேரவை பதவிக்காலம் 1 ஆண்ட நீட்டிக்கலாம்.

**சட்ட மன்ற உறுப்பினர்களின் தகுதிகள்:**

**Art 173:**

**சட்ட மேலவை:**

- குறைந்தபட்ச வயது 30
- மற்ற தகுதிகளை நாடாளுமன்றம் நிர்ணயிக்கும்

**சட்ட பேரவை:**

- குறைந்தபட்ச வயது 25
- மாநிலத்தில் ஏதாவது ஒரு தொகுதியில் வாக்காளராக இருக்க வேண்டும்.
- சட்ட மேலவை (அ) பாராளுமன்றம் (அ) வேறு மாநில சட்டமன்றத்தில் உறுப்பினராக இரக்க கூடாது.
- மற்ற தகுதிகளை அவ்வப்போது பாராளுமன்றம் நிர்ணயிக்கும்.

**G.P:**

- ஒரு அவையில் உறுப்பினராக இருக்கும் ஒரு நபர் ஒரு அவையிலோ (அ) மற்றொரு பாராளுமன்றத்திலோ உறுப்பினராக இருக்க கூடாது.

**சட்ட பேரவை சிறப்பு அதிகாரங்கள்:**

- பண மசோதா முதலில் இங்கு மட்டுமே அறிமுகப்படுத்த முடியும்.
- முாநில அரசாங்கத்தின் மீது (அ) அமைச்சரவை மீது நம்பிக்கையில்லா தீர்மானம் இங்கு மட்டுமே கொண்டு வர முடியும்.
- மானிய கோரிக்கை மீதான வாக்கெடுப்பு இங்கு மட்டுமே நடத்த முடியும்.
- குடியரசுத் தலைவர், ராஜ்ய சபா, சட்ட மேலவை தேர்தல்களில் பங்கு பெறுகிறது.
- சட்ட மேலவையை உருவாக்க (அ) நீக்க நாடாளுமன்றத்திற்கு பரிந்துரைக்கிறது.
- சட்ட மேலவையை விட அதிக அதிகாரம் பெற்றது. (சட்ட மேலவையின் அதிகாரத்தையும் மீறி செயல்படலாம்) இவை தவிர மற்ற அனைத்தையிலும் இரு அவைகளும் சமமான அதிகாரத்தை பெற்று இருக்கும்.

**Art 174:**

- மாநில சட்ட மன்ற கூட்ட தொடரை கூட்டுதல், ஒத்தி வைத்தல். முடிவுக்கு கொண்டு வருதல், சட்ட பேரவையை கலைத்தல் பற்றி குறிப்பிடுகிறது.
- சட்ட பேரவையை கலைக்க பரிந்துரைப்பர் முதலமைச்சர் கலைப்பவர் ஆளுநர்
- மாநில சட்ட மன்றத்தில் கூட்டு கூட்டம் கிடையாது.

**Art 188:**

- சட்ட மன்ற உறுப்பினர்கள் பதவி பிரமாணம் பற்றி குறிப்பிடுகிறது.
- சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு பதவி பிரமாணம் செய்து வைப்பர் ஆளுநர் (அ) அவரால் நியமிக்கப்பட்ட நபர்.
- நடைமுறையில் சட்ட மேலவை உறுப்பினர்களுக்கு சட்ட மேலவை தலைவர் பதவி பிரமாணம் செய்து வைப்பார்.
  சட்ட பேரவை உறுப்பினர் - சபாநாயகர்.

**Art 190:**

- சட்ட மன்ற உறுப்பினர் காலி பணியிடம் பற்றி குறிப்பிடுகிறது.
- தொடர்ந்து 60 நாட்களுக்க மேல் எந்த வித முன்னறிவிப்பும் இன்றி சபைக்கு வராமல் இருந்தால் அப்பணியிடம் காலியிடமாக கருதப்படும்.

**Art 191:**

- மாநில சட்ட மன்ற உறுப்பினர்கள் தகுதியிழப்பு பற்றி குறிப்பிடுகிறது.
- தகுதியிழப்பு செய்பவர் - தேர்தல் ஆணையத்தை கலந்து ஆலோசித்த பின் ஆளுநர்
- கட்சி தாவல் தடை சட்டத்தின் படி தகுதியிழப்பு செய்பவர் சபாநாயகர்.

**Art 197:**

- சட்டமன்றத்தில் மசோதா அறிமுகப்படுத்தும் முறைகள் பற்றி குறிப்பிடுகிறது.
- மசோதா 3 வாசிப்புகளுடன் 5 நிலைகளை கடந்து ஆளுநர் ஒப்புதலுடன் சட்டமாகும்.

**Art 199:**

- மாநிலத்தில் பண மசோதா பற்றி குறிப்பிடுகிறது.

**Art 202:**

- மாநில பட்ஜெட் பற்றி குறிப்பிடுகிறது.

**Art 207:**

- மாநில நிதி மசோதா பற்றி குறிப்பிடுகிறது.

**Art 210:**

- மாநில சட்ட மன்றத்தில் அலுவர் (அ) ஆட்சி மொழி பற்றி குறிப்பிடுகிறது.
- சட்ட மன்றத்தின் அலுவல் மொழி ஆங்கிலம், ஹிந்தி (அ) 8-வது அட்டவணையில் உள்ள மொழிகள்.

## Chapter IV

### Art– 213

- மாநில ஆளுநரின் சட்ட மன்ற அதிகாரங்கள் (அவசர சட்ட அதிகாரம்) பற்றி குறிப்பிடுகிறது.

## Chapter V

## உயர் நீதிமன்றம்

## Art214 – 232

- மாநில நீதிதுறையின் மிக உயர்ந்த நீதிதுறை அமைப்பு உயர்நீதிமன்றம்

**Art– 214**

- ஒவ்வொரு மாநிலத்திற்கு ஒரு உயர்நீதிமன்றம் அமைய வழி செய்கிறது.

**Art– 231** –ன் படி இரண்டு (அ) அதற்கு மேற்பட்ட மாநிலங்களுக்கம் பொதுவாக ஒரே உயர் நீதி மன்றம் இருக்கலாம்.

- இரண்டு (அ) அதற்கு மேற்பட்ட மாநிலங்களுக்கு பொதுவாக உள்ள உயர்நீதி மன்றங்கள்-4
  1. பம்பாய் - மகாராஸ்டிரா, கோவா
  2. பஞ்சாப் ஹரியானா - பஞ்சாப், ஹரியானா
  3. கௌகாத்தி – அஸ்ஸாம், நாகலாந்து, அருணாச்சலபிரதேசம், மிசோரம்
  4. ஆந்திரா & தெலுங்கானா
- 2 (அ) அதற்கு மேற்பட்ட மாநிலங்கள் (அ) யூனியன் பிரதேசங்களுக்கு பொதுவாக உள்ள உயர்நீதிமன்றங்கள் 6
  1. பம்பாய் - மகாராஷ்டிரா, கோவா, தாத்ரா நாகர்வேலி, டாமன், டையு.
  2. பஞ்சாப் - ஹரியானா – பஞ்சாப், ஹரியானா, சண்டிகர்.
  3. கொளகாத்தி – அஸ்ஸாம், அருணாச்சலபிரதேசம், நாகாலாந்து, மிசோரம்
  4. கல்கத்தா –WB, அந்தமான் - நிகோபர்
  5. மெட்ராஸ் - TN, புதுச்சேரி
  6. கேரளா – கேரளா, லட்சதீவுகள்
- இந்தியாவில் தற்போது 24 உயர்நீதிமன்றங்கள் உள்ளது.
- தனி உயர் நீதி மன்றத்தை பெற்றுள்ள யூனியன் பிரதேசம் டெல்லி.
- அதிக நீதி எல்லை கொண்ட உயர் நீதிமன்றம் கௌகாத்தி
- சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளை 24.7.2004 எற்படுத்தப்பட்டது.

**Art 217:**

- உயர் நீதி மன்ற நீதிபதிகள் நியமனம் (ம) கட்டுபாடுகள் பற்றி குறிப்பிடுகிறது.
- உயர் நீதி மன்ற தலைமை நீதிபதி (ம) மற்ற நீதிபதிகளை இந்திய உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி (ம) அம்மாநில ஆளுநரை கலந்து ஆலோசித்த பின் குடியரசுத் தலைவர் நியமிப்பார்.
- பொதுவாக உயர் நீதி மன்றத்தின் மூத்த நீதிபதி (அ) உச்ச நீதிமன்ற நீதிபதியை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியாக நியமிக்கப்படுகிறது.
- உயர் நீதிமன்ற நீதிபதிகள் எண்ணிக்கை மாநிலத்திற்கு மாநிலம் மாறுபடும். எண்ணிக்கையை தீர்மானிப்பவர் குடியரசுத் தலைவர்.

**தகுதிகள்:**

- நீதிமன்ற அலுவலக தலைமை பொறுப்பில் (மாவட்ட நீதிபதி) 10 ஆண்டுகள் பணியாற்றி இருக்க வேண்டும். (அ) உயர்நீதி மன்ற வழக்கறிஞராக 10 ஆண்டுகள் பணியாற்றி இருக்க வேண்டும்.

**பதவிகாலம்:**

- 62 வயது வரை
- 1963 15-வது சட்டதிருத்தின் படி உயர்நீதி மன்ற நீதிபதிகள் ஓய்வு வயது 60 to 62 ஆக உயர்த்தப்பட்டது.
- 114-2011–வது சட்ட திருத்த மசோதா படி ஒய்வு வயது 62 to 65 ஆக. உயர்த்தும் மசோதா பாராளுமன்றத்தில் நிலுவையால் உள்ளது.
- நீதிபதிகள் பதவி விலகல் கடிதத்தை குடியரசுத் தலைவரிடம் வழங்க வேண்டும்.
- நீதிபதிகள் விசாரணைச் சட்டம் - 1968

**பதவி நீக்கம்:**

- உயர் நீதிமன்ற நீதிபதிகளை தவறான நடத்தை (அ) தகுதியின்மை காரணங்களுக்காக நாடாளுமன்றத்தில் 2/3 பங்கு சிறப்பு பெரும்பான்மை தீர்மானம் மூலம் கு.தலைவர் பதவி நீக்கம் செய்வார்.

**Art 219:**

- உயர்நீதி மன்ற நீதிபதிகள் பதவி பிரமாணம் பற்றி குறிப்பிடுகிறது.
- பதவி பிரமாணம் செய்து வைப்பவர் ஆளுநர் (அ) அவரால் நியமிக்கப்பட்ட நபர்

**Art 221:**

- உயர் நீதிமன்ற நீதிபதிகள் சம்பளம், படிகள் பற்றி குறிப்பிடுகிறது.

**Art 222:**

- நீதிபதிகளை ஒரு உயர்நீதிமன்றத்திலிருந்து மற்றொரு உயர்நீதி மன்றத்திற்கு மாற்றுவது பற்றி குறிப்பிடுகிறது.
- தலைமை நீதிபதியை கலந்து ஆலோசித்து குடியரசுத் தலைவர் மாற்றம் செய்பவர்

**Art 223:**

- உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி பதவி காலியாக இருக்கும் போது குடியரசுத் தலைவர் மூத்த நீதிபதி ஒருவரை தற்காலிக தலைமை நீதிபதியாக நியமிப்பார். (acting chief Judge)

**Art 224:**

- உயர்நீதி மன்றத்தில் கூடுதல் பணி (அ) வழக்குகளை தீர்க்க குடியரசு தலைவர் கூடுதல் (அ) தற்காலிக நீதிபதிகளை நியமிப்பது குறிப்பிடுகிறது.

**Art 224 A:**

- உயர் நீதிமன்றத்தில் ஓய்வு பெற்ற நீதிபதிகளை 2 ஆண்டுகளுக்கு மிகாமல் தற்காலிக நீதிபதிகளாக நியமிப்பது பற்றி குறிப்பிடுகிறது.

**Art 225:**

- உயர்நீதிமன்றம் பொது நீதி வரையரையை பெற்றுள்ளது. (Jurirdiction of Existing High court)

**Art 228:**

- உயர்நீதி மன்றம் வழக்குகளை தானே பதிந்து விசாரிக்கும் அதிகாரத்தை பெற்றுள்ளது. (Transfer of certain cases to highcourts)

**உயர்நீதி மன்றத்தின் அதிகாரங்கள்:**

**1.முதல் வரப்பு நீதி அதிகாரங்கள்:**

- நிர்வாகம், திருமணம், மணவிலக்கு (divorce), கம்பெனி சட்டம், நீதிமன்ற அவமதிப்பு ஆகிய வழக்குகளை விசாரிக்கிறது.
- சட்டமன்ற, நாடாளுமன்ற, உறுப்பினர்களின் தேர்தல் தொடர்பான வழக்குகளை விசாரிக்கிறது.

  S.C கு.த Raj
  
  து.கு.த Lok - HC
  
  MLA
  
  MLC
- வருவாய் வசூலிப்பு வழக்குகளை விசாரிக்கிறது.

**1.நீதி பேராணை (அ) நீதி அதிகாரம்:**

- Art 226 –ன் படி 5 நீதி பேராணைகளை பெற்றுள்ளது. இந்நீதி பேராணைகள் மூலம் அடிப்படை உரிமைகளுக்கு தீர்வு வழங்குகிறது.
- உச்ச நீதிமன்றத்தின் நீதி பேராணை அதிகாரத்தை விட உயர் நீதி மன்றம் அதிக அதிகாரம் பெற்றுள்ளது.
- உச்சநீதிமன்றம் அடிப்படை உரிமைகளுக்கு மட்டுமே தீர்வு வழங்கும், உயர்நீதி மன்றம் அடிப்படை உரிமைகள் (ம) இதர உரிமைகளுக்கும் தீர்வு வழங்கும்.

**1.மேல் முறையீட்டு அதிகாரம்: (Appellate)**

- வழக்குகளின் அடிப்படை மேல் முறையீட்டு நீதிமன்றமாக செயல்படுகிறது.
- சார் நிலை நீதிமன்றங்களில் வழங்கப்பட்ட Civil (ம) குற்றவியல் வழக்குகளின் மேல் முறையீடுகளை விசாரிக்கும்.
- குற்றவியல் வழக்குகளில் கீழ் நீதி மன்றத்திற்கு எதிராகவும் செயல்படலாம்.

1. **கண்காணிப்பு நீதி அதிகாரம்: (Supervisory)**
   - Art 227 –ன் படி இந்த அதிகாரத்தை பெற்றுள்ளது.

- மாநிலத்தில் உள்ள அனைத்து நீதிமன்றங்கள், தீர்ப்பாயங்களை (ராணுவ தீர்ப்பாயம் தவிர) கண்காணிக்கிறது.
- நீதி மன்றங்கள் (ம) தீர்ப்பாயங்களுக்கு (ராணுவ தீர்ப்பாயம் தவிர) பொது விதிகள் (ம) செயல் முறை ஆணைகளை வெளியிடுகிறது.
- நீதி வழங்குதல் (ம) நிர்வாக பணிகளை மேற்கொள்கிறது.

2. **சார்நிலை நீதிமன்றங்களை கட்டுப்படுத்தும் அதிகாரம்: (Control over subordinary Courts)**
   - Art 235 –ன் படி இந்த அதிகாரத்தை பெற்றுள்ளது.
   - மாவட்ட நீதிபதிகள், மாவட்ட நீதிபதி அல்லாத மற்ற மாநில நீதிதுறை அலுவலர்கள் நியமனத்தில் ஆளுநருக்கு ஆலோசனை வழங்குகிறது.
   - மேலும் இவர்களின் பதவி உயர்வு, விடுப்பு வழங்குதல், பணி மாற்றம் ஆகிய பணிகளை மேற்கொள்கிறது.
   - வழக்குகளை ஒரு சார்நிலை நீதிமன்றத்திலிருந்து மற்றொரு சார்நிலை நீதிமன்றத்திற்கு மாற்றுகிறது.
3. **ஆவண நீதிமன்ற அதிகாரம்:**
   - Art 2015 –ன் படி ஆவண நீதிமன்றமாக செயல்படுகிறது, மேலும் நீதிமன்ற அவமதிப்புகளை கண்டிக்கிறது.
   - உயர் நீதி மன்றம் வழங்கும் தீர்ப்புகள், விதிகள் (ம) இதர நடவடிக்கைகளை மாநிலத்தில் உள்ள அனைத்து நீதிமன்றங்களும் ஆவணமாக கருதி தீர்ப்பு அளிக்கிறது.
   - நீதி மன்ற அவமதிப்பு சட்டம் 1971 –ன் படி நீதி மன்ற அவமதிப்புகளை தண்டிக்கிறது.
4. **நீதி மன்ற மறு ஆய்வு (அ) நீதி புனராய்வு அதிகாரங்கள்:**

- Art 13, 226 –ல் இந்த அதிகாரத்தை பெற்றுள்ளது.
- அரசியலமைப்பிற்கு முரணாக உள்ள மாநில அரசு சட்டங்களை ஆராய்ந்து அவற்றை அரசியலமைப்பிற்கு முரணானது (அ) செல்லாது என அறிவிக்கும் அதிகாரம் பெற்றுள்ளது.

## Chapter – VI

### சார்நிலை (அ) துணை நீதி மன்றங்கள்

### Art 233 – 237

- உயர்நீதிமன்றத்திற்கு கீழ் செயல்படும் நீதிமன்றங்கள் சார்பு நீதிமன்றங்கள் ஆகும்.

**Art 233:**

- மாவட்ட நீதிபதிகள் நியமனம் பற்றி குறிப்பிடுகிறது.
- உயர்நீதி மன்றத்தை கலந்து ஆலோசித்த ஆளுநர் நியமிப்பார்.

**தகுதிகள்:**

- மத்திய (அ) மாநில அரசு பணியில் இருத்தல் (அ) இருந்திக்க கூடாது.

- வழக்கறிஞராக (அ) அரசு வழக்கறிஞராக 7 ஆண்டுகள் பணியாற்றி இருக்க வேண்டும்.
- மேலும் அந்நபரை உயர்நீதி மன்றம் பரிந்துரைக்க வேண்டும்.

**Art 234**

- மாவட்ட நீதிபதி அல்லாத மற்ற மாநில நீதி துறை அலுவலர்களை நியமிப்பது பற்றி குறிப்பிடுகிறது.
- SPSC, (மாநில அரசு பணியாளர் தேர்வாணையம்) (ம) உயர்நீதிமன்றத்தை கலந்து ஆலோசித்த பின் ஆளுநர் நியமிப்பார்

**G.P**

- சார்பு (அ) துணை நீதி மன்றங்கள் மாவட்ட தலைநகரம் (அ) அதற்கு கீழ் நிலையில் இயங்கும்.
- இந்நீதிமன்ற நீதிபதிகளின் பதவி உயர்வு, பணி மாற்றம், விடுப்பு வழங்குதல் ஆகியவற்றை உயர்நீதிமன்றம் அதிகாரம் செலுத்தும்.
- சார்பு (அ) துணை நீதிமன்றங்கள் 2 வகைப்படும்

**1.குற்றவியல் நீதி மன்றங்கள்:**

- மாவட்ட அளவில் குற்றவியல் நீதிமன்றம் மாவட்ட அமர்வு நீதிமன்றம் (District Sessions Cocurt)
- இது மாவட்ட அமர்வு நீதிபதி (District Sessions Judge) (அ) கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதியின் கீழ் இயங்கும் (Additional D.S.J)

**2.Civil (அ) உரிமையியல் நீதிமன்றங்கள்:**

- மாவட்ட அளவில் உரிமையியல் (அ) civil வழக்குகளை விசாரிக்கும் நீதிமன்றம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்
- இது மாவட்ட நீதிபதி (அ) கூடுதல் மாவட்ட நீதிபதிகளின் கீழ் இயங்கும்.

**G-P**

- 1989 –ல் உச்சநீதிமன்றம் நாடு முழுவதும் துணை நீதி மன்றங்களில் ஒரே மாதிரியான பதவி நிலையை பின்பற்ற ஆணையிட்டது.
- உச்ச நீதிமன்ற ஆணைப்படி குற்றவியல் நீதிமன்ற நீபதிகளின் படிநிலை

அமர்வு நீதிபதி (Sessions Judge)

↓

கூடுதல் அமர்வு நீதிபதி (Additional)

↓

முதன்மை நீதி துறை நடுவர்

↓

நீதி துறை நடுவர்

Civil (அ) உரிமையியல் நீதிமன்றங்களின் நீதிபதிகளின் படி நிலை:

மாவட்ட நீதிபதி

↓

கூடுதல் மாவட்ட நீதிபதி

↓

முதுநிலை சிவில் நீதிபதி

↓

இளநிலை சிவில் நீதிபதி

## PART – VII

## Art 238:

**1956 7-வது சட்டதிருத்தின் படி Part VII (Art 238) நீக்கப்பட்டது.**

## Part VIII

**யூனியன் பிரதேசங்கள் (அ) மத்திய ஆட்சி பகுதிகள்**

## The Union Teritories

## Art 239-242

- 1956 7-வது சட்டதித்தத்தின் படி Part C ளுவயவநள (ம) Part D மாநிலங்கள் சேர்த்து யூனியன் பிரதேசங்களாக மாற்றப்பட்டது

யூனியன் பிரதேசம் 4 காரணங்களுக்காக ஏற்படுத்தப்பட்டது.

1. அரசியல் நிர்வாக காரணம் (டெல்லி, சண்டிகர்)
2. கலாச்சார (ம) தனிதன்மை காரணமாக ஏற்படுத்தப்பட்டவை. (புதுச்சேரி, தாத்ரா நாகர் வேலி, டாமன், டையூ
3. புள்ளியியல் முக்கியத்துவம் காரணமாக ஏற்படுத்தப்பட்டவை (Gtategic importance) (அந்தமான் நிகோபர், லட்ச தீவுகள்)
4. SC,ST மீது சிறப்பு கவனம் செலுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்டவை (மணிப்பூர், திரிபுரா, அருணாச்சலபிரதேசம், மிஸோரம்)
    - யூனியன் பிரதேசங்கள் குடியரசு தலைவரலால் (அ) குடியரசு தலைவரால் நியமிக்கப்பட்ட நபர்களால் நிர்வாகம் செய்யப்படுகிறது.

- யூனியன் பிரதேச நிர்வாகிகள் குடியரசுத் தலைவரின் முகவராக செயல்படுகின்றனர். ஆனால் ஆளுநரை போல மத்திய அரசின் முகவராக செயல்படுவதில்லை.
- டெல்லியில் நிர்வகிப்பவர்கள் - துணை நிலை ஆளுநர், முதலமைச்சர், அமைச்சரவை
- புதுச்சேரி – துணை நிலை ஆளுநர், முதலமைச்சர் அமைச்சரவை.
- அந்தமான், நிகோபார் - துணை நிலை ஆளுநர்
- சண்டகர். தாத்ரா நாகர்வேலி, டாமன், டையு, லட்ச தீவு – ஆட்சியர் (அ) நிர்வாகிகள் (Administrator)
- பஞ்சாப் ஆளுநரை, சண்டிகருக்கும் ஆட்சியாளராக (Administrator) செயல்படுகிறது.
- தாத்ர நாகர்வேலின் Administrator டாமன் டையுவிற்கும் administrator–ஆக செயல்படுகிறார்.
- டெல்லி (ம) புதுச்சேரி ஆகிய 2 யூனியன் பிரதேசங்களில் மட்டும் சட்ட பேரவை, அமைச்சரவை செயல்படுகிறது.
- புதுச்சேரியில் சட்ட பேரவை (ம) அமைச்சரவை 14 –வது சட்டத் திருத்தம் 1962 –ன் படி 1963 –ல் ஏற்படுத்தப்பட்டது.
- டெல்லியில் 1991 69வது சட்டத்திருத்தத்தின் படி 70 உறுப்பினர் கொண்ட சட்ட பேரவையும் + முதலமைச்சர் உட்பட 7 அமைச்சர்களை கொண்ட அமைச்சரையும் 1992-ல் ஏற்படுத்தப்பட்டது.

**Art 239:**

- குடியரசுத் தலைவர் யூனியன் பிரதேசத்தை நிர்வாகம் செய்வது பற்றி குறிப்பிடுகிறது.
- குடியரசுத் தலைவர் தான் நியமிக்கும் துணை நிலை ஆளுநர் (அ) ஆட்சியாளர் (Administrator) மூலம் யூனியன் பிரதேசத்தை நிர்வகிக்கிறார்.

**Art 239 A:**

- யூனியன் பிரதேசங்களில் சட்டமன்றம் (ம), அமைச்சரவை ஏற்படுத்துவது பற்றி குறிப்பிடுகிறது.

**Art 239 AA:**

- டெல்லிக்கு சிறப்பு அந்தஸ்து வழங்குவது பற்றி குறிப்பிடுகிறது.

**Art 239AB:**

- யூனியன் பிரதேசங்களில் கு.தலைவர் மாநில நெருக்கடி (குடியரசுத் தலைவர் ஆட்சி அறிவிப்பது பற்றி குறிப்பிடுகிறது)

**Art 239 B:**

- யூனியன் பிரதேசங்களுக்கு அவசர சட்டம் பிறப்பித்தல் பற்றி குறிப்பிடுகிறது.

**Art 240:**

- யூனியன் பிரதேசங்களை குடியரசுத் தலைவர் ஒழுங்குபடுத்துதல் (அ) யூனியன் பிரதேசங்களுக்கு ஒழுங்கு முறை விதிகள் அறிவித்தல் பற்றி குறிப்பிடுகிறது.

**Art 241:**

- யூனியன் பிரதேசங்களில் உயர்நீதிமன்றம் ஏற்படுத்துவது பற்றி குறிப்பிடுகிறது.

**Art 242:** கூர்க் இனமக்கள்

யூனியன் பிரதேசங்கள் ஏற்படுத்தப்பட்ட ஆண்டு

1. அந்தமான் - 1956
2. டெல்லி –1956
3. லட்சதீவு – 1956
4. தாத்ரா நாகர் வேலி – 1961
5. டாமன், டையூ - 1962
6. புதுச்சேரி – 1962
7. சண்டிகர் - 1966

மா.ந – 12

நகராட்சி – 124

பேரூராட்சி – 528

மாவட்ட ஊராட்சி – 31

ஊராட்சி ஒன்றியங்கள் - 385

ஊராட்சி மன்றங்கள் - 12524

**Part – IX**

பஞ்சாயத்து அமைப்புகள் (ம) பஞ்சாயத்து ராஜ்

(அ) கிராம உள்ளாட்சி அமைப்புகள்

**Art 243 – 243**

- ஊரக (ம) உள்ளாட்சி பகுதிகளில் சுய அரசாங்கம் அமைய ஏற்படுத்தப்பட்டது.
- மக்கள் தங்கள் நலனை தாங்களே நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்று கொள்ள கொண்டு வரப்பட்டது.
- தொலைதூரத்தில் உள்ள மக்களுக்கு சேவை செய்யும் நோக்கிலும் ஏற்படுத்தப்பட்டது.
- 1882 –ல் இந்திய வைசிராய் ரிப்பன் உள்ளாட்சி அமைப்புகளை அறிமுகப்படுத்தும் தீர்மானத்தை கொண்டு வந்தார்.
- இத்தீர்மானம் **தல சுய ஆட்சியின் மகாசாசனம்** (Magnacarta of Local self Govts) என அழைக்கப்படுகிறது.
- ரிப்பன் தல சுய ஆட்சியின் (அ) உள்ளாட்சி அமைப்பின் தந்தை என அழைக்கப்படுகிறார்.

அமைப்பு

பஞ்சாயத்து ராஜ் தொடர்பான குழுக்கள்:

1. **பல்வந்தராய் மேத்தா கமிட்டி:**

- 1957 Jan–ல் சமூக மேம்பாட்டு திட்டம் (ம) தேசிய விரிவாக்க பணிகள் பற்றி ஆராய பல்வந்த்ராய் மேத்தா தலைமையில் குழு அமைக்கப்பட்டது.
- இக்குழு 1957 Nov அறிக்கை அளித்தது, அவ்வறிக்கையில் மக்களாட்சி பரவலாக்கலை (Democratic Decentralisation) பரிந்துரைத்தது.
- மற்ற பரிந்துரைகள்:
- மூன்றடுக்கு பஞ்சாயத்து ராஜ் முறையை பரிந்துரைத்தது. (Three tier System)
  1. கிராம அளவில் - கிராம பஞ்சாயத்து
  2. வட்டார அளவில் - ஊராட்சி ஒன்றியம் (பஞ்சாயத்து சமிதி)
  3. மாவட்ட அளவில் - ஜில்லா பரிஷத் (மாவட்ட ஊராட்சி)
- கிராம பஞ்சாயத்து பிரதிநிதிகள் மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்க வேண்டும்.
- பஞ்சாயத்து சமிதி (ஊராட்சி ஒன்றியம்) (ம) ஜில்லா பரிஷத் பிரதிநிதிகள் மறைமுகமாக தேர்ந்தெடுக்க வேண்டும்.
- பஞ்சாயத்து (ஊராட்சி ஒன்றியம்) சமிதி ஒரு செயல்முறை அமைப்பாக (Executive Body) இருக்க வேண்டும்.
- ஜில்லா பரிஷத் ஆலோசனை (ம) ஒருங்கிணைக்கும் அமைப்பாக இருக்க வேண்டும்.
- மாவட்ட ஆட்சியர் ஜில்லா பரிஷத்தின் தலைவராக இருக்க வேண்டும்.
- பல்வந்த்ராய் மேத்தா குழுவின் அறிக்கை பஞ்சாயத்து அமைப்புகளின் மகாசாசனம் என அடைக்கப்படுகிறது.
- 1958 Jan -ல் தேசிய வளர்ச்சி குழு (NDC) பல்வேந்தராய் மேத்தா குழுவின் பரிந்துரைகளை ஏற்றது.
- 1959 Oct 2–ல் ராஜஸ்தான் மாநிலம் நாகூர் மாவட்டத்தில் சுதந்திர இந்தியாவின் முதல் பஞ்சாயத்து ராஜ் அமைப்பு பிரதமர் ஜவஹர்லால் நேருவால் தொடங்கி வைக்கப்பட்டது.
- அதே ஆண்டு ஆந்திர பிரதேசத்தில் 2-வது ஆக ஏற்படுத்தப்பட்டது.
- 1960 –ல் TN உள்பட பெரும்பாலான மாநிலங்களில் பஞ்சாயத்து ராஜ் அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டது.
- ராஜஸ்தானில் 3 –அடுக்கு முறை பின்பற்றப்பட்டது.
- TN- ல் 2-அடுக்கு பஞ்சாயத்து ராஜ் முறை பின்பற்றப்பட்டது.
- மேற்கு வங்காளத்தில் 4-அடுக்கு முறை பின்பற்றப்பட்டது.
- ராஜஸ்தான் (ம) ஆந்திர பிரதேசத்தில் பஞ்சாயத்து சமிதி அதிக அதிகாரம் பெற்றதாக இருந்தது.
- குஜராத் (ம) மகாராஷ்டிராவில் ஜில்லா பரிஷத் அதிக அதிகாரம் பெற்றதாக இருந்தது.
- 1963 –ல் பஞ்சாயத்து ராஜ் அமைப்புகளின் நிதி நிலையை ஆராய சந்தானம் கமிட்டி அமைக்கப்பட்டது.

**2.அசோக் மேத்தா கமிட்டி:**

- 1977 Dec–ல் ஜனதா அரசாங்கம் பஞ்சாயத்து ராஜ் அமைப்புகளை ஆராய அசோக் மேத்தா குழுவை அமைத்தது.

- இக்குழு 1978 Aug –ல் அளித்த அறிக்கையில் பஞ்சாயத்து ராஜ் அமைப்புகளை வலுப்படுத்த 132 பரிந்துரைகளை வழங்கியது.
- அப்பரிந்துரையில் 2-அடுக்கு பஞ்சாயத்து ராஜ் முறை பரிந்துரைத்தது. (Two tier System)

1. வட்டார அளவில் - மண்டல் பஞ்சாயத்து இது பல கிராமங்களை உள்ளடக்கியது, 15,000 to 20,000 மக்கள் தொகை கொண்டது.
2. மாவட்ட அளவில் - ஜில்லா பரிஷத்
   - இப்பரிந்துரைகளை நடைமுறைபடுத்தும் முன்னரே ஜனதா அரசாங்கம் கவிழ்ந்ததால் இதன் பரிந்துரைகள் நடைமுறைபடுத்தவில்லை.
   - பல்வேந்தராய் மேத்தா, (ம) அசோக் மேத்தா ஆகிய 2 குழுக்களும் பஞ்சாயத்து ராஜ் அமைப்புகள் பற்றி மட்டுமே ஆராய்ந்தனர். நகராட்சி அமைப்புகள் (அ) நகராட்சி உள்ளாட்சி அமைப்புகளையே ஆராயவில்லை.
3. **G.V.K. ராவ் கமிட்டி:**
   - 1985 –ல் நிர்வாக செயலாக்கம் (Administrative Arragements) (ம) வறுமை ஒழிப்பு திட்டங்கள் பற்றி ஆராய G.V.K ராவ் குழு அமைக்கப்பட்டது.
   - இக்குழு 1986 –ல் அளித்த அறிக்கையில் பஞ்சாயத்து ராஜ் அமைப்புகளை பன்முகப்படுத்தி அதன் செயல்பாடுகளை அதிகாரம் பெற்றவர்களிடம் ஒப்படைக்க பரிந்துரைத்தது.
4. **L.M. சிங்வி கமிட்டி:**
   - 1986 –ல் ராஜீவ் காந்தி அரசாங்கம் பஞ்சாயத்து ராஜ் அமைப்புகளுக்கு புத்துயிர் ஊட்ட L.M சிங்வி குழுவை அமைத்தது.
   - இக்குழு 1986 –ல் அளித்த அறிக்கையில் பஞ்சாயத்து அமைப்புகளை மறு சீரமைக்கவும், நியாய பஞ்சாயத்து அமைப்புகளை அமைக்கவும் (கிராம நீதிமன்றங்கள்) பரிந்துரைத்தது.
5. **L.C. ஜெயின் கமிட்டி:**
   - 1996 –ல் TN மாநில திட்டக் குழு துணை தலைவர் L.C. ஜெயின் தலைமையில் தமிழ்நாடு அரசு குழுவை அமைத்தது.
   - இக்குழு 1997 –ல் அளித்த அறிக்கையில் 3-அடுக்கு பஞ்சாயத்து ராஜ் முறையை பின்பற்றி அவ்வமைப்புகளுக்கு அதிகாரம் வழங்க பரிந்துரைத்தது.
6. **கோ.சி.மணி கமிட்டி:**
   - 11.11.1997 –ல் தமிழ்நாடு அரசு உள்ளாட்சி அமைப்புகளை ஆராய உள்ளாட்சி துறை அமைச்சர் கோ.சி. மணி தலைமையில் கமிட்டி அமைத்தது.
   - இக்குழு 10.1.1999 –ல் அளித்த அறிக்கையில் பஞ்சாயத்து அமைப்புகளை சீரமைக்க 1209 பரிந்துரைகளை வழங்கியது.
   - 2007 –ல் TN அரசு மு.க.ஸ்டான்லி குழு அமைத்தது.

73 (ம) 74 – வது சட்டத்திருத்தம்:

- 1992 –ல் நரசிம்மராவ் அரசாங்கம் புதிய பஞ்சாயத்து ராஜ் அமைப்புகள் (ம) நகராட்சி அமைப்புகளை ஏற்படுத்த 73 (ம) 74 –வது சட்டதிருத்த மசோதாக்களை நிறைவேற்றியது.
- இச்சட்ட திருத்தங்கள் Apr 24 1993 –ல் நடைமுறைக்கு வந்தது.

- 73 –வது சட்டத் திருத்ததின் படி 11-வது அட்டவணை (ம) PART IX வரை பஞ்சாயத்து ராஜ் அமைப்புகள் சேர்க்கப்பட்டது.
- 74 –வது சட்டத்திருத்தின் படி 12 வது அட்டவணை (ம) PART IX – A வரை நகராட்சி அமைப்புகள் சேர்க்கப்பட்டது.
- 73 (ம) 74 –வது சட்டத்திருத்தங்கள் ஜம்மு காஷ்மீர், மேகாலயா, மிசோரம், நாகாலாந்து, டெல்லி ஆகியவற்றை கட்டுப்படுத்தாது.
- 73 (ம) 74 –வது சட்டத்திருத்தங்கள் பஞ்சாயத்து ராஜ் (ம) நகராட்சி அமைப்புகள் தொடர்பாக சட்டம் இயற்றும் அதிகாரத்தை மாநில அரசிற்கு (மாநில சட்ட மன்றத்திற்கு) வழங்கியது.

**மூன்றடுக்கு பஞ்சாயத்து ராஜ் அமைப்புகள்:**

1. கிராம பஞ்சாயத்து 500 -
2. ஊராட்சி ஒன்றியம் 5000 - 385
3. மாவட்ட ஊராட்சி 50,000

**கிராம பஞ்சாயத்து:**

- இது கிராம அளவிலான அமைப்பாகும்.
- பஞ்சாயத்து அமைப்புகளின் அடித்தளமாக விளங்குகிறது.
- தலைவர் (ம) உறுப்பினர்கள் - மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுவர்.
- துணை தலைவர் - உறுப்பினர்களால் மறைமுகமாக தேர்ந்தெடுக்கப்படுவார்.
- உறுப்பினர் எண்ணிக்கை (Word Member) 5 to 15
- கிராம பஞ்சாயத்து ஆய்வாளர் - மாவட்ட ஆட்சி தலைவர்
- கிராம பஞ்சாயத்தின் முக்கிய வருவாய் - தொழில் வரி, வீட்டு வரி, குடிநீர் வரி, சுங்க வரி.
- கிராம பஞ்சாயத்தின் குறைந்தபட்ச மக்கள்தொகை 500
- TN-ல் உள்ள கிராம பஞ்சாயத்துகள் 12524
- அதிக கிராம பஞ்சாயத்து கொண்ட மாவட்டம் விழுப்புரம் 1104
- குறைவானது பெரம்பலூர் (22)

**கிராம சபா:**

- கிராம பஞ்சாயத்தின் சட்டபூர்வமான அமைப்பு
- இதன் உறுப்பினர்கள் அக்கிராமத்தில் உள்ள தகுதி உள்ள வாக்காளர்கள் (கிராம மக்கள்)
- இதன் தலைவர் கிராம பஞ்சாயத்து தலைவர்
- இது ஆண்டிற்கு 4 முறை கூட்டப்படும்

1. Jan 26 – குடியரசு தினம்
2. மே 1 – தொழிலாளர் தினம்
3. Aug 15 – சுதந்திர தினம்
4. Oct 2 – காந்தி ஜெயந்தி

- இது நேரடி மக்களாட்சி தத்துவத்தில் செயல்படுத்தப்படுகிறது.

- கிராம சபை, கிராம பஞ்சாயத்தின் பணிகளை சீராய்வு செய்கிறது, கிராம வளர்ச்சி திட்டத்தை தயாரிக்கிறது.
- கிராம வரவு செலவு திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கிறது, கிராம கணக்குகள் (ம) தணிக்கை அறிக்கைகளை ஆராய்கிறது, கிராம திட்ட பயனாளிகளுக்கு ஒப்புதல் அளிக்கிறது.

**ஊராட்சி ஒன்றியம் பஞ்சாயத்து யூனியன்**

- பல கிராம ஊராட்சிகளை ஒன்றிணைத்ததே ஊராட்சி ஒன்றியம்.
- ஊராட்சி ஒன்றியத்தின் பணிகளை மேற்கொள்பவர். வட்டார வளர்ச்சி அலுவலர் (BDO), பணிகளை மேற்கொள்ளும் அலுவலகம் வட்டார வளர்ச்சி அலுவலகம்.
- ஊராட்சி ஒன்றியத்தின் பணிகளை மேற்பார்வையிட்டு கண்காணிப்பது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை (DRDA – District Rural Devt Agency)
- உறுப்பினர்கள் 5000 மக்கள் தொகைக்கு ஒருவர் வீதம் மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுவர்.
- தலைவர் (ம) துணைத் தலைவர்கள் உறுப்பினர்களால் மறைமுகமாக தேர்ந்தெடுக்கப்படுவர்.
- தலைவர் வரி விதிப்பு குழுவின் தலைவராகவும் செயல்படுவார்.
- தலைவர், துணை தலைவர் பதவி காலியாக இருக்கும் போது வட்டார வளர்ச்சி அலுவலர் அலுவல் சார் உறுப்பினராகவும் (Official Member) தலைவராகவும் செயல்படுவார்.
- TN–ல் ஊராட்சி ஒன்றியங்கள் 385
- ஆதிகம் உள்ள மாவட்டம் விழுப்புரம் (22)
- குறைவாக உள்ள மாவட்டம் நீலகிரி (4)

**மாவட்ட ஊராட்சி: District council**

- இதன் அதிகார எல்லை மாவட்டம் முழுவதும் (நகராட்சி அமைப்புகள் தவிர)
- இதன் உறுப்பினர்கள் 50000 மக்கள் தொகைக்கு ஒருவர் வீதம் மக்களால் நேரடியாக தேர்தெடுக்கப்படுவர்.
- தலைவர் (ம) துணை தலைவர் உறுப்பினர்களால் மறைமுகமாக தேர்ந்தெடுக்கப்படுவர்.
- தலைவர் மாவட்ட திட்ட குழுவின் தலைவராகவும் செயல்படுவார்.
- மாவட்ட ஊராட்சி குழு தலைவர்
- மாவட்ட ஊராட்சி குழு மாவட்டத்தின் வளர்ச்சி திட்டத்தை தயாரிக்கிறது.
- மாவட்ட திட்ட குழுவின் உறுப்பினர்கள் - மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்கள், அம்மாவட்டத்தில் உள்ள சட்ட மன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொள்ளலாம் ஆனால் வாக்களிக்க இயலாது.
- மாவட்ட வளர்ச்சி திட்டத்தை தயாரித்து மாநில திட்ட குழுவிற்கு அனுப்பவது மாவட்ட திட்டகுழு
- மாவட்டத்தில் அமைக்கப்படும் குழுக்களில் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் இடம் பெற்றால் அக்குழுவின் தலைவர் மாவட்ட ஊராட்சி குழு தலைவர்.

- மாவட்டத்தின் வளர்ச்சி திட்டங்கள் (ம) பணிகளை நிறைவேற்றபவர் மாவட்ட ஆட்சி தலைவர்.
- TN-ல் மாவட்ட ஊராட்சிகளின் எண்ணிக்கை 31 (Except சென்னை)

**Art 243:**

- பஞ்சாயத்து ராஜ் அமைப்புகளுக்கு வரையறை வழங்குகிறது.

**Art 243 A:**

- கிராம சபை பற்றி குறிப்பிடுகிறது.

**Art 243 B:**

- மூன்றடுக்கு பஞ்சாயத்து முறை (Constitutional of Panthayat) பற்றி குறிப்பிடுகிறது.

**Art 243 C:**

- பஞ்சாயத்து அமைப்புகளின் கட்டமைப்பு (compositon) பற்றி குறிப்பிடுகிறது.

**Art 243 D:**

- பஞ்சாயத்து அமைப்புகளில் இட ஒதுக்கீடு பற்றி குறிப்பிடுகிறது.
- SC, ST - இட ஒதுக்கீடு (ம) பெண்களுக்கு 1/3 (அ) 33% இட ஒதுக்கீடு வழங்கபடுகிறது.

**Art 243 E:**

- பஞ்சாயத்து அமைப்புகளின் பதவி காலம்
- பதவி காலம் 5 ஆண்டுகள்
- பதவி காலம் முடியும் முன்பே மாநில அரசால் கலைக்கபடலாம் (Dissolve) ஆனால் நிரந்தரமாக நீக்க (Abolish) இயலாது.
- கலைக்கப்பட்ட 6 மாதத்திற்குள் தேர்தல் நடத்த வேண்டும்.

**Art 243 F:**

- பஞ்சாயத்து அமைப்புகளின் உறுப்பினர் தகுதி இழப்பு பற்றி குறிப்பிடுகிறது.
- உறுப்பினர்களின் குறைந்தபட்ச வயது 21

**Art 243 G:**

- பஞ்சாயத்துராஜ் அமைப்புகளின் 29 வகையான அதிகாரங்கள் (ம) பொறுப்புகள் பற்றி குறிப்பிடுகிறது.

**Art 243 H:**

- பஞ்சாயத்து அமைப்புகளின் வரி விதிப்பு அதிகாரம்.

**Art 243 I:**

- பஞ்சாயத்து அமைப்புகள் நிதி நிலையை புனரமைக்க மாநில நிதி ஆணையம் ஏற்படுத்துவது பற்றி குறிப்பிடுகிறது.
- TN மாநில நிதி ஆணையம் 1994 –ல் ஏற்படுத்தப்பட்டது.

**Art 243 J:**

- பஞ்சாயத்து அமைப்புகளின் கணக்கு தணிக்கை பற்றி குறிப்பிடுகிறது.

**Art 243 K:**

- பஞ்சாயத்து அமைப்புகளின் தேர்தல் பற்றி குறிப்பிடுகிறது.
- தேர்தல் நடத்துவது மாநில தேர்தல் ஆணையம்
- மாநில தேர்தல் ஆணையரை நியமிப்பவர் ஆளுநர்.
- அவரது பதவிக்காலத்தை தீர்மானிப்பவர் ஆளுநர்

**Art 243 L:**

- யூனியன் பிரதேசங்களில் பஞ்சாயத்து அமைப்புகள் ஏற்படுத்துவது பற்றி குறிப்பிடுகிறது.

**Art 243 O:**

- பஞ்சாயத்து அமைப்புகளின் தேர்தல் தொடர்பான நடவடிக்கைகளில் நீதிமன்றம் தலையிட இயலாது.

## PART IX – A

### நகராட்சி அமைப்புகள் (அ) நகர உள்ளாட்சி அமைப்புகள்

### Art 243 P – 243 ZG

- 74 –வது சட்டத்திருத்தம் 1992 –ன் மூன்றடுக்கு நகராட்சி அமைப்புகள் ஏற்படுத்தபட்டது.
  1. பேரூராட்சி 10000 – 528
  2. நகராட்சி 100000 – 124
  3. மாநகராட்சி (Corportion) 1000000 – 12
- இவை தவிர மற்ற சில நகராட்சி அமைப்புகளும் செயல்படுகின்றன.
- நகரியம் (Townshi), ராணுவ குடியிருப்பு வாரியம் (Contronent Boart), குறிப்பிட்ட பகுதி குழுக்கள் (Notified Area Committiees) நகர எல்லை பகுதி குழுக்கள் (Town Area committees),துறைமுக பொறுப்பு கழகம் (Port trust), சிறப்பு பயன்பாட்டு முகமை (Special Purpose Agency)

1. **பேரூராட்சி (Town Panchayat)**
   - குறைந்தபட்சம் மக்கள் தொகை 10,000
   - இது பேரூராட்சிகள் இயக்குனர் கட்டுபாட்டில் இயங்குகிறது.
   - இதன் நிர்வாகத்தை மேற்கொள்பவர் செயல் அலுவலர் (E.O Executive Officier)
   - துலைவர் (ம) உறுப்பினர்கள் மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கபடுவர்.

- துணைத் தலைவர் உறுப்பினர்களால் மறைமுகமாக தேர்ந்தெடுக்கபடுவர்.
- முக்கிய வருவாய் - சொத்து வரி, தொழில் வரி, குடிநீர் வரி
- TN-ல் 528 பேரூராட்சிகள் உள்ளது.

2. **நகராட்சி (Municipality)**
   - குறைந்த பட்சம் மக்கள் தொகை 1,00,000
   - நகராட்சி சட்டம் மூலம் எற்படுத்தப்படும்
   - நகராட்சி ஏற்படுத்த அதிகாரம் பெற்றது மாநில அரசு
   - நகராட்சி நிர்வாக மேற்கொள்பவர் நகராட்சி ஆணையர் (Munipal Commissionr)
   - தலைவர், உறுப்பினர்கள் - மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுவார்.
   - துணைத் தலைவர் உறப்பினர்களால் முறைமுகமாக தேர்ந்தெடுக்கப்படுவார்.
   - முக்கிய வருவாய் - சொத்து வரி தொழில் வரி, குடிநீர் வரி. கேளிக்கை வரி
   - TN-ல் உள்ள நகராட்சிகள் (School 1Book-125)146+125)

மாநகராட்சி: Corporation

- குறைந்தபட்சம் மக்கள்தொகை 10 லட்சம்
- இந்தியாவின் முதல் நகராட்சி (ம) மாநகராட்சி சென்னை (1687 -88)
- 1726 கல்கத்தா, மும்பை
- மாநில அரசு இயற்றும் மாநகராட்சி சட்டம் மூலம் ஏற்படுத்தப்படும்.
- மிகப் பெரிய மாநகராட்சிகள் (Metropolitian City) பெரும் மாநகர பகுதி என அழைக்கப்படுகிறது.
- மாநகராட்சியின் தலைவர் மேயர்
- மாநகராட்சியின் தந்தை மேயர்
- மாநகராட்சியின் முதல் குடிமகன் மேயர்
- மேயர் (ம) உறுப்பினர்கள் மக்களால் மறைமுகமாக தேர்ந்தெடுக்கப்படுவர்.
- து.மேயர் - உறுப்பினர்களால் மறைமுகமாக தேர்ந்தெடுக்கபடுவார்.
- மாநகராட்சி நிர்வாக பணிகளை மேற்கொள்வர் மாநகராட்சி ஆணையர் (corporation commissioner)
- முக்கிய வருவாய் சொத்து வரி, குடிநீர் வரி. தோழில் வரி, விளம்பரவ ரி, கேளிக்கை வரி.
- TN–ல் உள்ள மாநகராட்சிகள் 12

**Art 243 P:**

- நகராட்சி அமைப்புகளுக்கு வரையறை வழங்குகிறது.

**Art 243 Q:**

- நகராட்சி அமைப்புகளின் மூன்றடுக்கு முறை பற்றி குறிப்பிடுகிறது.

**Art 243 R:**

- நகராட்சி அமைப்புகளின் கட்டமைப்புகள் பற்றி குறிப்பிடுகிறது.

**Art 243 S:**

- நகராட்சி அமைப்புகளில் வார்டு கமிட்டி ஏற்படுத்துவது பற்றி குறிப்பிடுகிறது.

**Art 243 T:**

- நகராட்சி அமைப்புகளில் இட ஒதுக்கீடு பற்றி குறிப்பிடுகிறது.
- SC, ST இட ஒதுக்கீடு (ம) பெண்களுக்கு 1/3 பங்கு (அ) 33% இட ஒதுக்கீடு வழங்கப்படுகிறது.

**Art 243 U:**

- நகராட்சி அமைப்புகளின் பதவி காலம்
- பதவி காலம் முடியும் முன்பே மாநில அரசால் கலைக்கபடலாம். (Dissolve) ஆனால் நிரந்தரமாக நீக்க இயலாது (Abolish)
- கலைக்கப்பட்ட 6 மாதத்திற்குள் தேர்தல் நடத்த வேண்டும்.

**Art 243 V:**

- நகராட்சி அமைப்புகளின் உறுப்பினர் தகுதியிழப்பு பற்றி குறிப்பிடுகிறது.
- குறைந்தபட்ச வயது 21

**Art 243 W:**

- நகராட்சி அமைப்புகளின் 18 வகையான அதிகாரங்கள் பொறுப்புகள் பற்றி குறிப்பிடுகிறது.

**Art 243 X:**

- நகராட்சி அமைப்புகளின் வரி விதிக்கு அதிகாரம் பற்றி குறிப்பிடுகிறது.

**Art 243 Y:**

- நகராட்சி அமைப்புகளின் நிதி நிலை புனரமைக்க மாநில நிதி ஆணையம் ஏற்படுத்துவது பற்றி குறிப்பிடுகிறது.

**Art 243 Z:**

- நகராட்சி அமைப்புகளில் கணக்கு (ம) தணிக்கை பற்றி குறிப்பிடுகிறது.

**Art 243 ZA:**

- நகராட்சி அமைப்புகளுக்கு தேர்தல் பற்றி குறிப்பிடுகிறது
- தேர்தலை நடத்துவது மாநில தேர்தல் ஆணையம்

**Art 243 ZB:**

- நகராட்சி அமைப்புகளை யூனியன் பிரதேசத்தில் அமைப்பது பற்றி குறிப்பிடுகிறது.

**Art 243 ZD:**

- மாவட்ட திட்ட குழு பற்றி குறிப்பிடுகிறது

**Art 243 ZE:**

- பெரும் மாநகர திட்ட குழு பற்றி குறிப்பிடுகிறது.

**Art 243 ZF:**

- நகராட்சி அமைப்புகளின் சில சட்டங்கள் பற்றி குறிப்பிடுகிறது.

**Art 243 ZG:**

- நகராட்சி அமைப்புகளின் தேர்தல் நடவடிக்கைகளில் நீதிமன்றம் தலையிட முடியாது என குறிப்பிடுகிறது.

## PART – IX – B

## The Co-Operative society

**கூட்டுறவு சங்கங்கள்**

**Art 243ZH – 243 ZT**

- 2011 97-வது சட்டத்திருத்ததின்படி Part IX – B (Art 243ZH – 243 ZT) புதிதாக அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டது.

## PART – X

## Scheduled & Tribal areas

**SC, ST பகுதிகள்**

**Art 244 – Art 244 A**

**Art 244:**

- SC, ST பகுதிகளை நிர்வாகம் செய்வது பற்றி குறிப்பிடுகிறது.

## PART – XI

**மத்திய மாநில உறவுகள்**

## Relations between Union & the States

**Art 245 – 263**

**PARRT – XII**

**நிதி, சொத்துகள், ஒப்பந்தங்கள்**

**Financ, Property, contracts & Suets**

**Art 264 – 300A**

PART – XIII

வியாபாரம், வணிகம், மற்றும் உள் பரிமாற்றம் இந்திய எல்லைக்கு மேற்கொள்ளுதல்

Trade, commerce and Intercourse within Territory of India

Art 301 – 307

PART – XIV

மத்திய, மாநில அரசு பணிகள்

Services under Union& the states

Art 308 – 323

PART – XIV

Tribunals

தீர்ப்பாயங்கள்

Art 323A – 323 B

- 1976 42-வது சட்டதிருத்ததின் PART XIV – A (Art 323A – 323 B) அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டது.
  Part X – 1992 -73
  Part – IV A – 1976 – 42
  Part – IX A – 1992 – 74
  Part – IX B – 2011 – 97
  Part – XIV A – 1976 – 42

**நீக்கியது:**

PART VII– 1956 – 7

22+4 = 26-1 = 25

**அரசியலமைப்பு சட்டத்திருத்தங்கள்:**

- அரசியலமைப்பு சட்டத்திருத்தம் பற்றி இந்திய அரசியலமைப்பின் PART XX– ல் Art 368 –ல் குறிப்பிடப்பட்டுள்ளது.
- இந்திய அரசியலமைப்பு சட்டம் திருத்தப்படும் அதிகாரம் பாராளுமன்றத்திடம் உள்ளது மேலும் சட்டத்திருத்தம் மேற்கொள்வதற்கான நடைமுறைகள் பற்றியும் Art 368 –ல் குறிப்பிட்டுள்ளது.
- Art 368 இதுவரை 2 முறை திருத்தப்பட்டு உள்ளது.

1. 1971 24-வது சட்டத்திருத்தத்தின் படி Art 368-ல் "அரசியலமைப்பை தித்துவதற்கான நடைமுறைகள்" என்ற வாசகத்திற்கு பதிலாக "அரசியலமைப்பை திருத்துவதற்கான பாராளுமன்றத்தின் அதிகாரம் (ம) அதற்கான நடைமுறைகள்" என மாற்றப்பட்டது.
2. 1976 42 வது சட்டத்திருத்ததின் படி Art 368ல் "5 வாசகங்கள்" சேர்க்கப்பட்டது.
   - I. அரசியலமைப்பில் எதையேனும் சேர்த்தல், மாற்றுதல், நீக்குதல்
   - II. திருத்தம் செய்யும் நடைமுறைகள்
   - III. Art 368-ன் படி மேற்கொள்ளும் சட்டத்திருத்தத்தை எதிர்த்து எக்காரணம் கொண்டும் நீதி மன்றத்தை அணுக இயலாது.
   - IV. Art 368-ன் படி மேற்கொள்ளப்படும் சட்டதிருத்ததிற்கு Art 13 பொருந்தாது.
   - V. Art 368-ன் படி மேற்கொள்ளும் நாடாளுமன்றத்தின் அதிகாரத்தின் மீது எந்த வித அதிகாரமும் செலுத்த இயலாது.
   - VI. இந்திய அரசியலமைப்பு சட்டத்தை 3 முறைகளில் திருத்தலாம்.
   1. சாதாரண பெரும்பாண்மை (Simple Majority)
   2. சிறப்பு பெரும்பாண்மை (Special Majority)
   3. சிறப்பு பெரும்பான்மை (ம) பாதிக்கு மேற்பட்ட மாநில சட்டமன்றங்களின் ஒப்புதல் மூலம் (Special Mjority & the Ratification of the State legislatures)

**1. சாதாரண பெரும்பாண்மை (Part I, II)**

- நாடாளுமன்றத்தில் ½ (or) 50% மேல் ஆதரவுடன் திருத்தம் மேற்கொள்ளும் முறையாகும்.

**Eg:**

1. புதிய மாநிலங்கள் உருவாக்குதல், எல்லை, பெயர், பரப்பளவை மாற்றம் செய்தல்
2. Art 169-ன் படி மாநில சட்ட மேலவையை உருவாக்குதல் (அ) நீக்குதல்
3. Art 239 A-ன் படி யூனியன் பிரதேசங்களில் சட்டமன்றம் ஏற்படுத்துதல்.
4. அரசியலமைப்பின் 2வது, 5வது (ம) 6-வது அட்டவணைகளை திருத்தம் செய்தல்.
5. பாராளுமன்றத்தின் கோரம் (அ) குறைகள் (Quorum) தொடர்பான திருத்தம்.
6. பாராளுமன்ற உறப்பினர்களின் சம்பளம், படிகளை மாற்றி அமைத்தல்.
7. பாராளுமன்றத்தின் விதிகள் (ம) நடவடிக்கைகளை திருத்தம் செய்தல்
8. பாராளுமன்றத்தின் உரிமைகள் (ம) குழுக்கள் தொடர்பான திருத்தங்கள்
9. குடியுரிமை (Part II) தொடர்பான திருத்தங்கள் பாராளுமன்றம் (ம) சட்டமன்ற தேர்தல்கள் தொடர்பான திருத்தங்கள்.
10. ஆட்சிமொழி தொடர்பான திருத்தங்கள்
11. யூனியன் பிரதேசங்கள் தொடர்பான திருத்தங்கள்.
12. பாராளுமன்ற (ம) சட்டமன்ற தொகுதிகள் நீக்கம் (ம) மாற்றி அமைத்தல் தொடர்பான திருத்தங்கள்.

2. **சிறப்பு பெரும்பான்மை மூலம்:**

   - நாடாளுமன்றத்தில் 2/3 பங்கு பெரும்பான்மை ஆதரவுடன் திருத்தம் மேற்கொள்ளும் முறையாகும்.
   - Eg:

1. அடிப்படை உரிமைகள் (Part – III) தொடர்பான திருத்தங்கள்
2. அரசுக்கு வழிகாட்டும் நெறிமுறை கோட்பாடுகள் (Part IV) தொடர்பான திருத்தங்கள்
3. ஒன்றாவது வகை (ம) 3வது வகை இல்லாத மற்ற அனைத்து திருத்தங்கள்.

**3.சிறப்பு பெரும்பான்மை (ம) பாதிக்கு மேற்பட்ட மாநில சட்டமன்றங்களின் ஒப்புதல் மூலம்:**

**Eg:**

- குடியரசு தலைவர் தேர்தல் (ம) தேர்ந்தெடுக்கும் முறைகள் (Art 54,55)
- உச்சநீதிமன்றம் (ம) உயர்நீதிமன்றம் தொடர்பான திருத்தங்கள்
- மத்திய, மாநில அரசுகளுக்கிடையே சட்டமன்ற (அ) சட்டமுறை உறவுகள் தொடர்பான திருத்தங்கள்
- 7 வது அட்டவணை (பட்டியல்)
- பாராளுமன்றத்திற்கு ஒதுக்கப்பட்ட இடங்கள் தொடர்பான திருத்தங்கள்
- மத்திய அரசு (ம) மாநில அரசுகளின் நிர்வாக அதிகார எல்லை தொடர்பான திருத்தங்கள்
- அரசியலமைப்பை திருத்துவதற்கான பாராளுமன்றத்தின் அதிகாரம் (ம) அதற்கான நடைமுறைகள் (Art 368)

**சட்டத்திருத்தங்கள்:**

- இந்திய அரசியலமைப்பு சட்டம் இதுவரை 120 முறை திருத்தப்பட்டுள்ளது, 10 சட்டத்திருத்தங்கள் நடைமுறைக்கு வந்துள்ளது.

**1-வது சட்டத்திருத்தம் - 1951**

- 9-வது அட்டவணை அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டது.

**5-வது சட்டத்திருத்தம் -1955**

- Art 3-ல் மாநிலங்கள், தங்களது எல்லைகள், பெயர், பரப்பளவு ஆகியவற்றை மாற்ற தமது கருத்துக்களை குறிப்பிட்ட காலத்திற்குள் குடியரசு தலைவரிடம் தெரிவிக்க வேண்டும். என அறிவிக்க குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டது.

**6-வது சட்டத்திருத்தம் - 1956**

- மாநில அரசின் விரிவிதிக்கும் அதிகாரம் கட்டுபடுத்தப்பட்டது.
- 7-வது அட்டவணையில் மத்திய பட்டியலில் சில குறைகள் சேர்க்கப்பட்டது.

**7-வது சட்டத்திருத்தம் - 1956**

- இந்தியாவில் ஏற்கனவே இருந்த Part A, Part –B, Part-C, Part – D மாநிலங்கள் நீக்கப்பட்டு இந்திய மொழிவாரியாக 14 மாநிலங்கள், 6 யூனியன் பிரதேசங்களாக பிரிக்கப்பட்டது.
- அரசியலமைப்பின் Part VII Art 238 நீக்கப்பட்டது.
- 2 (or) அதற்கு மேற்ப்பட்ட மாநிலங்களுக்கும் பொதுவாக ஒரே நபர் ஆளுநராக நியமிப்பதற்கு வழி செய்யப்பட்டது.
- உயர்நீதி மன்றத்தில் கூடுதல் நீதிபதிகள் (ம) தற்காலிக நீதிபதிகள் நியமிப்பதற்கு வழி செய்யப்பட்டது.
- யூனியன் பிரதேசங்களும், ராஜ்யசபைக்கும் உறுப்பினர்களை தேர்ந்தெடுக்க வழி செய்யப்பட்டது.

**9-வது சட்டத்திருத்தம் 1960:**

- 1958 இந்திய பாகிஸ்தான் ஒப்பந்தத்தின் படி மேற்கு வங்காளத்தின் சில பகுதிகளை பாகிஸ்தானிற்கு ஒப்படைத்தல் தொடர்பான உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பின் படி 1வது அட்டவணை திருத்தப்பட்டது.

**10-வது சட்டத்திருத்தம்:-1961**

- தாத்ரா நாகர்வெலி யூனியன் பிரதேசமாக மாற்றப்பட்டது.

**11-வது சட்டத்திருத்தம்: 1961**

- குடியரசுத் தலைவர் (ம) துணை குடியரசுத் தலைவர் தேர்தல் முறைகளில் திருத்தம் செய்யப்பட்டது.

**12-வது சட்டத்திருத்தம்: 1962**

- கோவா, டாமன், டையூ யூனியன் பிரதேசமாக மாற்றப்பட்டது.

**13-வது சட்டத்திருத்தம்: 1962**

- Art 371(A) –வின் படி நாகலாந்திற்கு சிறப்புரிமை வழங்கப்பட்டது.

**14-வது சட்டத்திருத்தம்: 1962**

- பாண்டிச்சேரி யூனியன் பிரதேசமாக அறிவிக்கப்பட்டது.
- பாண்டிச்சேரியில் சட்டமன்றம் (சட்டபேரவை) ஏற்படுத்த வழி செய்யப்பட்டது (நடைமுறை 1963)

**15-வது சட்டத்திருத்தம்: 1963**

- உயர்நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வு வயது 60 to 62 ஆக உயர்த்தப்பட்டது.
- ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதிகளை தற்காலிக நீதிபதிகளாக நியமிக்க (2 வருடங்கள் மிகாமல்) வழி செய்யப்பட்டது.

**16-வது சட்டத்திருத்தம்: 1963**

- Art 19-ல் பேச்சு (ம) கருத்து உரிமையில் இந்தியாவின் இறையான்மை (ம) ஒருமைபாட்டை பாதிக்கும் வகையில் பேச (ம) கருத்து கூற தடைவிதிக்கப்பட்டது.
- மேலும் இந்தியாவில் இருந்து பிரிந்து செல்வது பற்றி பேச கருத்து கூற தடை செய்யப்பட்டது.
- பதவி பிரமாண உறுதிமொழிகளில் இந்தியாவின் இறையாண்மை (ம) ஒருமைபாட்டை பாதுகாத்தல் என்ற வார்த்தை சேர்க்கப்பட்டது.

**18-வது சட்டத்திருத்தம்: 1966**

- புதிய மாநிலங்கள் உருவாக்குதல் என்பது மாநிலங்கள் (அ) யூனியன் பிரதேசங்களை உருவாக்குதலை குறிக்கும் என அறிவிக்கப்பட்டது.
- மாநிலங்களை இணைத்தல் (அ) புதிய மாநிலம் (ம) யூனியன் பிரதேசத்தை உருவாக்குவதற்கு பாராளுமன்றத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டது.

**19-வது சட்டத்திருத்தம்: 1966**

- Art 324-ல் தேர்தல் தீர்ப்பாயங்கள் நீக்கப்பட்டது.
- சட்டமன்ற நாடாளுமன்ற தேர்தல் தொடர்பான பிரச்சனைகளை தீர்க்க உயர்நீதிமன்றதிற்கு அதிகாரம் வழங்கப்பட்டது.

**21-வது சட்டத்திருத்தம்:**

- 8-வது அட்டவணையில் சிந்தி மொழி 15-வது மொழியாக சேர்க்கப்பட்டது.

**22-வது சட்டத்திருத்தம்: 1969**

- அஸ்ஸாமில் இருந்து மேகாலயா பிரிக்கப்பட்டு தன்னாட்சி மாநில அந்தஸ்து வழங்கப்பட்டது.

**24-வது சட்டத்திருத்தம்: 1971**

- Art 368-ல் அரசியலமைப்பை திருத்துவதற்கான நடைமுறைகள் என்ற வார்த்தைக்கு பதிலாக அரசியலமைப்பை திருத்தும் பாராளுமன்றத்தின் அதிகாரம் (ம) அதற்கான நடைமுறைகள் என்ற வார்த்தை சேர்க்கப்பட்டது.
- பாராளுமன்றம் அடிப்படை உரிமைகள் உட்பட அரசியலமைப்பின் எந்த பகுதியையும் திருத்த அதிகாரம் வழங்கப்பட்டது.
- அரசியலமைப்பு சட்டத்திருத்த மசோதாக்களை குடியரசு தலைவர் திருப்பி அனுப்ப இயலாது கட்டாயம் ஒப்புதல் அளிக்க வேண்டும் என திருத்தப்பட்டது.

**26-வது சட்டத்திருத்தம்: 1971**

- மன்னர் மானிய முறை ஒழிக்கப்பட்டது.

**27-வது சட்டத்திருத்தம்: 1971**

- மணிப்பூர் மாநிலத்தில் சட்டப்பேரவை (ம) அமைச்சரவை ஏற்படுத்த வழி செய்யப்பட்டது.

**28-வது சட்டத்திருத்தம்: 1972**

- ICS அலுவலர்களின் பணிகட்டுப்பாடு விதிகளில் விடுமுறை (ம) ஓய்வூதியங்களில் வழங்கப்பட்ட சிறப்புரிமை நீக்கப்பட்டது.

**30-வது சட்டத்திருத்தம்: 1972**

- உச்சநிதிமன்றத்தின் மேல் முறையீட்டு அதிகாரம் வரையறுக்கப்பட்டது.
- உயர் நீதிமன்றம் சான்றளித்தால் மட்டுமே மேல் முறையீடு செய்ய இயலும் என்ற விதி சேர்க்கப்பட்டது.

**31-வது சட்டத்திருத்தம்:**

- மக்களவை உறுப்பினர் எண்ணிக்கை 525 to 545 ஆக உயர்த்தப்பட்டது.
- யூனியன் பிரதேசங்களின் மக்களவைக்கான இடங்களில் அதிகபட்ச எண்ணிக்கை 25யிலிருந்து 20 ஆக குறைக்கப்பட்டது.

**32-வது சட்டத்திருத்தம்: 1973**

- Art 371(D)ன் படி ஆந்திர பிரதேசத்திற்கு (தெலுங்கானா மண்டத்திற்கு) சிறப்புரிமையும்,Art 371 (E)–ன் படி ஆந்திரபிரதேசத்தில் மத்திய பல்கலைகழகம் அமைக்கவும் சிறப்புரிமை வழங்கப்பட்டது.

**33-வது சட்டத்திருத்தம்: 1974**

- பாராளுமன்றம் (ம) சட்டமன்ற உறுப்பினர்கள் பதவி விலகலை சபாநாயகர் ஏற்றுக்கொண்டால் மட்டுமே பதவி விலகலாக கருதப்படும் என மாற்றப்பட்டது.

**35-வது சட்டத்திருத்தம்: 1974**

- சிக்கிம் இந்தியாவுடன் இணைக்கப்பட்டு இணை மாநில அந்தஸ்து வழங்கப்பட்டது.

**36-வது சட்டத்திருத்தம்: 1975**

- சிக்கிம் இந்தியாவின் 22-வது மாநிலமாக அறிவிக்கப்பட்டது.

**38-வது சட்டத்திருத்தம்: 1975**

- Art 352-ன் படி குடியரசுத் தலைவர் அறிவிக்கும் நீதி எல்லைக்கு அப்பாற்பட்டது என அறிவிக்கப்பட்டது (Out of Jusdiction) (44-வது சட்டத்திருத்ததில் நீதி எல்லைக்கு உட்பட்டது)
- Art 123 (ம) 213-ன் படி குடியரசுத் தலைவர்(ம) ஆளுநர் பிறப்பிக்கும் அவசர சட்டம் நீதி எல்லைக்கு அப்பாற்பட்டது என அறிவிக்கப்பட்டது. (44-வது திருத்ததில் நீதி எல்லைக்கு உட்பட்டது)

- கு.தலைவர் Art 352-ன் படி தேசிய நெருக்கடியை வெவ்வேறு காரணங்களுக்காகவும் பிறப்பிக்க அதிகாரம் வழங்கப்பட்டது.

**39-வது சட்டத்திருத்தம்: 1975**

- குடியரசுத் தலைவர், துணை குடியரசுத் தலைவர், பிரதமர் (ம) சபாநாயகர் ஆகியோரின் தேர்தல் தொடர்பான சட்டங்கள் இயற்ற நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டது.

**40-வது சட்டத்திருத்தம்: 1976**

- கடல், கண்டத்திட்டு, தனிப்பொருளாதார மண்டலங்கள்,(EEZ) Exlusive Econmic Zones, சுரங்கங்கள், கனிமங்கள் (ம) மதிப்பான பொருட்கள் இந்திய யூனியனுக்கு சொந்தமானது என அறிவிக்கப்பட்டது.

**41-வது சட்டத்திருத்தம்: 1976**

- மாநில அரசு பணியாளர் தேர்வாணையம் (SPSC) (ம) கூட்டு (அ) இணை மாநில அரசு பணியாளர் தேர்வாணையம் (JSPSC)ஆகியவற்றின் தலைவர் (ம) உறுப்பினர்களின் பதவிகாலம் (ஓய்வு வயது) 60 to 62 ஆக உயர்த்தப்பட்டது.

**42-வது சட்டத்திருத்தம்: 1976**

- இச்சட்டத்திருத்தம் **குட்டி அரசியலமைப்பு** (Little Constitation (or) Mini Constitution) என அழைக்கப்படுகிறது.
- முகவுரையில் சமதர்மம், சமய சார்பற்ற, ஒருமைப்பாடு ஆகிய வார்த்தைகள் சேர்க்கப்பட்டது.
- Part IV A (Art 51A)"அடிப்படை கடமைகள்" அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டது.
- Part XIV A (Art 323A – 323 B) Tribunals தீர்ப்பாயங்கள் அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டது.
- குடியரசுத் தலைவர் மத்திய அமைச்சரவையின் ஆலோசனைக்கு கட்டுபட்டவர் என அழைக்கப்படுகிறது.
- ஆளுநர் மாநில அமைச்சரவையின் ஆலோசனைக்கு கட்டுபட்டவர் என அழைக்கப்படுகிறது.
- Art 83-ல் மக்களவையின் பதவி காலமும்,Art 172-ல் சட்டப்பேரவையின் பதவி காலமும் 5 to 6 ஆண்டுகள் உயர்த்தப்பட்டது.
- மக்களவை (ம) சட்டப்பேரவை உறுப்பினர்களின் எண்ணிக்கை நிர்ணயம் செய்ய 1971 மக்கள் தொகையை 2001 வரை பயன்படுத்த அனுமதிக்கப்பட்டது.
- அடிப்படை உரிமைகள் (ம) அரசுக்கு வழிகாட்டும் நெறிமுறை கோட்பாடுகளுக்கம் இடையே முரண்பாடு ஏற்பட்டால் DPSP கோட்பாடுகளே முன்னுரிமை பெற்றது.
- அரசியலமைப்பை திருத்தும் பாராளுமன்றத்தில் அதிகாரம் உறுதி செய்யப்பட்டது.
- DPSP கோட்பாடுகளில் Art 39A, 43A, 48A ஆகியவை சேர்க்கப்பட்டது.
- தேசிய நெருக்கடியை இந்திய யூனியனின் எந்த பகுதிக்கும் அறிவிக்க குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டது.
- Art 356-ன் படி மாநில நெருக்கடியை ஒரே முறையில் அறிவிக்கும் கால அளவு 6 மாதத்தில் இருந்து 1 ஆண்டாக உயர்த்தப்பட்டது.

- 7 வது அட்டவணையில் 1.கல்வி, 2.காடுகள், 3.வனவிலங்கு பாதுகாப்பு, 4.எடை அளவிடுகள், 5. நீதி நிர்வாகம் ஆகிய 5 துறைகள் மாநில பட்டியலில் இருந்து பொது பட்டியலுக்கு மாற்றப்பட்டது.
- Art 312-ல் அகில இந்திய பணியும் சேர்க்கப்பட்டது.
- நீதிமன்றங்களின் நீதி புனராய்வு அதிகாரம் வரையறுக்கப்பட்டது.
- சட்டப்பேரவை (ம) மக்களவை கூட்டங்களுக்கு Quorum தேவையில்லை என அறிவிக்கப்பட்டது.
- Art 139A புதியதாக சேர்க்கப்பட்டு உச்சநீதிமன்றம் உயர்நீதிமன்றத்தில் உள்ள வழக்குகளை உச்சநீதிமன்றத்திற்கு மாற்ற அதிகாரம் வழங்கப்பட்டது.
- Art 2A சேர்க்கப்பட்டு சட்டம் ஒழுங்கை பாதுகாக்க மத்திய அரசு மாநிலங்களுக்கு ஆயுத படைகளை உதவிக்கு அனுப்ப வகை செய்யப்பட்டது.
- Art 32A (ம) Art 226 A-யில் ஆட் கொணர் நீதிபேராணையில் சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டது.

**43 வது சட்டத்திருத்தம்: 1977**

- 42 வது சட்டத்திருத்ததில் சேர்க்கப்பட்ட Art 32A, 131A, 144A, 226A, 228A ஆகியவை நீக்கப்பட்டது.

**44-வது சட்டத் திருத்தம்:-1978**

- Art 19(1) கு (ம) Art 31-லிருந்து சொத்துரிமை அடிப்படை உரிமையிலிருந்து நீக்கப்பட்டு Art 300A –ல் சொத்துரிமை சட்ட உரிமையாக சேர்க்கப்பட்டது.
- Art 83-ன் படி மக்களவையின் பதவிகாலம் (ம) Art 172-ன் படி சட்டப்பேரவையின் பதவிகாலம் 6 to 5 ஆண்டுகளாக குறைக்கப்பட்டது.
- Art 22-ல் ஆலோசனை வாரியத்தின் பரிந்துரையின்றி எவரையும் 2 மாதங்களுக்கு மேல் தடுப்பு காவலில் வைக்க தடை செய்யப்பட்டது.
